
அகத்தீயர் மாமுனிவர் அருளிய இலக்க சௌமிய சாகரம்

இரண்டாம் பாகம்

9 முதல் 10வது காண்டங்கள்



தாமரை நூலகம், சென்னை - 26.

அகஸ்தியர் இலக்க செளமிய சாகரம்

இரண்டாம் பாகம்

(9 வது மற்றும் 10 வது காண்டங்கள்)

விளக்கவுரை எழுதியவர் : ஹக்கீம் பா.மு. அப்துல்லா சாயுபு அவர்கள்

பதிப்பாசிரியர்
ஆர். சி. மோகன்

தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 600 026
தொலைபேசி எண் - 044 - 23620249

வெளியீடு எண் : 308
முதல் பதிப்பு : 1909
இரண்டாம் பதிப்பு : மார்ச் 2012
மூன்றாம் பதிப்பு : மார்ச் 2019

நூலைப்பற்றி

நூலின் பெயர் : இலக்க சௌமிய சாகரம்
இரண்டாம் பாகம்
பதிப்பாசிரியர் : ஆர். சி. மோகன்
வெளியிட்டோர் : தாமரை நூலகம்
7, என். ஜி. ஓ. காலனி
வடபழனி, சென்னை - 26.
பதிப்பு ஆண்டு : மார்ச் 2019
உரிமை : பதிப்பகத்திற்கு
நூல் வடிவம் : டெமி
அச்சுத்தாள் : 14.4 வெள்ளைத்தாள்
எழுத்துக்கள் : 11 புள்ளி
மொத்த பக்கங்கள் : 147
பிரதிகள் : 1200
நூல் விலை : ரூ.70/-
அச்சிட்டோர் : கிரியேட்டிவ் ஆப்செட்
நுங்கம்பாக்கம், சென்னை

கடவுள் துணை

இலக்க சௌமிய சாகரம்

தேர்ந்தெடுக்கப்பட்ட செய்யுட்களும் தெளிபொருள் விளக்கவுரையும்

9-வது, 10-வது காண்டங்கள்

இஃது
யுநானி வைத்திய
தாருட்டியவிருத்திபோதினி முதலிய
வைத்திய சாஸ்திர கிரந்தகர்த்தாவாகிய

ஹக்கீம்

பா. முகம்மது அப்துல்லாசாஹிப்
அவர்களால் முஸ்லிம் அபிமானி அச்சியந்திர சாலையில்
பதிப்பிக்கப்பட்டது

FIRST EDITION

1909

முகவுரை

கனவான்களே!

இந்த இலக்கசௌமிய சாகரமென்னும் நூலானது மிக்க உயர்ச்சி பெற்றதென்பது உலகறிந்த விஷயம் எனினும் இது பரிபாஷைக் கிரமமாகவும், சித்திரகவி முறைப்படியும் கடின கவிகளாலமையப் பெற்றிருந்ததை முன்னிட்டு முறையாக வழிவழியே பாடங்கேட்டவர்க் கன்றி மற்றையர்க்குப் பிரயோசனப்படாமலிருந்து வந்தது. இத்தகைய இதை நாம் பன்முறை பலரிடத்தும் பாடங்கேட்டிருந்த அநுபவத்தைக் கொண்டு நல்ல தெளிவுரையோடு வெளிப்படுத்தி உலகத்தார்க்குப் பெரும் பிரயோசனத்தை உண்டாக்கவேண்டுமென்னும் நோக்கம் நெடுநாளாக எம்மிடத்திற் குடிகொண்டிருந்தது. இருந்தும் இதன் பாடல்களில் சிற்சில விடங்களிலிருந்த சந்தேகங்களை விளக்கிக்காட்டும் மகான்களின் தெரிசனம் கிட்டாமையால் அவ்வெண்ணம் நிறைவேறாமல் பல நாட்கள் கழிந்தன. இப்படியிருக்க நான்கு வருடங்கட்கு முன்னர் திருவாரூருக்கடுத்த கடுவங் குடியிலிருக்கும் ஸ்ரீமத் வாலாம்பிகைதாச சுவாமிகளின் தெரிசனை கிடைக்கப்பெற்று அவர்களிடம் இக்குறைவைத் தெரிவிக்க அவர்கள் திருவாரூர் வைத்தியம் பிர்மஸ்ரீ சுப்பராய சுவாமிகளைக் கொண்டு இருந்த சந்தேகங்களை விளக்கிக்காட்டுமாறு செய்தார்கள். அதன்மேல் அவர்களின் உதவியைக்கொண்டு எட்டுக்காண்டங்கள் வரை தெளிபொருள் விளக்கவுரை எழுதி அச்சிட்டு வெளிப்படுத்தி நம் நேயர்களுக்குத் திருப்தியை யுண்டாக்கினோம். அதன்மேல் ஓர் அவசரத்தை முன்னிட்டு ஷெ சுவாமிகள் தம் ஜெனன பூமிக்குப் போய் விட்டபடியால் இந்த 9, 10ஆவது காண்டங்கள் சந்தேக நிவிர்த்திசெய்து வெளிப்படுத்தக்கூடாமல் பலமாதங்கள் கழிந்தன. பின் பல நாட்கள் அவர்களின் வரவை யெதிர்பார்த்தும் அது முடியவில்லை. எப்படியேனும் அவர்கள் வந்தபின் சந்தேகங்களைத் தீர்த்துக் கொண்டுதான் இக்காண்டங்களை வெளியிட வேண்டுமென்று இவற்றை இதுகாறும் நிறுத்தி வைத்திருந்தோம். அப்படி யிருந்தும் முந்தினகாண்டங்களைத் தருவித்துப் பார்த்த நண்பர்கள் இவற்றை விரைவில்வெளிப்படுத்தவேண்டுமென்று கடிதமுகத்தாலும் நேரிலும் தெரிவித்து வற்புறுத்தி வந்ததை மறுக்க வசமற்று, எப்படியேனும் தெரிந்தவரையில் எழுதி வெளிப்படுத்தி விடுவோமென்னும்

ஊக்கங்கொண்டு மேற்கண்ட சுவாமியாரவர் கட்கும், ஐயரவர்கட்கும் எழுதிக் கடிதமுகத்தால் சிற்சில சந்தேகங் களைத் தெளிந்துகொண்டு ஒருவாறு உரையெழுதி இக்காண்டங்களை இப்பொழுது வெளிப்படுத்தி யிருக்கின்றோம். எனினும் 10ஆவது காண்டத்தில் இரண்டுமூன்று இடங்களில் உள்ள சந்தேகங்கள் கடிதமுகத்தால் தெரிந்துகொள்ள சாத்தியப்படாமையால் விடப்பட்டிருக்கின்றன. அவற்றை அவசியமானோர் மேற்கண்ட சுவாமிகளிடம் நேரில்தெரிந்து கொள்ளலாமென்னும் நோக்கங் கொண்டே அவற்றை யெதிர்பாராமல் புத்தகத்தை வெளிப் படுத்திவிட்டோம். அச்சந்தேகங்களுக்கு விளக்கம் தெரிந்த மகான்கள் எழுதினும் அடுத்த பதிப்பில் அவர்கள் பெயருடன் வெளியிடுகிறோம்.

இவ்விரண்டு காண்டங்களுள் 9 ஆவது காண்டத்தில் கெவுன குளிகை, ஜால மை முதலிய சில அற்புத முறைகளும், 10 ஆவது காண்டத்தில் எல்லாவற்றிற்கும் ஆதாரமாகிய பீஜாக்ஷர முதலியவைகளும், பாதாள அஞ்சனத்திற்குரிய மந்திரங்களும், தனிமுறைச்செந்தூரம், தமனியநீர், இரசமணி, சுவர்ண வயிரவ தியானம் முதலியவைகளும் அடங்கியிருக்கின்றன. இந்தப் பத்தாங்காண்டத்தில் இந்நூலிற் கூறப்படும் எல்லா முறைகளுக்கும் ஆதாரமான பல விஷயங்களும் சொல்லப்படுகின்றன. மற்ற காண்டங்களை வாங்கியவர்களுக்கு இந்தபத்தாங்காண்டம் மிகவும் அவசிய மாகையினாலும், இதில்லாமல் அவை பிரயோசனப்படாவாதலாலும் இக்காண்டங்களை இவ்வளவு பிரயாசத்துடனும், விடாமுயற்சியுடனும் பலநாளாக முயன்று வெளிப்படுத்தினோம், இவற்றிலுள்ள சந்தேகங்களைத் தெரிந்து கொள்வதற்காக நாம் எடுத்த பிரயாசையும், முயற்சியும் இதைப் பார்வையிடும் கனவான்களுக்கு நன்கு விளங்கும், எமது விடாமுயற்சியும், நமது நண்பர்களின் இடைவிடாத் தூண்டுதலுமே இப்புத்தகம் பூரணமாக முடிவுபெறுதற்கு முக்கிய சாதனங்களாயிருந்தன.

நமக்கு அது விஷயமாக நேர்ந்திருக்கும் தேகசிரமம், மனோமுயற்சி, பொருட்செலவு முதலியவற்றையுத்தேசித்து 10 ஆவது காண்டத்தில் விடப்பட்டிருக்கும் இரண்டொரு சந்தேகங்களை எதிர்பாராமல் நமது அபிமானிகள் ஒவ்வொருவரும் இதற்குமுன் நம்மால் வெளிப்பட்டிருக்கும் பல கிரந்தங்களையும் வாங்கி எம்மைபலவிதத்தாலும் மேன்மைப்படுத்திவருவது போலவே இந்த

இரண்டு காண்டங்களடங்கிய புத்தகத்தையும் வாங்கி நன்கு மதித்துக் கனப்படுத்துவார்களென நம்புகிறோம்.

இந்த நூல்முழுதும் தட்டின்றி உரையெழுதி அச்சிட்டு வெளிப்படுத்திப் பூர்த்தி பெறும்படி பேரருள் புரிந்த இறைவனுக்கு யாம் இடைவிடாது துதிசெலுத்துவது போலவே எல்லோரும் செலுத்துவீர்களாக. சுபம்.

அ. பா. மு. அ.

உ

கடவுள் துணை.

இலக்க சௌமிய சாகரம் தேர்ந்தெடுத்த செய்யுட்களும் தெளிபொருள் விளக்க வுரையும்.

ஒன்பதாங் காண்டம்

காப்பு

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

ஹரியோநீ கலையோநீ யடுவோநீ
நடுவோநீ யழிவி லாத
குறியோநீ வெறியோநீ குலையோநீ
மலையோநீ குறியா முன்னம்
பொறியோநீ புயலோநீ புதியவளின்
றனையொப்பாய் புகலுகின்ற
அறியொன்பா னுறுரைக்க வகண்டவெளி
யிட நிறைந்த மாதி காப்பே.

இதில் எடுத்த காரியமினிது முடியுமாறு தெய்வவணக்கங் கூறுகின்றார்.

(இ - ள். கடவுளே! ஹரியென்னுஞ் சத்த ரூபமானவனு நீயே, சாஸ்திரங்களின் ரூபமானவனு நீயே, வெப்ப ரூபமானவனு நீயே, எல்லாவற்றிற்கு நடுவு நிலைமையா யிருக்கப்பட்டவனு நீயே, என்றும் அழிவில்லாத ஓர் வஸ்துவின் தோற்றமு நீயே, மயக்கரூபமானவனு நீயே, யாவுந் தோற்றுவதற்கிலக்கியமாக ஆதியிலே பொறி புலாதிகளின் ரூபமா கொத்தா யிருப்பவனு நீயே, மலைகளின் ரூபமானவனு நீயே, யிருந்தவனு நீயே, சத்த மேகங்களும், நீயே, இத்தகையகுணங்கள் வாய்ந்த எக்காலத்தும் நூதனமா யிருக்கப்பட்டவனாகிய உனக்குச் சமானமாகச் சொல்லப்பட்ட அறிவுவாய்ந்த இந்த ஒன்பதாங் காண்டத்தைச் சொல்ல வெளியிடங்களாகிய வெங்கும் நிறைந்த முதலாகிய நீயே காப்பாகக் கடவாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இந்த ஒன்பதாங் காண்டத்தின் அருமை பெருமைகளை நோக்கியே கடவுளாகிய உனக்குச் சமானமாகச் சொல்லப்பட்ட ஒன்பதாங் காண்டமென்றார். எல்லாவற்றிற்கும் கடவுளே காரணமாதலால் எல்லாம் நீயே யென்று சொல்வதற்குப் பதிலாக ஒவ்வொன்றாக அடுக்கிச் சொல்லிக்கொண்டு வந்தார். 1

எட்டாவது காண்டத்தின் ஈற்றில் லிங்கமெழுகின் வேதை சொல்வேன், இக்காண்ட முடிந்து விட்டது ஆனதால் வேறோரிடத்திற் சொல்வேன் என்றபடியே இந்த ஒன்பதாவது காண்டத்தின் முதலிலேயே மேற்படி லிங்கமெழுகின் வேதை சொல்லத் தொடங்குகின்றார். இவ்வேதை முடிந்தவுடன் கெவுனகுளிகை யென்னும் ஓர் அற்புத முறையைச் சொல்லத் தொடங்குகின்றார்.

எட்டாங் காண்டத்திற் சொன்ன
லிங்கமெழுகின் வேதை.

கலி விருத்தம்

மெழுக்கின் வேதையை விண்டிடக் கேண்மினோ
தழுக்கு வாய்ந்திடுந் தாம்பிரந் தன்னிலே
ஒழுக்க மாகவே நூற்றொன்றை யீந்திடில்
அழுக்கு வாங்கிடு மாணியு மெட்டதாம்.

இதுமுதல் இரண்டு பாட்டுகளால் லிங்கமெழுகின்
வேதை சொல்கின்றார்.

(இ - ள்.) மனிதர்களே! மேற்கண்ட லிங்கமெழுகினுடைய வேதையைச் சொல்வேன் கேட்பீர்களாக. மேற்படி மெழுகை அழுக்கு நிறைந்திருப்பதாகிய தாம்பிரத்திலே கிரமத்தோடு நூற்றிற்கொன்று கொடுத்தூதினால் அந்தத் தாம்பிரத்திலுள்ள அழுக்கெல்லாம் நீங்கிப்போகும். அதுவும் எட்டுமாற்றுள்ள தங்கமாகும். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை. 2

இதுவுமது

எட்ட தென்றே யியம்பு மருந்ததைக்
கட்டி வெள்ளியிற் காட்டுமுன் வாறுபோல்

செட்டி யின்கடை காட்டத் திறவுரை
இட்ட மாக வியம்புவர் தங்கமே.

இதில் மேற்படி மெழுகின் வேறு வேதை சொல்கின்றார்.

(இ - ள்.)முன் பாட்டில் தாம்பிரமானது எட்டு மாற்றாகுமென்று சொல்லிய அந்த லிங்கமெழுகை கட்டியாகிய வெள்ளியிலே முந்தின கிரமப்படியே நூற்றிற்கொன்று கொடுத்தூதக் கடவாய். அப்படிச் செய்தால் அந்த வெள்ளியானது உருகித் தங்கமாகும். அதைச் செட்டிகள் கடைகளிற் காட்டினால் தங்கமாற்றாகச் சொல்லுவார்கள். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: செட்டிகள் கடைகளிற் காட்டினால் தங்கமாற்றாகச் சொல்வார்கள் என்றதனால் தங்கமாற்று பத்தரை யாகையால் இதைப் பத்தரை மாற்றுத் தங்கமென்று சொல்வார்கள்க ளெனவறிக. பத்தரை மாற்றுள்ளதையும், அதற்கு மேற்பட்டதையும் தங்கமென்றும், பத்தரை மாற்றிற்குக் குறைந்ததை யெல்லாம் பொன்னென்றும் சொல்வது இயற்கை, ஆனதுபற்றியே பத்தரை மாற்றென்று சொல்வதற்குப் பதிலாகத் தங்கமெனச் சொல்வார் களென்றார். 3

கெவுன குளிகை

கலி விருத்தம்

இடத்தி னுற்றவெழிலுறு மாக்களே
நடத்த மாவேறு வேதை நவிலுவேன்
கடத்த மாகவே கண்டறி வீரரோ
படத்த மாகப் பறக்குங் கெவுனமே.

இதுமுதல் கெவுன குளிகை யென்னுமுறை சொல்கின்றார்.

(இ - ள்.) இந்தப் பூலோகத்திற் பொருந்திய மனிதர்களே! இனி வேறொரு வேதையைச் சொல்லத் தொடங்குவேன் கேட்பீர்களாக. நான் இனிமேற் சொல்லப் போவதாகிய ஆகாய மார்க்கமாகப் பறக்கும்படியான கெவுன குளிகையை உரிமையோடு கண்டறிவீர் களாக. எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: வெளிப்படை. 4

சந்த விருத்தம்

வேந்தன்முடி மீதிலுற்றவன்
மிகுமேன்மைய தானநற்றவனாங்
காந்தமுறுங் காட்சிபெற்றவன்
கதிர்போற்சுடர்க் காங்கையுற்றவனாம்
மாந்தரின்குழு சூழப்பூவினு
மலையுங்கடன் மீதிலுற்றவனாம்
வாந்தமுற வேயொளிவாகவும்
வனமும்பல மாவகை யுற்றவனாம்.

இதில் இம்முறைக்காம் சில சரக்குகளை வருணிக்கின்றார்.

(இ - ள்.) இராஜாக்களுடைய கிரீட முதலியவைகளில் பொருந்தி யிருக்கப்பட்டவைகள், மிகுந்த மேன்மையும், தவமும் பொருந்திய வைகள், பிரகாசமிகுந்த காட்சியுள்ளவைகள், சூரியனேபோன்ற ஒளியும் சூடுமுள்ளவைகள், மனிதர் கூட்டங்கள் தங்களை விரும்பி நெருங்கும் படியாக மலை, கடல் முதலியவிடங்களி லுற்பத்தியாகப் பட்டவைகள், பலவிதமான நிறங்களாகவும் அந்நிறங்களுக்குத் தக்க பிரகாசமுள்ள வைகளாகவும் பொருந்தியிருக்கப்பட்டவைகள். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இதில் வருணித்த சரக்குகள் அடுத்தபாட்டில் சொல்லுங் கிரமப்படி பலவகைப் பட்டதாயினும் இந்தப் பாட்டில் ஒருமையாகவே சொல்லிவந்தது பின் வருகின்றபடியே அவைகளெல்லாவற்றிற்கும் ஒரே பெயராக வழங்கி வருவதினாலென்க. அல்லது வைத்திய பரிபாஷைக் கிரம நோக்கிச் சொன்னாரெனினு வுவமையும், மேற்கண்ட சரக்குகள் சூடுள்ளவைக ளென்றதனால்,, சற்று உஷ்ண குணமுள்ளவைகளென ஏற்படுகிறது. இதனால் நெருப்பைப் போல சுடுமென நினைக்கலாகாது. மேற்கண்ட சரக்குகள் அரசர் முடி முதலியவைகளில் தங்கப்பட்டவை யாதலினாலும் எவரும் விரும்பத்தக்கவைகளான படியினாலும் மனிதர் கூட்டங்கள் விரும்பி நெருங்க மலை, கடல் முதலிய விடங்களிலுற்பத்தியாகத் தக்கதென்றார். இவைகள் பெரும்பான்மையும் மலைகளிலும், கடல்களிலுமே யுற்பத்தியாவன வெனவறிக. இவைகளின் பெயர் முதலிய விபரங்களை அடுத்தபாட்டிற் கூறுவாரெனவறிக.

கலி விருத்தம்

நங்கை யென்றிடும் பேர்முன்னே நாட்டுவாய்
வங்க முன்னும் வகுப்பன் ரகரொன்று
தங்க மாகவே தாத்திரி தன்னிலே
முங்க மாக வொதிக்கிடு முன்பின்னே.

இதில் முற்குறித்த சரக்குகளின் பெயர் சொல்கின்றார்.

(இ - ள்.) நங்கையென்று சொல்லப்பட்ட பெயரினது முன்னெழுத்தை யெடுத்துக்கொண்டு அதனோடு வங்கம் என்னும் பெயரின் முதலெழுத்தையும், ரகரத்தையும், மிகவும் உயர்வோடு தாத்திரி யென்னும் பெயரிலே முன்னெழுத்தையும் பின்னெழுத்தையும் நீக்கிவிட்டு மீதி யிருக்கின்ற எழுத்துக்களையும் சேர்க்கக்கடவாய். அப்படிச் சேர்த்தால் மேற்படி சரக்குகளினுடைய முக்கால்வாசிப் பெயரமையும். இதையும் அடுத்தபாட்டிற் சொல்லு மீதிப் பெயரையும் சேர்த்துப் பெயரைப் பூர்த்திபண்ணிக்கொள்க. எ - று.

சூக்ஷ்ம விளக்கம: நங்கையென்று சொல்லப்பட்ட பெயரிலுள்ள முன்னெழுத்தாவது (ந) வங்கமென்னுஞ் சொல்லின் முதலெழுத்தாவது (வ.) ரகரமாவது (ர.) தாத்திரியென்னும் பெயரிலே முன்னெழுத் தையும், பின்னெழுத்தையும் நீக்கி நின்ற வெழுத்துக்களாவன (த்தி.) ஆக இவைகளெல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்க்க (நவரத்தி) என்றானது. இதுவே மேற்குறித்த சரக்கினது முக்கால்வாசிப் பெயராம். மீதிப்பெயரையும் அடுத்தபாட்டிற் கூறுவார், அதையும் சேர்த்துப் பூர்த்திபண்ணிக்கொள்க. 6

இதுவது

மான மென்று வழுத்தும் பெயர்தனில்
தான மாகத் தலைதனைப் போக்கிடில்
நான மாகவே நாமம் விளங்கிடும்
கான மாகிய காளையே கண்டறி.

இதில் மேற்கண்ட சரக்குகளின் மீதிப் பெயர் கூறுகின்றார்.

(இ - ள்.) மானம் என்று சொல்லப்பட்ட பெயரில் முதலெழுத்தை நீக்கிவிட்டு மீதியிருக்கின்றதை முன்பாட்டில் வந்த குறைப்பெயரோடு

சேர்க்க மேற்கண்ட சரக்குகளினுடைய பூரணப்பெயரும் நன்கு விளங்கும். மகனே பார்த்தறிந்து கொள்ளக்கடவாய்.

சூக்ஷுமை விளக்கம்: மானம் என்று சொல்லப் பட்ட பெயரின் முதலெழுத்தை நீக்கிவிட நின்ற சேஷமாவது (னம்.) இதை முன் பாட்டில்வந்த நவரத்தியென்ற குறைப்பெயரோடு சேர்க்க (நவரத்தினம்) என்றானது. இதுவே மேற்குறித்த சரக்குகளின் பெயராம். இவை ஒன்பது வகையாக இருந்தும் நவரத்தினம் என ஒற்றுமைநோக்கி ஒருமையாக வழங்குவதை முன்னிட்டே 5ம் பாட்டிலும் ஒருமையாகவே சொல்லிவந்தார். ஆயினும் இவற்றை (நவரத்தினங்கள்) எனப் பன்மையாகவேகொள்க. இவைகளின் நிறைமுதலிய விபரத்தை அடுத்தபாட்டிற் கூறுவாரெனவறிக. 7

கொச்சகக் கலிப்பா

வகைதனில் நிறையதுகேள் வகுப்பேன் கழஞ்சி யொன்றில்
தொகையுட னஞ்சிலொன்றில் தொடுத்திடு காளைகளே
நகையுடன் மனுவெழுப்பும் நயமுறு மருந்துதனிற்
செகையுட னெடுத்திடுவாய் செப்புவேன் பணமைந்தே.

இதில் முன்சொன்ன நவரத்தினங்களின் நிறையுஞ் செய்முறையும் கூறுகின்றார்.

(இ - ள்.) மேலே சொல்லிய நவரத்தினங்களில் எடுக்கவேண்டிய நிறையின் விபரத்தைச் சொல்வேன் கேட்பாயாக. மேற்படி நவரத்தினங்களில் வகைக்கு ஒருகழஞ்சியில் கணக்காக ஐந்திலொருபங்கு எடுத்துக் கொள்ளக் கடவாய். அப்படி யெடுத்துக்கொண்டபிற்பாடு இரண்டாங்காண்டத்திற் சொன்னதாகிய இறந்து போன பிணங்களை யெழுப்பும்படியான நலம் பொருந்திய ஓர் மருந்தில் ஐந்து பணவெடை யெடுத்துக்கொள்ளக் கடவாய். எ - று.

சூக்ஷுமை விளக்கம்: ஒருகழஞ்சில் ஐந்திலொருபங்காவது கால் விராகனெடை ஆதலால் (நவரத்தினங்களில் வகைக்குக் கால் விராகனெடை) யெடுத்துக்கொள்க. இரண்டாங் காண்டத்திற் சொன்ன இறந்துபோன பிணங்களை யெழுப்பும்படியான மருந்தாவது (துருசுச் சுண்ணம்) இந்தத் துருசுச்சுண்ணத்திலே ஐந்து பணவெடை யெடுத்துக்கொள்ள வேண்டியது. இந்த இரண்டுவகைச் சரக்குகளையும் எடு என நிறுத்தியிருப்பதில் இவைகளை யின்னது செய்ய

வேண்டுமென்னும் விபரத்தைப்பற்றி அடுத்தபாட்டிற் சொல்லுவாரென வறிக. 8

இதுவுமது

எடுத்திடு மருந்துதனை யியலுறு குருவிலையால்
அடுத்ததை யுலக்கிநன்றா யரையுமுன் மருந்ததிலே
நடுத்தினி மேற்பூசி நண்புடன் வெயிலுலர்த்தி
எடுத்திடுங் காளைகளே யியற்றுவேன் வேதைகளே.

இதில் முன்னெடுத்த சரக்குகளை யின்னது செய்யவேண்டுமெனச் சொல்கின்றார்.

(இ - ள்.) முன் சொன்னபடி யெடுத்த துருசுச் சுண்ணத்தில் குருமூலியென்ற திருநீற்றுப் பச்சையிலைச் சாற்றைவிட்டு நன்றாகக்கலக்கி முன் சொல்லிய நவரத்தினங்களின்மேலே பூசி சிநேகத்தோடு வெயிலில் வைத்துலர்த்தி யெடுத்துக்கொள்ளக் கடவீர்கள். மனிதர்களே! இனிச் செய்யும்படியான வேறு வேதைகளையுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: வெளிப்படை. 9

வேறு செய்யுள்

ஊமச்சி தன்னையே யுலர்த்தி யேயெடு
தேமெச்சி கல்வத்திற் செலுத்தி யாட்டுவா
மேமெச்சி வெண்கரு விட்டு மையென
வேமெச்சி மூசையி லியற்று வாமரோ.

இதில் மேற்படி மருந்திற்கு மூசை செய்யும் விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) கும்பிடு கிளிஞ்சில்களை வேண்டிய அளவு கொண்டுவந்து நன்றாயுலர்த்திச் சுத்திசெய்து நலம் பொருந்திய கல்வத்திற்போட்டு அதில் கோழிமுட்டை வெள்ளைக் கருவைவிட்டு நன்றாக மைபோலரைக்கக் கடவாய். அப்படி யரைத்த பின்பு அதனை வழித்தெடுத்து மூசையாகச் செய்யக்கடவாய். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: ஊமச்சியென்பது வேறாயினும் முந்தின கிரமங்களின்படியே இங்கு கும்பிடு கிளிஞ்சிலையெடுத்துக்

கொள்ளும்படி சொல்லப்பட்டது. ஊமச்சியினாலும் செய்யலாம். ஆனாலும் கும்பிடு கிளிஞ்சினால் மூசைசெய்வதே விசேஷம். 10

இதுவுமது

மூசையில் முன்னமே முயல் மருந்ததை
வீசியே செலுத்திடும் வேதை கேண்மினோ
மூசியே விண்ணுமூ வுலக மேயவே
ஆசைவைத் தாதியை யகத்தி லுன்னியே.

இதில் முன்செய்த மூசையைப் பின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) மேலே கண்டபடி செய்த மூசையில் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற நவரத்தினமாகிய மருந்துகளை உள்ளே போடக் கடவீர்கள். இனிமேற் செய்யும்படியாகிய வேதைகளையுஞ் சொல்வேன் சுவர்க்க மத்திய பாதாளமென்னும் மூன்று லோகங்களிலும் நெருங்கிச் சஞ்சரிக்கும்படியாக ஆசையை வைத்து எல்லாம் வல்ல கடவுளை மனதிற் றியானித்துக் கேட்கக் கடவீர்களாக. எ - று.

சூக்ஷும விளக்கம்: இந்தக் கெவுன குளிகையானது எவ்விடத்துங் கொண்டுபோகுஞ் சுபாவமுடையதாகையால் மூவுலகமுஞ் செல்லும் படியான ஆசையை வைத்துக் கேட்கக் கடவீர்களாக என்றார். 11

வேறு செய்யுள்.

உயிருள்ள வுலுத்தன் றன்னிறையே
நயமாக விராகனு நாட்டிடு வாய்
அயமானதி லேபொடி யானதுவும்
விய னாகவே சேர்த்திடு விண்டது போல்.

இதில் இன்னும் இம்முறைக்குச் சேர்க்க வேண்டிய சில சரக்குகள் சொல்கின்றார்.

(இ - ள்.) உயிருள்ளதாகிய வுலுத்தனென்றுசொல்லப்பட்ட சரக்கில் ஒரு விராகனெடையும், அயத்தில் அராவிய தூளில் மேற்கண்ட சரக்கினளவும் எடுத்து முன் மூசையிற் போட்டிருக்கின்ற மருந்தோடு போடக் கடவாய். எ - று.

சூக்ஷும விளக்கம்: உயிருள்ளதாகிய வுலுத்தனென்று சொல்லப்பட்ட சரக்காவது (இசரம்) இதைப்பற்றி முன் பல விடங்களிற் சொல்லி யிருக்கின்ற இலட்சணங்களினாலுங் காண்க. அரத்தால் அராவிய தூளாவது (அரப்பொடி) இதில் மேற்கண்ட சரக்கினளவு எடு என்றதனால் முந்தின இரசத்தின் நிறை ஒரு விராகனெடையே யெடுத்துக்கொள்ள வேண்டியது. ஆகவே (இரசம் விராகனெடை ஒன்று) (அரபொடி விராகனெடை ஒன்று) எடுக்கவேண்டு மெனவறிக. இங்கு இரசத்தை உலுத்தனென்று சொன்னதை சந்தோஷத்தினாற் கூறினா ரென்க. இவ்வாறே இந்த நூல் முழுமையும் பல விடங்களில் வரப்பட்ட சரக்குகளனைத்தையும் உயர்திணையாக்கிச் சில விடங்களில் உயர்வாகவும், சில விடங்களிற் றாழ்மையாகவும் கூறிவருகின்றார். அவையெல்லாம் மேற்கண்டபடி சந்தோஷத்தினாலேயே இவையெல்லாம் "உவப்பினு முயர்வினு" மென்ற நன்னூற் சூத்திரவிதி பெறுமெனவறிக. 12

சந்த விருத்தம்

ஒளிபாஞ்சவு மியமானதி னுரையுற்றது நிறையே
தெளிவாகவே சரிசேர்த்திடு செயம்பெற்றிடு காளாய்
விழிபோலவே பணமொன்றெடு வியன்வீரத்தின் மெழுகில்
துளியேத்திட வைநீசொலு முறைபோற்சுக முறவே.

இதிலும் இம்முறைக்கெடுக்க வேண்டிய இரண்டு சரக்குச் சொல்கின்றார்.

(இ - ள்.) மிகவும் பிரகாசம் பொருந்திய இலக்க சௌமிய சாகரமென்னும் நூலிலுள்ள முறைகளெல்லாவற்றிற்கும் ஆதாரமாகச் சொல்லப்பட்ட முதன்மைபெற்ற ஓர் மருந்தில் முன் பாட்டிற் குறித்த சரக்குகளினளவே சரியாக எடுத்து முன் மருந்துகளோடு சேர்த்து கொள்ளக்கடவாய். இதைத் தவிர இரண்டாங்காண்டத்திற் கண்களைப்போல சொல்லியிருப்பதாகிய ஆச்சரியந்தங்கிய வீரமெழுகிலும் ஒருபணவெடை யெடுத்து முன் மருந்துகளடங்கி யிருக்கும் மூசையில் முந்தின கிரமங்களின்படியே சுகமாகப் போடக் கடவாய். எ - று.

சூக்ஷும விளக்கம்: இந்த நூலில் எல்லாவற்றிற்கும் ஆதாரமாகச் சொல்லி யிருக்கப்பட்ட முதன்மைபெற்ற மருந்தாவது முதற்காண்டத்திற் சொல்லி யிருக்கின்ற (அந்த செந்தூரம்) எல்லா வற்றிற்கும் இதுவே ஆதாரமா யிருக்கின்றபடியால் அவ்விதம்

சொன்னார். இதை முன் சரக்குகளுக்குச் சரிசேரு என்றதனால் முந்தின பாட்டிற் குறித்த சரக்குகளினளவு ஒரு விராகனெடை யாதலால் இதையும் ஒரு விராகனெடையெனக் கொள்ள வேண்டியது. ஆகவே (அந்த செந்தூரத்தில் ஒரு விராகனெடையும்) வீரமெழுகில் ஒரு பணவெடையும்) எடுத்து முன் சரக்குகளோடு சேர்க்க வேண்டு மெனவறிக. 13

வேறு செய்யுள்

வைத்துநீ மூடியை வாயின் மேலிடு
சுற்றினில் மூங்கையின் சுண்ணம் பூசிடு
அத்திற மரைவிர லறைவாய் வெண்களி
சித்திரச் சீலையும் பதினைந்து செய்திடே

இதில் முன் மூசையிற் போட்ட மருந்துகளுக்குக் கவசஞ்செய்யு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) முன் சொல்லிவந்த கிரமங்களின்படியே சரக்கு களனைத்தையும் மூசைக்குள்வைத்து மூசை வாயில் மேல்மூடியை வைத்து மூடி அதன்மேல் சந்தில்லாமல் கிளிஞ்சிற் சுண்ணாம்பைப்பூசி அதன்மேல் அந்த வெள்ளைக் களியினாலே அழகாகப் பதினைந்து சீலைமண் செய்யக் கடவாய். எ - று. 14

சூக்ஷ்ம விளக்கம்: வெளிப்படை.

இதுவுமது

செய்திடு மூசையைத் திறக்க வேயுலை
எய்திட நாட்டிடு எரியினுள் ளேயே
மெய்நிறை தன்னையே மனத்தின் மேவிடக்
கைத்திறத் தூதிடு கடிகை யிரண்டதே.

இதில் மேலே சொன்னபடி கவசஞ் செய்த மூசையை உலையில் வைத்தூதும் விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) முன் பாட்டிற் குறித்தபடியே கவசஞ் செய்த மூசையைப் பலத்தோடு உலையிற் பொருந்தும் படியாகச் செய்து நெருப்பின் மத்தியில் வைத்து உண்மையோடு எங்கும் நிறைந்த கடவுளை மனதிற்

றியானித்துக் கையினாற் குழல்கொண்டு இரண்டு நாழிகைநேரம் திறமாக ஊதக்கடவாய். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: வெளிப்படை. 15

இதுவுமது

ஊதிய மருந்ததை யுலை யமர்த்திப்பின்
மூதுரை மூசையை முடுகி யேயெடு
வீதிய கவசத்தை விடுத்துப் பார்த்திடில்
காதிய மாந்தரே களங்க மாகுமே.

இதில் உலையில் வைத்தூதிய மருந்தானது இன்னவித மாகுமெனச் சொல்கின்றார்.

(இ - ள்.) முன் குறித்தபடி யிரண்டு நாழிகை யூதிய மருந்தைப் பின்பு உலையை அமர்த்தி நெருப்பாறின பிற்பாடு முந்திச் சொன்னதாகிய அந்த மூசையை யெடுத்துக் கவசத்தைப் பிரித்துப் பார்க்கக் கடவாய். அப்படிப் பிரித்துப் பார்த்தால் மனிதர் கூட்டங்களே! அதற்குள்ளிருந்த மருந்தானது திவ்யமான களங்கமாகி யிருக்கும். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: வெளிப்படை. 16

கலி விருத்தம்

மறுத்து மூசையின் மாட்டு மருந்ததை
உறுத்த மாக வுலையிற் செலுத்தியே
பொறுத்த மாகவே பொங்கிப் புரளையில்
இறுத்த மாக வியற்றுவன் கேண்மினோ.

இதில் முன் சொன்னபடி ஆன களங்கைப் பின்செய்யும் விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) மேற்பாட்டிற் குறித்தபடி களங்கமான மருந்தைத் திரும்பவும் மூசையிற்போட்டு பலத்தோடு அந்த மூசையை உலையில்வைத்து ஊதக்கடவாய். அப்படி யூதினால் அந்தக்களங்க மானது பொங்கிப் புரண்டு கொதிக்கும். அந்தச்சமயத்தில் நிலையாகச் செய்யவேண்டிய காரியத்தைச் சொல்வேன் கேட்பாயாக. எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: வெளிப்படை. 17

இதுவுமது

கெந்த கத்தின் கிளத்துந் தயிலத்தில்
அந்த மாக வரைப்பண மேயிடு
வெந்து மூன்று விழுங்கு மருந்ததுஞ்
சொந்த மாகத் துலங்கி யிலங்குமே.

இதில் முன் மூசையில் வைத்தூதிய களங்கத்தை பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) முன் பாட்டிற் சொன்னபடி களங்கமானது கொதித்துக் கொண் டிருக்குந்தருணத்தில் அதில் இரண்டாங் காண்டத்திற் சொல்லி யிருப்பதாகிய கெந்தகத்தைலத்தில் அழகாக அரைப்பணவெடை யெடுத்து விடக்கடவாய். அப்படி விட்டவுடன் மூசையிலிருந்த மருந்தானது நன்றாக வெந்துருகி இந்த கெந்தகதைலத்தைச் சேர்த்துண்டு மிகவும் பிரகாசத்தோடு தோற்றும். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை. 18

இதுவுமது

ஆற விட்டெடுத் தேநீ யடைவுடன்
மாற விட்ட மருந்தைமுன் வாறுபோல்
ஏற விட்டே யெரியினி லூற்றுவாய்
ஊற விட்டே யுருகிக் கொதிக்கையில்.

இதில் முன் மருந்தைச் செய்யவேண்டிய வேறு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) மேலே சொல்லியபடி ஆகிய மருந்தை எடுத்து ஆறவைத்து ஆறினபிற்பாடு பழையபடியும் முன் சொன்னதுபோலவே மூசையிற் செலுத்தி நெருப்புலையில் வைத்தூதக் கடவாய். அப்படி யூதினால் அந்த மருந்தானது மறுபடியும் உருகிக் கொதிக்கும். அப்படி உருகிக்கொதிக்கும்படியான சமயத்தில்,

சூக்ஷுமம விளக்கம்: இதில் உருகிக் கொதிக்கையில் என்றமட்டில் நிறுத்தி யிருப்பதில் மற்ற விபரங்களை அடுத்தபாட்டிற் கூறுவாரென வறிக. 19

19

இதுவுமது.

வேங்கை நீரில் விபர மரைப்பணம்
வீங்க மாக விடுத்திடு வாயரோ
ஊங்க மாக வுழன்றே யுருகிடும்
வாங்கு வாயுலைவிட்டு மருந்ததை.

இதில் முன் உருகிய மருந்தைப் பின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) முன் சொன்னபடி உலையில் வைத்தூதிய களங்கமானது உருகிக் கொதித்துக்கொண்டிருக்குஞ் சமயத்தில் அதில் இந்த நூலின் ஐந்தாங் காண்டத்திற் சொல்லியிருக்கின்ற வேங்கை ஜெயநீரில் அரைப்பணவெடை யெடுத்து ஊக்கத்தோடு விடக்கடவாய். அப்படி விட்டவுடன் முன் மருந்தும் இதுவும் சேர்ந்து நன்றாகக் கொதித்துருகிவிடும். அவ்வாறு உருகினவுடன் அந்த மருந்தை உலையைவிட்டு நீக்கி யெடுத்துக் கொள்வாய்.எ-று

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை.

20

சந்த விருத்தம்

வாங்கச்சுட ரொளியாகவே வனமானது தோன்றுந்
தூங்காதேமா ணாக்காதூ யோன்றன்னைநீ தொழுது
பாங்காகவே பறக்குமுறை பலனென்றுரை துதியாய்
வேங்காகவே வேதையினி விள்வேன்கேண் மின்னோ.

இதில் முன் எடுத்த மருந்திருக்கும் விதத்தைச் சொல்கின்றார்.

(இ - ள்.) முந்தின பாட்டிற் கண்டபடியே உலையைவிட்டு நீக்கி யெடுத்துக்கொண்ட மருந்தானது சூரியனைப்போன்ற ஒளி வீசுவதாகிய நிறத்தினையுடையதாகத் தோற்றும். இனிமேல் மாணாக்கனே! மந்தமாகவிராதே. அழகாக மேலே பறக்கும்படியான கெவுனகுளிகையானது கையிற்கிடைத்து விட்டதென்னு முறுதிகொண்டு பரிசுத்தமாகிய கடவுளை வணங்கித் துதிக்கக்கடவாய். இனிமேற் செய்யவேண்டிய இது சம்பந்தமாகிய வேதைகளையும் சொல்வேன் கேட்கக்கடவாயாக. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இம் முறையானது இந்தமட்டும் முடிந்துவிட்டாலே முழுதும் முடிந்ததற்குச் சமானமாகு மென்பது பற்றியே கெவுனகுளிகையானது முடிந்துவிட்டதென்னு முறுதி கொண்டு பரிசுத்தமாகிய கடவுளை வணங்கிப் போற்றக்கடவா யென்று

கூறினார். முதலில் மாணாக்கனே மந்தமாகவிராதேயென்றதனால் இம்முறை இதுவரை ஆனபிற்பாடு சும்மா இருந்துவிடாமல் மற்ற காரியங்களையும் அதி சீக்கிரத்திற்செய்து முடிக்கவேண்டுமென விளங்குகின்றது. 21

கலி விருத்தம்

மத்தஞ் சாற்றில் மருந்தது தன்னையே
உத்த மாகவே யுள்ளிடு மூன்றுநாள்
சுற்று கின்ற சுழலுமி தல்லவோ
கத்தி டாதேநீ காசினி மாந்தர்பால்.

இதில் முன் உலையைவிட்டெடுத்த மருந்தைப் பின் செய்யவேண்டியவிதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) முன் சொன்னபடி உலையைவிட்டெடுத்து வைத்திருக்கின்ற மருந்தை ஊமத்தையிலைச்சாற்றிலே மூன்றுநாள்வரை உயர்வு பொருந்தும்படியாகப் போட்டுவைக்கக்கடவாய். எவ்வுலகங் களிலும் போய்ச் சுற்றிச் சஞ்சரிக்கச்செய்வதும் இந்தமருந்தின் வல்லபமேயாகும். இதனுடைய இரகசியமான விஷயங்களை உலகிற் பொருந்திய மனிதர்களுக்குச் சொல்லிவிடாதே. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இந்தக் கெவுனகுளிகையே எங்கும் சஞ்சரிக்கச் செய்வதாகையால் சுற்றுகின்ற சுழலுமிதல்லவோ என்றார். 22

இதுவுமது

கன்னி யின்வன முங்கரி போலெனச்
சொன்ன மூலியின் சாற்றினிற் றுங்கமா
முன்னிய லாகவே மூன்றுநா ளாற்றிடும்
உன்னியே யெழச் செய்யு முறுப்பிதே.

இதில் முன் மருந்தைச் செய்யவேண்டிய வேறு விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) இன்னும் மேற்சொல்லிய மருந்தையெடுத்து அழகாகிய நிறமானது கரியைப்போன் றிருப்பதாகிய முந்தின பாட்டிற்குறித்த பச்சிலையின் சாற்றிலே மறுபடியும் உயர்வு பொருந்தும்படியாக முன் கிரமப்படியே மூன்றுநாள்வரை ஊறப்போடக் கடவீர்கள். மேலே பலங் கொண்டு செல்லும் படியாகச் செய்கின்ற அங்கம் இதுவேயாகும். எ-று.

சூக்ஷுமம விளக்கம்: கரியைப்போன் றிருப்பதாகிய முந்தினபாட்டிற் குறித்த பச்சிலையெனவே (கருஊமத்தை) யென வேற்பட்டது. இந்தக் கருவூமத்தைச் சாற்றிலேயே மூன்றுநா ளூறப்போட வேண்டியது இதைக் கருவூமத்தை யென்றதனால் முன் பாட்டிற்குறித்தது சாதாரண ஊமத்தையெனத் தானேயேற்பட்டது. ஆகவே சாதாரண ஊமத்தஞ்சாற்றில் மூன்றுநாளும், கருவூமத்தஞ்சாற்றில் மூன்றுநாளும் ஊறப்போட வேண்டுமென வறிக. இதுதான் மேலே எழுந்து செல்வதற்கு அங்கமென்றதனால் பெரும்பான்மையும் இந்தக் கருவூமத்தைச் சாற்றினாலே கெவுன குளிகை விசேஷப்படு மென்பதாகத்தோற்றுகின்றது. 23

இதுவுமது

வள்ளம் போன்ற மலரதன் மீதிலே
கள்ள விழ்கம லத்திலைச் சாற்றினால்
உள்ள விட்டிதை யாட்டி டுயங்கவே
முள்ள மாகவே முன்னியல் மூன்றுநாள்.

இதில் மேற்படி விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) பொற் கிண்ணத்தைப்போன் றிருப்பதாகிய புஷ்பங்களிலே தேனானது அதிகரித்துச் சொரியப்பட்ட தன்மையையுடைய தாமரை யிலையின் சாற்றிலே முன் கருவூமத்தைச் சாற்றில் ஊறப்போட்ட மருந்தை யெடுத்துப் பழையபடியும் மூன்றுநாள் வரை முன்போலவே போட்டு ஊறவைக்கக் கடவாய். 24

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை.

சந்த விருத்தம்

இத்தகை யியற்றிய வெழிலுறு மருந்தை
சித்திரச்சி வகரந்தை யின்சாற்றி லேதான்
முத்தியுடன் போட்டிடுவாய் முன்னியல்நாள் மூன்று
மத்தமுட னேமருந்தை மாற்றியெடு காளை.

இதில் வேறுவித ஊறல் சொல்கின்றார்.

(இ - ள்.) மேலே சொல்லிய விதமாக தாமரையிலைச்சாற்றில் ஊறப் போட்ட மருந்தையெடுத்து அழகு பொருந்திய சிவகரந்தையின்

சாற்றிலே உயர்வு பொருந்தும்படியாக முந்தின கிரமங்களின்படியே மூன்று நாள்வரை போடக் கடவாய். இளம் பருவத்தை யுடைய மனிதனே! அப்படிப் போட்டபின் அந்த மூன்று நாளுஞ் சென்று மேற் கண்ட மருந்தைத் திரும்பவும் எடுத்துக் கொள்ளக் கடவாய். எ - று.

25

சூக்ஷ்ம விளக்கம்: வெளிப்படை.

கலி விருத்தம்

வெற்றி யாக விளம்பு மருந்ததைப்
பொற்றி லையதன் சாற்றினிற் பொற்புடன்
முத்தி யாகவே மூன்றுநாள் தாட்டிடு
கற்று ணர்ந்திடுங் காசினிக் காளையே.

இதில் மற்றொருவித ஊறல் சொல்கின்றார்.

(இ - ள்.) முன் வீரத்தோடு சொன்னதாகிய சிவகரந்தையிலைச் சாற்றிலே ஊறப்போட்டெடுத்த மருந்தைப் பொற்றலைக் கையாந்த கரைச் சாற்றிலே அழகோடு மூன்றுநாள் உயர்வாக ஊறப்போடக் கடவாய். மிகவும் சாஸ்திரங்களைப் படித்துத் தேர்ந்து உலகத்திற்றங்கி யிருக்கப்பட்ட சீடனே இன்னமுஞ் சொல்வேன் கேள். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: இந்த நூலைக் கேட்கத்தகுந்தவன் சாமாணிய னல்லவென்பது தோன்றவே கற்றுணர்ந்திடுங் காசினிக் காளையே யென்றார். 26

வேறு செய்யுள்.

வேகமுற் றிடுமது வேறொன் றோதுவாம்
கோகமுன் றம்பிபின் கூட்டி டுங்கடை
மூகமுன் பழப்பெயர் முதலும் நாமமே
ஈகமா யிலையது சாற்றின்முன் வாறுபோல்.

இதிலும் பின்னொரு ஊறல் சொல்கின்றார்.

(இ - ள்.) முன் பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றிலே ஊறவைத்தெடுத்த மருந்தை இன்னும் வேகமதிகரிக்கச் செய்யும் படியான ஓர் மார்க்கத்தைச்சொல்வேன் கேட்பாயாக. சிறந்த

ககரவரியின் முதலெழுத்தையும், அதற்குத் தம்பியாகிய வெழுத்தையும், அதன்கடை யெழுத்தையும் எடுத்து வரிசைப்படி யமைத்து அதனாலமைந்த பெயரோடு மூகம் என்ற பதத்தின் முதலெழுத்தையும், எலுமிச்சம் பழத்தின் பரிபாஷைப் பெயரின் முதலெழுத்தையும் கூட்டி அதனால் வந்த பெயரை முன் பெயரோடு சேர்த்தால் என்ன பெயரமையுதோ அப்பெயருள்ள ஓர் பச்சிலையின் சாற்றிலே முன் மருந்தை முன்போலவே மூன்றுநாள் வரை ஊறப்போடக் கடவாய். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: ககரவரியின் முதலெழுத்தாவது (க.) இந்தக் ககரத்திற்குத் தம்பியாகிய வெழுத்தாவது (கா.) இந்தக் ககரவரியின் கடையெழுத்தாவது (க்.) ஆக இம்மூன்றெழுத்தும் வரிசை தப்பியிருப்பினும் நாம் ஆசானிடம் கேட்டுக்கொண்டபடி பச்சிலையின் பெயர் நோக்கி அதற்கிணங்க வரிசைப்படுத்திச் சேர்க்க (காக்க.) என்றானது. மூகம் என்ற பதத்தின் முதலெழுத்தாவது (மூ.) எலுமிச்சம்பழத்திற்கு இந்த நூலில் வழங்கிவரும் பரிபாஷைப் பெயராவது - லிம்பழம் - இந்தப் பதத்தின் முதலெழுத்தாவது (லி.) ஆக இவ்விரண்டெழுத்துக்களையுஞ்சேர்க்க (மூலி) யென்றானது. ஆக இவ்விரண்டு பெயர்களைங்கூட்ட (காக்கமூலி) யெனவானது. இதுவே மேற்குறித்த பச்சிலையாம். இதற்கு காக்கட்டான் என மறுபெயருமுண்டு. இந்த காக்கமூலி யிலைச்சாற்றிலேயே முன் மருந்தை மூன்றுநாள் ஊறப்போட வேண்டியது. எலுமிச்சம் பழத்தைப் பழமென்று சொல்வதும் பரிபாஷை வழக்கு. 27

இதுவுமது

பார்த்தறி மாந்தரே பண்ட வென்பெயர்
சீர்த்திமுன் னகல்ககர் செலுத்திப் பின்ஙகர்
காத்திரக் ககரமுங் காட்டி டங்ஙனே
தாத்திரி தன்னிலே தலை யகற்றுவாய்.

இதில் பின் சாறெடுக்க வேண்டியதற்கா மோர் பச்சிலை சொல்கின்றார்.

(இ - ள்.) மனிதர்களே! இன்னொரு மார்க்கத்தைச் சொல்வேன் கண்டுணரக் கடவீர்களாக. பண்ட என்ற பெயரில் சிறப்புப் பொருந்திய முதலெழுத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகக் ககரத்தைச் சேர்த்துக் கொண்டு அந்தப் பதத்திற்குப் பின் ஙகரத்தின் கடையெழுத்தையும், பலம் பொருந்திய ககரத்தையும், தாத்திரி - யென்ற பதத்திலே முதலெழுத்தை நீக்கிவிட்டு மீதியிருந்த பதத்தையும் சேர்த்துப் பார்க்கக்

கடவாய். அப்படிச் சேர்த்துப்பார்த்தால் ஓர் பச்சிலையின் பெயரமையும். எ - று.

சூக்ஷுமவிளக்கம்: பண்ட என்ற பதத்தில் முதலெழுத்தை நீக்கிவிட நின்றசேஷம் (ண்ட) இதனோடு கடையெழுத்தையும், ககரத்தையுஞ்சேர்க்க (கண்டங்க) என்றானது. தாத்திரி யென்ற பதத்திலே முதலெழுத்தை நீக்கிவிட நின்றசேஷம் (த்திரி) இதையும், முன் பதத்தையுஞ் சேர்க்க (கண்டங்கத்திரி) யென்றானது. இதுவே மேற்குறித்த பச்சிலையாம். இதனாலாகவேண்டிய விஷயங்களைப் பின் கூறுவாரெனவறிக. 28

இதுவுமது

இங்குறு மூலியின் சாற்றி லின்பமாய்
முங்கவே யாட்டிடு முயல மூன்றுநாள்
வெங்கட மலைகளில் வாசஞ் செய்திடும்
தங்கிய தத்துவந் தரிக்கு மாமரோ.

இதில் மேற்கண்ட மூலியின் சாற்றில் முன் மருந்தை ஊறவைக்கும் விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) மேலே சொல்லிய கண்டங்கத்திரி யென்னும் மூலிகையின் சாற்றில் முன் காக்கமூலிச் சாற்றில் ஊறவைத் தெடுத்திருக்கின்ற மருந்தை இன்பத்தோடு மூன்றுநாள் ஊறவைக்கக் கடவாய், இதனால் திருவேங்கட முதலிய பெரிய பருவதங்களிலிருந்து சுகமாக வாழப்பட்ட பலங்களெல்லா முண்டாகும். எ - று.

சூக்ஷும விளக்கம்: அந்தக் கெவுன குளிகையை முடித்துக்கொண்டவுடனே முடித்துக்கொண்டவன் சித்தனாகி விடுவானென்பது தோன்ற திருவேங்கட முதலாகிய பெரிய பருவதங் களிலிருந்து வாசஞ் செய்யப்பட்ட பலனுண்டாகு மென்றார். 29

இதுவுமது

பனிப்பகை வன்றனைப் பணிவ னாடொறும்
மணியென மலர்வன மஞ்சள் போன்றிடும்
குனிசிலை வளைவெனக் குணிவன் முன்றலை
இனியமென் னிலையது மிடந் திரிவிரல்.

இதில் பின்னால் சாறெடுக்கவேண்டிய ஓர்பச்சிலை கூறுகின்றார்.

(இ - ள்.) கீழ் சொல்லப்போகும் பச்சிலையானது சூரியனைத் தினந்தோறும் பணியப்பட்டது, அதன் மலரானது மஞ்சளைப்போன்ற நிறமுடையதாயிருக்கும், புஷ்பங்களையுடைய இந்தச் செடியின் தலைப்பானது கூனல்பொருந்திய வில்லைப்போல வளைந்திருக்கப் பெற்றது. இதனிலையானது மூன்றுவிரல்கள் சேர்ந்திருப்பனபோன்ற ரூபமுடையதா யிருப்பது. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: மேற்கண்ட இலட்சணங்களையுடையது (சூரியகாந்தி) சூரியனை வணங்கத்தக்கவைகளும் மஞ்சனிறப் புஷ்பங்களை யுடையனவுமாகிய செடிகள் நெருஞ்சி முதலிய அனந்த மிருப்பினும் இது சூரியகாந்திதானென்பது தோன்ற இலைகள் மூன்றுவிரல்கள் சேர்ந்திருப்பனபோன்ற ரூபமுடையன வாயிருக்கு மென்றும், புஷ்பங்களுடைய தலைப்பானது வில்லைப்போல் வளைவுற் றிருக்கப்பட்ட தென்றும் சிறப்பிலக்கணத்தாற் குறித்தார். மேற்சொல்லிய செடிகளினுடைய புஷ்பங்களானவை சூரியன் எந்தப்பக்கத்திலிருக்கின்றானோ அந்தப் பக்கத்தில் முகத்தைத் திருப்பி விரிந்துக்கொண் டிருப்பனவாகும். இக்காரணம்பற்றியே இவைகளைச் சூரியனைக்கண்டால் வணங்கத்தக்கவையென்று சொல்வது வழக்கு, இந்தப் பச்சிலையினாலாக வேண்டிய விஷயத்தை யடுத்தபாட்டில் துலக்குவார். 30

கலி விருத்தம்

இத்த கையிலைச் சாற்றி லியல்புடன்
தத்தித் தாட்டிடு சாற்றிடு வேன்றினம்
அத்தி றமைந்து நாண்முடிந் தேயெடு
மற்றும் வேதை வழுத்திடு வாமரோ.

இதில் மேற்கண்ட பச்சிலையின்சாற்றில் முன் மருந்தை ஊறவைக்கும்விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) மேற்பாட்டிற் சொல்லிய இலட்சணங்களையுடைய சூரியகாந்தி யிலைச் சாற்றில் முன் கண்டங்கத்திரிச் சாற்றில் ஊறவைத்தெடுத்திருக்கின்ற மருந்தைப் பொருத்தத்தோடு போட்டு முந்தின கிரமங்களைப்போல ஐந்துநாள்வரை ஊறப்போட் டெடுத்துக் கொள்ளக் கடவாய். இனிமேற் செய்யவேண்டிய வேதைகளையுஞ் சொல்வேன் கேட்பாய். எ - று. 31

சூக்ஷுமவிளக்கம்: வெளிப்படை.

அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்

இத்தகை யியற்றியன்பா யியலுறு மருந்துதன்னை
முத்தமுன் மூசைதன்னில் முடுகவே செலுத்தித்தீயா
லுய்த்திட வூதிடங்கே யுழன்றது முருகுமுன்னம்
பத்திமுன் றயிலந்தன்னிற் பணமரை குத்து வாயே.

இதில் முன் மருந்தைச் செய்யவேண்டிய வேறுமார்க்கஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) முன் மருந்தை மேற்சொல்லிய கிரமங்களின்படியே செய்து எடுத்து இதற்குமுன் சொல்லி யிருக்கின்ற கும்பிடு கிளிஞ்சிலினாற்செய்த மூசையிலேபோட்டு அதை நெருப்புலையில்வைத்து நன்றாக ஊதக்கடவாய். அப்படி யூதினால் அந்த மருந்தானது இளகியுருகும். அப்படி யுருகிவருஞ் சமயத்தில் அதில் முன் இரண்டாங் காண்டத்திற் சொல்லியிருக்கின்ற கெந்தகத் தைலத்தில் அரைப்பணவெடை யெடுத்துவிடுவாய். எ - று.

32

சூக்ஷுமவிளக்கம்: வெளிப்படை

இதுவுமது

குத்திடக் குளகுளென்று கொதித்துழன் றுருகி யாடும், பத்திவெண் சுடரைப் போலே பளீரென விளங்கக் கண்டாய், சித்திது கெவுன மென்றே சிந்தையி லெண்ணிப் பாரே முத்திசேர் மருந்து தன்னை மூசைவிட் டெடுப்பா யன்றே.

இதில் முன்மருந்து கெந்தகத்தைலம் விட்டபின் ஆகும்விதத்தைச் சொல்கின்றார்.

(இ - ள்.) முன் சொன்னபடியே கெந்தகத்தைலத்தைவிட அந்த மருந்தானது குளகுளவெனக் கொதித்துத் தண்ணீரைப்போன்றுருகி வெண்மைநிறமாகச் சூரியனைப்போல அதிகம் பிரகாசத்தோடு தோற்றும். மாணாக்கனே! எண்ணிப்பார்க்கக்கடவாய். இதுவே மகா சித்தாகிய கெவுனகுளிகையென்று நினைத்து இந்தமருந்தை மூசையைவிட்டெடுத்துக் கொள்ளக்கடவாய். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: இந்தமட்டில் கெவுனகுளிகையானது ஒருவாறாக முடிந்துவிட்டதென்பது தோன்ற இதுவே கெவுனகுளிகை யென்று நினைத்தெடுக்கக் கடவாய் என்றார். 33

இதுவுமது

எடுத்திடு மருந்து தன்னை யியல்குரு மூலிச் சாற்றில்
தொடுத்திட நாளைந் தென்னச் சுடரொளி திகழுந்தானே
விடத்திலை தன்னிலுற்ற வியன்பெறுஞ் சாற்றி லங்கு
அடுத்தரை நாளுமுன்ன மறைகின்ற வாறு போல

இதுமுதல் முன்மூசையைவிட்டெடுத்த மருந்தைச் செய்யவேண்டிய வேறு மார்க்கங்கள் சொல்கின்றார்.

(இ ள்.) முந்தின பாட்டிற் குறித்தபடி மூசையை விட்டெடுத்த மருந்தைப் பிரகாசிக்கும்படியான, குருமூலியென்ற திருநூற்றுப் பச்சையிலைச்சாற்றில் ஐந்துநாள் ஊறவைத்தெடுக்க அந்த மருந்தில் சூரியப் பிரகாசமானது விளங்கும். பின்பு அதை ஆச்சரியமான விடத்திலைச்சாற்றில் முன் சொன்னபடியே ஐந்து நாள்வரை ஊறவைக்கக் கடவாய். எ - று. 34

சூக்ஷ்ம விளக்கம்: வெளிப்படை.

வேறு செய்யுள்.

புங்கிலையின் சாறதனிற் பொற்புடன் மருந்தை
முங்கிட வியற்றிடுவாய் முன்னியனாண் மூன்று
மங்கையர்கள்சூடுமெழில் மல்லிகையின் சாற்றில்
முங்கிடவே தாழ்த்திடுவாய் முன்னியல்நாள் மூன்றே.

இதில் வேறு ஊறல்கள் சொல்கின்றார்.

(இ - ள்.) மேலேகண்டபடி விடத்திலைச் சாற்றில் ஐந்துநாள் ஊறப்போட்டெடுத்த மருந்தை புங்கிலைச் சாற்றில் அழகோடு அமிழும்படி மூன்றுநாளும், மாதர்கள் சூட்டிக்கொள்ளப் படுவதாகிய புஷ்பத்தைத் தருகின்ற மல்லிகையிலையின் சாற்றில் மூன்றுநாளும் முந்திச் சொன்ன கிரமங்களின்படியே ஊறவைத்தெடுக்கக்கடவாய். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: வெளிப்படை. 35

இதுவுமது.

வேகமுடன் மீறியதோர் வெற்றியுறு சுத்தன்
ஆடுபகை யாகுமெழி லன்புடைய மூலி
தாகமுடன் சாற்றிலேநீ தாட்டிடு மருந்தை
மூகமுட னாளதுவும் முன்னியல்போல் மூண்றே.

இதில் மற்றொருவிதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) மிகவும் வேகத்தோடு கூடினதும் மகா வீரம்பொருந்தியதும், ஆட்டிற்குப் பகையானதுமாகிய அழகுபொருந்திய ஓர் பச்சிலையினது சாற்றிலே பிரியத்தோடு மேற்கண்ட மருந்தைப் பழையபடியும் முந்தின கிரமங்களின்படியே மூன்றுநாள்வரை ஊறவைத் தெடுக்கக் கடவாய். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: மிகவும் வேகத்தோடு கூடினதும் மகா வீரம் பொருந்தியதும் ஆட்டிற்குப் பகையானதுமாகிய ஓர் பச்சிலையாவது (ஆடுதின்னாப் பாலை) இதை ஆடு பகையாகு மூலியென்ற பரிபாஷைக் குறிப்பினாலே அறியப்பட்டது. இந்த ஆடுதின்னாப்பாலைச் சாற்றிலேயே முன் மருந்தை மூன்றுநாள் ஊறவைத்தெடுத்துக் கொள்ள வேண்டியது. 36

வேறு செய்யுள்.

வெற்றிலைச் சாற்றில்முன் விளம்பும் வாறுபோல்
தத்தியா யரைத்திடுந் தனுசர் கேண்மினோ
முத்தியா யுரைக்கின்றேன் முகிய மூன்றுநாள்
வெற்றியா வேதையும் வேறு விள்ளுவேன்.

இதிலும் வேறுவித ஊறல் சொல்கின்றார்.

(இ - ள்.) மனிதர்களே! இன்னமுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. மேற்கண்ட மருந்தைப் பழையபடியும் வெற்றிலைச் சாற்றிலே போட்டு முன் சொன்ன கிரமங்களின்படியே மூன்று நாள்வரை ஊறவைத்தெடுத்துக் கொள்வீர்களாக. வெற்றி பொருந்தும்படியாக இனிமேற் செய்யவேண்டியதான வேதைகளையுஞ் சொல்வேன் கேட்பீர்கள். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: வெளிப்படை. 37

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கேளப்பா வீரமொடு சீனக் காரங்
கெடியான கெந்தியுடன் சிலையும் பூரம்
வாளப்பா வகைக்கொவ்வோர் பணமே வாங்கி
வகையாகக் கல்வமதில் மாட்டுவாயே
தேளப்பா வளைந்ததுபோல் வளைந்திருக்குந்
திறமுள்ள மூலியின்சா றதனா லாட்டு
நாளப்பா தினமொன்று மரைத்த பின்பு
நன்றாகக் கல்வமதை வழித்திடாயே.

இதில் மேற்படி மருந்திற்குச் செய்யவேண்டிய வேறுமார்க்கங் கூறுகின்றார்.

(இ - ள்.) மைந்தனே! கேட்கக் கடவாய்! வீரம், சீனக்காரம், கெந்தி, மனோசிலை, பூரம் ஆகிய இவ்வைந்து சரக்குகளிலும் வகைக்கு ஒரு பலம்வாங்கி எல்லாவற்றையும் கிரமத்தோடு கல்வத்திற்போட்டு தேட் கொடுக்கானது வளைந்திருப்பதுபோல் வளைந்திருப்பதாகிய பலம் பொருந்திய ஓர் மூலிகையின் சாற்றைவிட்டு ஒரு நாள்வரை அரைக்கக் கடவாய். அப்படி யரைத்தவுடன் அதை வழித்தெடுத்துக் கொள்ளக் கடவாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: தேட் கொடுக்கைப்போல் வளைந்திருப் பதாகிய ஓர் பச்சிலையாவது (தேட்கொடுக்கி) இந்தத் தேட்கொடுக்கி யிலைச் சாற்றினாலேயே மேற்கண்ட மருந்துகளை ஒரு நாள்வரை அரைக்கவேண்டியது. 38

இதுவுமது.

வழித்தெடுத்துப் பீங்கானில் மருந்து தன்னை
வரிசையுறப் போட்டிடுவாய் மாணாக் காநீ
செழித்தியுடன் லிம்பழத்தின் சாற டங்கச்
செம்மையுடன் செலுத்தியதை யுலக்கி நன்றாய்
நழித்தியுடன் பணிமுகத்தி னாளொன் றாக
நாட்டியெடு மருந்ததுவு கயங்கி நிற்கும்
இமுத்தமுடன் முதற்றெளிவை யிறுத்துக் கொண்டே
யியலற்ற கழிவுதன்னைத் தள்ளுவாயே.

இதில் முன் வழித்தெடுத்த மருந்தைப் பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) மேலே சொன்னபடியே அரைத்த மருந்தை வழித்தெடுத்து ஒரு பீங்கான் பாத்திரத்திற் போட்டு அதில் செழிப்பாக லிம்பழமென்று சொல்லப் பட்ட எலுமிச்சம் பழச்சாற்றைச் செல்லத்தக்க அளவு விட்டு நன்றாகக் குழப்பி அப்படியே பனியில் ஒருநாள் மட்டும் வைத்தெடுக்கக் கடவாய். அப்படி யெடுத்துப் பார்த்தால் மேற்படி மருந்தும் சாறுங் கலந்த நீரானது ஒரு பக்கத்தில் ஒதுங்கிநிற்கும். அப்படி ஒதுங்கி யிருக்கின்ற நீரில் தெளிவான பாகத்தை யிறுத்துக்கொண்டு மற்றதை நீக்கி விடுவாய் மாணாக்கனே! இன்னமுஞ் சொல்வேன் கேள். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: மேற்கண்டபடி மருந்தையும் எலுமிச்சம் பழச்சாற்றையும் குழப்பி பனியில்வைக்க அதில் ஒரு விதநீர் இறங்கும். அந்த நீரிலேயேதெளிவை யிறுத்துக்கொள்ள வேண்டியது. இந்த நீரை யெடுத்து இன்னது செய்யவேண்டு மென்னும் விபரத்தைப்பற்றி அடுத்தபாட்டிற் கூறுவாரெனவறிக. 39

கலி விருத்தம்

இங்கி றுத்த தெளிவி லியல்புடன்
சங்கை யாகவே சாற்றிடு வாமரோ
முங்க மாகவே முன்னியல் மூன்றுநாள்
தங்கு தாத்திரி தன்னுறை மாந்தரே.

இதில் முன் இறுத்துக்கொண்ட நீரில் முன் மருந்தை ஊறவைக்கும் விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) மேலே சொன்னபடி யிறுத்துக்கொண்ட தெளிநீரில் பொருத்தத்தோடு முன் வெற்றிலைச் சாற்றில் ஊறவைத் தெடுத்திருக்கின்ற மருந்தை முந்தின கிரமங்களின்படியே மூன்றுநாள் ஊறவைத்தெடுக்கக் கடவீர்கள் மனிதர்களே! இன்னமுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை. 40

கொச்சகக் கலிப்பா

துருசொடு தாளகமுஞ் சொல்லிடுவேன் பொடிலவணம்
வரிசைமுன் கரிவளையல் வகுப்பேனே துத்தமொடு

பிரிசமா யிவையனைத்தும் பேசிடுவேன் கழஞ்சியரை
கரிசமாய்க் கல்வமதிற் கலந்திடுவீர் காளைகளே.

இதில் மேற்படி மருந்தை ஊறவைப்பதற்கான வேறு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) மனிதர் கூட்டங்களே! துருசு, தாளகம், வெடியுப்பு, கிரமத்தோடு முதற்காண்டத்தில்சொல்லியிருக்கின்ற கரிவளையல், துத்தம் ஆகிய இவ்வைந்து சரக்குகளையும் வகைக்கு அரைக்கழஞ்சி யெடுத்துக் கவனத்தோடு கல்வத்திற் போடக் கடவீர்களாக. எ - று.

சூக்ஷ¬ம விளக்கம்: வெளிப்படை. 41

வேறு செய்யுள்.

கலர் கின்றம ருந்தைக் கரிவனமாய்
மலர் கின்றவன் சாற்றினில் மாட்டிடுவாய்
நலர் கின்றிடு நாளது மொன்றாமே
வலர் கின்ற மருந்தை வழித்திடுவாய்.

இதில் முன் சொல்லிய மருந்துகளை அரைக்கும் விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) முந்தின பாட்டிற் சொன்னபடி கல்வத்திற் போட்ட மருந்துகளை கரியைப்போன்ற நிறத்தினை யுடையதாகிய புஷ்பங்களை புஷ்பிக்கின்ற ஓர் செடியினது இலைச்சாற்றை விட்டு நலம் பொருந்தும் படியாக ஒருநாள்வரை அரைக்கக்கடவாய். பின்பு அதனை வழித்தெடுத்துக் கொள்வாய். எ - று.

சூக்ஷ¬ம விளக்கம்: கரியைப்போன்றதாகிய புஷ்பங்களைப் புஷ்பிக்கக்கூடிய ஓர் செடியாவது (கறுப்புவட்டக் கிலுகிலுப்பை) இந்தக் கறுப்புவட்டக் கிலுகிலுப்பைச் சாற்றைவிட்டே மேற்கண்ட மருந்தை ஒருநாள்வரை அரைக்கவேண்டியது. 42

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வழித்த மருந்தைப் பீங்கானில் வரிசை யுறவே செலுத்தியதை
செழுத்தி யுறவே மிகுபனியிற் றிறக்க நாளோர் தினமாட்டி
கழுத்தி யுடனே தெளிவதனைக் கலந்த கழிவைத் தள்ளிடுவாய்
மழுத்தி யுடைய மருந்ததுவும் வகுப்பேன் றிரிநாள் போட்டெடுப்பாய்.

இதில் முன் அரைத்த மருந்தைப் பின் செய்ய வேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) முன்பாட்டிற் குறித்தபடி வழித்தெடுத்துக்கொண்ட மருந்தை அப்படியே பீங்கான்பாத்திரத்தில் கிரமப்படிபோட்டு அதைச் செழிப்பு மிகும்படியாக ஒருநாள் பனியில் திறமாக வைக்கக் கடவாய். அப்படிவைத்தால் அதில் ஓர்வகை நீரிறங்கும். அந்த நீரில் தெளிவான பாகத்தை யிறுத்தெடுத்துக்கொண்டு அதில் முன் ஓர்வகைத் தெளிநீரில் போட்டெடுத் திருக்கின்ற மருந்தை மூன்றுநாள்வரை போட்டெடுக்கக் கடவாய். எ - று. 43

சூக்ஷும விளக்கம்: வெளிப்படை

சந்த விருத்தம்

சானாவின்பின் ரகரிம்மொடு தனுவாங்குவ னாமுன்
வானாவொடு தகரின்முறை வகையானதிற் கடையே
பானாவொடு வெளிதோன்றிடப் படியோசையன் வல்மில்
மானாநிறை மாசைக்குரு தனிலுமப் படியே.

இதுமுதல் மேற்கண்ட கெவுனகுளிகைக்காம் சில சரக்குகளையும் செய்முறையையும் சொல்லத் தொடங்குகின்றார்.

(இ - ள்.) ச என்ற எழுத்திற்குப்பின்னெழுத்தோடு ரகரத்தையும், ம் என்ற எழுத்தையும் சேர்த்து அதனாலென்ன பெயரமையுமோ அந்தப்பெயரோடு, நா என்ற எழுத்திற்கு முதலெழுத்தையும், வகரத்தையும், தகரத்திற்குமுறையான வெழுத்தின் ஈற்றெழுத்தையும் சேர்க்க என்னபெயரமையுமோ அந்தப் பெயரை முதலிற் சேர்த்து, அதனாலென்ன பெயரமையுமோ அந்தப்பெயருள்ள சரக்கையும், வில்லையெடுத்து வளைக்கப்பட்ட ஒருவனுடைய பெயரைக்கொண்ட சரக்கையும், பொன் வித்தென்று சொல்லப்பட்ட ஓர் சரக்கையும், பூமியில் கீர்த்தி மிகுந்தவனுக்குள்ள வலம் என்ற பதத்தில் முதலெழுத்தை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாக பகரத்தைச்சேர்த்து அதனால் வந்த பெயரைக் கொண்ட நிறையாக எடுத்துக்கொள்ளக் கடவாய்.

சூக்ஷும விளக்கம்: ச என்ற எழுத்திற்குப் பின்னெழுத்தாவது (சா.) ரகரமாவது (ர.) ம், என்ற எழுத்தாவது (ம்.) ஆக இம்மூன்றையுஞ் சேர்க்க (சாரம்) என்றானது நா என்ற எழுத்திற்கு முதலெழுத்தாவது (ந.) வகரமாவது (வ.) தகரத்திற்கு முறையானவெழுத்து ச இதன் ஈற்றெழுத்து

(ச்) ஆக இம்மூன்றையுஞ்சேர்க்க (நவச்) என்றானது. இதைமுந்தின பெயரின் முதலிற்சேர்க்க (நவாச்சாரம்) என்றானது. இதுவே முதலிற் சொன்ன சரக்காம். வில்லையெடுத்து வளைக்கப்பட்டவனுடைய பெயராவது வீரன், இந்தப்பெயர்கொண்ட சரக்காவது (வீரம்), இதுவே இரண்டாவது சொன்ன சரக்காம். பொன் வித்தென்று சொல்லப்பட்ட குருவாவது. 6 வது 7 வது காண்டங்களிற் சொல்லியிருக்கின்ற (முப்புக்குரு) இதுவே மூன்றாவது சொன்ன சரக்காம். வலம் என்ற பதத்தில் முதலெழுத்தை நீக்கிவிட லம் என்றானது இதனோடு ப என்ற எழுத்தைச்சேர்க்க (பலம்) என்றானது. இதைக் கீர்த்தியுள்ள புருஷனுடைய பலமென்றதனால் கீர்த்தியுடையவன் அரசன். இவனுக்குப் பலம் இரத, கஜ, துரக, பதாதியென நான்காகையால் அளவு நான்கென ஏற்பட்டது. இந்த நிறை எடு, எனவே மேற்சொல்லிய மூன்று சரக்குகளிலும் ஒவ்வொன்றிலும் நான்கு என்ற அளவு எடுத்துக்கொள்ள வேண்டுமென ஏற்பட்டது. ஆதலால் நவச்சாரத்தில் நான்கு நிறையும், வீரத்தில் நான்கு நிறையும், முப்புக்குருவில் நான்குநிறையும் எடுத்துக் கொள்ள வேண்டியது. நிறை விபரத்தைப் பின் துலக்குவார். 44

வண்ணச் சந்தவிருத்தம்.

திரையி னுங்கும் பொங்குஞ் சிங்குந்
திக்குறு தந்தந் தெருட்டி மேலெழும்
நுரையெழ வங்குங் கங்கும் பொங்கும்
நுட்பம தென்றும் வெருட்டு வீரெழு
தரையினி லுங்குஞ் சங்குஞ் சங்குந்
தத்தி யுழன்று நத்து வாயுறும்
விரைவுட னங்குந் தங்குந் துங்கன
வெற்றி யுழன்று மிதந்த மென்னுரை யறிவாயே.

இதில் ஓர் சரக்கை வருணிக்கின்றார்.

(இ - ள்.) சமுத்திரத்திலுண்டாகும் அலைகளினிடமாக அமுங்கி யமுங்கி எழுந்து அதிகரித் திருக்கப்பட்டது. மிருதுவான தன்மையையுடையது, அஷ்டதிக்குகளிலுமுள்ள யானைகளினது தந்தங்களைப்போன்ற ரூபத்தைப்பெற்று வெள்ளை நிறத்தோடுகூடி நீரிலிருந்து மேலே யெழும்பத்தக்கது, ஜலத்தில் புதிய நுரை யுண்டாகும்படியாக ஒன்றோடொன்றுமோதி அங்குமிங்குமாகப் புரண்டெழுந் தன்மையுடையது, மிகவும் நுட்பமான தன்மை

யையுடையது. தூரத்திலிருந்து பார்ப்பவர்களை தன்னுடைய வெள்ளை ரூபத்தினாலே யாதோவெனப் பயப்படும்படி செய்வதான வீரத்தன்மை பொருந்தியது, சமுத்திரத்தின் மத்தியிலே நீரினடி யிலுள்ள தரைப்பாகங்களில் அமுங்கி யமுங்கி யெழும்படியான சங்கினங் களுடன் அவைகளின் வாயில் அலையினுடைய வேகத்தினாலே தாவித் தாவிப் போய் மோதத்தக்கது, வேகத்தோடு அந்தச் சமுத்திரக் கரைகளினோரங்களி லெல்லாம் வந்து ஒதுங்கித் தங்கியிருக்கப்பட்டது. இதை மகா வல்லமை பொருந்திய சமுத்திரத்திலே மிதப்பதாகிய கடல்நுரை யென்றறியக் கடவாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: மேற்கண்ட குணங்களையுடைய சரக்கானது (கடல்நுரை) இதைப் பாட்டின் ஈற்றில் "நுரையறிவாயே" யென்றதனாலுங் காண்க. இதன் நிறை முதலிய விபரத்தை அடுத்தபாட்டிற் கூறுவாரென வறிக. 45

வேறு செய்யுள்

மேதினி தன்னிலே விளங்கு மாந்தரே
ஆதியால் மொழிந்திடு மடைவு தன்னிலே
கோதியே யெடுத்திடுங் கூறு வேணிறை
பாதியாந் திரிதனிற் பார்த்த றிந்திடும்.

இதிற் றேற்சொல்லிய சரக்கின் நிறை முதலியன கூறுகின்றார்.

(இ - ள்.) இப் பூமண்டலத்திலே தங்கிப் பிரகாசிக்கின்ற மனிதர் கூட்டங்களே! மேலுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. மேற்சொல்லிய இலட்சணங்கள் முதலியவைகளாற் பொருந்திய கடல்நுரையில் திரியிற் பாதியென்ற அளவு எடுத்துக்கொள்ளக் கடவீர்கள்.

சூக்ஷுமம விளக்கம்: திரிதனிற் பாதியென்ற அளவு எடுக்கவேண்டுமென்றதனால் திரியென்பது மூன்று, இதிற் பாதி ஒன்றரை. ஆகவே கடல்நுரையி ஒன்றரையென்ற அளவு எடுத்துக்கொள்ள வேண்டுமென வறிக. 46

நொண்டிச் சிந்து

கானமலை மீதி லுற்றோன் - எழிலுடன்
கருமையன் மேல்வனங் கட்டியுடையான்

35

வேனலுடன் விளைபவ னாம் - மேனியெங்கு
மினுமினுத் தோன்கரும்பொன் வலியிழுத்தோன்
தானதுவே முனமியா னே - சத்தெடுக்கச்
சாற்றுகிறேன் நேர்த்தியுடன் பார்த்தறிந்திடே
தாளமுறுஞ் சத்ததிலே - நிறையது
தயவுட னெடுத்திடு வாயிணையே.

இதில் ஓர் சரக்கும் நிறையுங் கூறுகின்றார்.

(இ - ள்.) காட்டிடங்களிலே பொருந்தி யிருக்கப் பட்ட மலைகளில் தங்கி யிருப்பது. மேனி அழகான கறுப்பு நிறமாகவும், கட்டி ரூபமாகவு மிருக்கப்பட்டது. உஷ்ணத்தோடு உண்டாகுந் தன்மையை யுடையது. தேகமுழுதும் மினுமினுப்பான பிரகாசமாய்த் தோற்றப்பட்டது. இரும்பினுடைய வல்லமையை யொடுக்கித் தன்னிடத்தே யிழுத்துக் கொள்ளத்தக்கது, இத்தகைய விலட்சணங்களை யுடைய ஓர் சரக்கினது சத்தை யெடுக்கும்படியான விதத்தைச் சொல்வேன். அழகாகப் பார்த்தறிந்து கொள்ளக்கடவாய். மேற்கண்ட சரக்கினுடைய சத்திலே நேயத்தோடு இரண்டு என்ற அளவு எடுத்துக்கொள்வாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: மேற்குறித்த இலட்சணங்களை யுடையது (காந்தம்.) இதை முதற்காண்ட முதலிய விடங்களிற் சொல்லி யிருக்கின்ற குறிப்பினாலுங் கண்டுணர்ந்து கொள்க. இந்தக் காந்தச் சத்திலேயே இரண்டு என்ற அளவு எடுத்துக்கொள்ள வேண்டியது. இந்தக் காந்தச்சத்தைச் சுண்ணமாக்கி மற்ற சரக்குகளோடு சேர்க்கும்படி பின்னே சொல்லுவதாலே இந்தச் சத்திற்கு நிறை விபரம் இன்னதென ஏற்படாவிடினும் மற்ற சரக்குகளுக்குப் பின்னால் ஓரிடத்தில் விராகனெடைக் கணக்குச் சொல்வதால் இதற்கும் அந்தக் கணக்கையே கொண்டு இந்தக் காந்தச்சத்தில் இரண்டு விராகனெடை யெடுத்துக் கொள்ள வேண்டும். 47

வேறு செய்யுள்.

சத்ததின் முன்னமே சாற்றுகின் றேனவ்
வெற்றியாம் வீரத்தின் மெழுகு தன்னிலே
அத்திர மரிசியொன் றதனை யன்புடன்
சுற்றிமுன் குருவிலை தோய்த்து மேலிடே.

இதில் முன்னெடுத்த சத்தைப் பின் செய்ய வேண்டிய விதங் கூறுகின்றார்.

(இ - ள்.) மேற்கண்டபடி யெடுத்துக்கொண்ட காந்தச்சத்தில் முன் இரண்டாங் காண்டத்திற் சொல்லியிருக்கின்ற வீரத்தன்மை பொருந்திய வீரமெழுகிலே ஒரு அரிசியெடை யெடுத்துப் பிரியத்தோடு திருநூற்றுப்பச்சை யிலைச்சாற்றை விட்டுக் குழப்பி அந்தக் குழம்பை மேலே கவசமாகப் பூசிவிடக் கடவாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இரண்டாங் காண்டத்திற் சொல்லியிருக்கின்ற வீரமெழுகில் ஒரு அரிசியெடை யெடுத்து திருநூற்றுப் பச்சையிலைச் சாற்றிற் குழப்பி அந்தக் குழம்பை மேற்கண்ட காந்தசத்திற்குப் பூசிக் கவசஞ் செய்யவேண்டும். 48

இதுவுமது

மூங்கையின் மூசையின் மூடி வைத்துநீ
காங்கையின் கனற்புட மியற்று கைமுழம்
வீங்கமா யரையென விகிதங் கண்டிடு
தூங்கியே நீற்றது சுண்ண மாகுமே.

இதில் முன் கவசஞ் செய்த காந்தச் சத்தைப் பின்
செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) மேலே சொன்னபடி கவசஞ்செய்த காந்தச்சத்தைக் கும்பிடு கிளிஞ்சியினாற் செய்த மூசைக்குள்ளே போட்டு மேல்மூடி கொண்டுமூடிச் சீலைமண் செய்து அரைமுழப்புடந் தயாரித்து அதன் மத்தியில் வைத்து நெருப்பையிட்டுப் புடம்போடக் கடவாய். அப்படிப் போட்டால் அதற்குள்ளிருக்கும் காந்தச் சத்தானது வெந்து சுண்ணமாகிவிடும். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: மூசைக்குச் சீலைமண் செய்யும்படி பாட்டிற் சொல்லப்படவில்லை யாயினும் அனுபவக் கிரமநோக்கி சீலைமண் செய்யும்படி உரையில் எழுதப்பட்டது. ஆயினும் தெரிந்தவர் களிடமும் கேட்டுச்செய்து கொள்வார்களாக. 49

இதுவுமது.

சத்ததி னிறையது சாற்று வேனொன்று
மற்றொரு வேதையும் வழுத்தக் கேண்மினோ

சுற்றுவன் சிறகிலான் சுழன் றெழும்புவன்
கத்துவன் காலிலான் கடிதி லோடுவன்.

இதில் மேற்பாட்டிற் சொன்ன சுண்ணத்தில் எடுக்கவேண்டிய நிறையும் மற்றொரு சரக்கின் வருணனையுங் கூறுகின்றார்.

(இ - ள்.) மேற்பாட்டிற் சொல்லிய காந்தச்சத்துச் சுண்ணத்தில் எடுத்துக் கொள்ளவேண்டிய நிறை ஒன்றாகும். இனி வேறொரு மார்க்கத்தையும் சொல்வேன் கேட்பீர்களாக. ஓரிடத்திலிராமல் பல விடங்களிலும் நழுவிச் செல்லப்பட்டது. அப்படிச் சென்றாலும் பறக்கும்படியான சிறகுகளில்லாதது, சுற்றிச் சுற்றி யெழும்படியானது, நெருப்பு முதலியவைகளிலிட்டாற் கத்துஞ் சுபாவமுடையது, வைத்த விடத்திற்றங்காமல் பல விடங்களிலும் ஊர்ந்து வேகமா யோடப்பட்டது. அப்படி யோடினாலுங் காலில்லாதது.

சூக்ஷுமவிளக்கம்: மேலே சொல்லிய காந்தசத்துச் சுண்ணத்தில் ஒன்று என்ற அளவு எடுத்து முன் எடுத்திருக்குஞ் சரக்குகளோடு சேர்த்துக் கொள்ள வேண்டும். இந்தப் பாட்டில் இனி எடுக்கவேண்டிய வேறொரு சரக்கைப்பற்றி வருணித்தார். மேற்சொல்லிய இலட்சணங்களினால் சரக்கின்னதெனத் தெரிந்தாலும் இன்னும் அடுத்த பாட்டிலும் வருணிப்பதால் அங்கே இதன் பெயரை யின்னதெனக் கூறுவார். 50

இதுவுமது

துள்ளுவன் றுடிப்பவன் சுழல்வன் மாந்தர்வா
யுள்ளினிற் புகுந்திடி லுறைந்தி டாலுடன்
வெள்ளிடை நோக்குவன் வீர சூரனாம்
அள்ளியே நிறையெடு அறைமுன் வாறுபோல்.

இதில் மேலே வருணித்துவந்த சரக்கினிறை முதலியன கூறுகின்றார்.

(இ - ள்.) இன்னும் முந்திய பாட்டிற்சொன்ன சரக்கானது துள்ளியுந் துடித்துந் திரியும்படியான தன்மையை யுடையது. வட்டமிட்டுச் சுழன்று கொண்டிருக்கப்பட்டது. மனிதர்களுடைய வாய்க்குள்ளே புகுந்தால் வயிற்றிற் சிறிது நேரமுந் தங்காமல் வெளியே ஓடிவந்துவிடுந் தன்மையை யுடையது, மகா வீரத்தன்மை பொருந்தியது, இத்தகைய இலட்சணங்களை யுடைய சரக்கை யின்னதென வுணர்ந்து

அதில் முந்தின காந்தச்சத்துச் சுண்ணத்தின் நிறை எடுத்துக்கொள்ளக் கவாய். எ - று.

சூக்ஷூம விளக்கம்: மேற்சொல்லிய இலட்சணங்களை யுடைய சரக்கானது (இரசம்.) இதை இதற்கு முன் பல விடங்களில் வருணித்திருப் பதினாலுங் காண்க. இந்த ரசத்தில் முந்தின காந்தச்சத்துச் சுண்ணத்தின் நிறை எடு என்றதனால் முந்தின காந்தச்சத்துச் சுண்ணத்தினிறை ஒன்றாதலால் இதிலும் அளவு ஒன்றே யெடுத்துக் கொள்ளவேண்டு மெனவறிக. ஆகவே இரசம் நிறை ஒன்று எடுத்துக் கொள்ள வேண்டுமென ஏற்பட்டது. 51

வேறு செய்யுள்.

செப்பமுட னிப்படியே செப்புமருந் தெல்லாங்
கைப்பட விராகனெடை யாகவெடு காளை
அப்புப்பு வென்றமொழி யண்டரண்ட மெங்கும்
ஒப்பிடத் திரிந்துலவ வோதும்வகை கேண்மோ.

இதில் மேற்சொல்லிவந்த சரக்குகளுக்கெல்லாம் நிறை முதலிய விபரஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) ஒழுங்கோடு மேலே சொல்லிவந்த மருந்துகளை யெல்லாம் கையினாலே விராகனெடைக் கணக்காக எடுத்துக்கொள்ளக் கடவாய் மைந்தனே. ஜலமும் உப்புங் கலந்தால் எவ்விதம் பேதந் தோன்றாமல் ஜலரூபமா யிருக்குமோ அவ்வாறே மானிடர் தேவருலகு முதலிய விடங்களிற் சென்றாலும் மனிதரென்ற பேதந் தோன்றாமல் தேவரே யென்று மதிக்கும்படியாகச் செய்கின்ற கெவுன குளிகையின் வல்லபத்தால் எங்குஞ் சஞ்சரித்து வரும்படியான மார்க்கத்தையும் சொல்வேன் கேட்பாயாக. எ - று.

சூக்ஷூம விளக்கம்: மேலே சொல்லிவந்த மருந்துகளுக்கு நிறை விபரமில்லாமற் சொல்லிவந்தபோதிலும் இந்த இடத்தில் அவைகளுக்கெல்லாம் விராகனெடைக் கணக்கென்பதைத் துலக்கி விட்டார். ஆனபடியால் மேற்கண்ட சரக்குகளையெல்லாம் விராகனெடைக் கணக்காக எடுத்துக் கொள்ள வேண்டியது. இந்த மருந்துகளைச் சேர்த்துச் செய்யு மார்க்கத்தினாலே கெவுன குளிகை அநேகமாகத் திடப்பட்டு விடுமாதலினாலே இந்த இடத்தில் கெவுன

குளிகையின் வல்லபத்தால் தேவருலகு முதலிய விடங்களிலும் பேதமில்லாமல் சஞ்சரித்து வரும்படியான மார்க்கத்தைச் சொல்வேன் கேள் என்றார். 52

கலி விருத்தம்

கெந்தி தன்னிற் கிளத்துந் தயிலமே
முந்த வேயெடு காளை முயலக்கேள்
சொந்த மாக்வே சொன்னிறை ரெண்டதில்
விந்தை யாகவே விட்டரைத் தேவழி.

இதில் மேற்சொல்லிவந்த சரக்குகளை யெல்லாம் அரைக்கும் விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) மைந்தனே! இன்னமுஞ் சொல்வேன் கேட்பாய். இரண்டாங் காண்டத்திற் சொல்லிய கெந்தகத் தைலத்தில் முந்திச் சொல்லிவந்த சரக்குகளின் அளவுக் கிரமப்படியே இரண்டு என்ற நிறை எடுத்து முந்தின சரக்குகளைக் கல்வத்திற்போட்டு அதில் இந்தத் தைலத்தை விட்டு வேடிக்கையாக நன்றாயரைத்து வழித்தெடுத்துக் கொள்வாய். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: முந்திச் சொல்லிவந்த சரக்குகளின் அளவுக் கிரமமாவது விராகனெடைக் கணக்காதலால் இந்தக் கெந்தகத் தைலத்தினளவும் விராகனெடைக் கணக்கென்றேற்பட்டது. ஆகவே கெந்தகத் தைலத்தில் விராகனெடை இரண்டு எடுத்து மேற்கண்ட சரக்குகளுடன் விட்டு அரைக்கவேண்டுமெனவறிக. இம்மருந்துகளைக் கெந்தகத் தைலம் விட்டரைத்து வழித்தெடுத்துக் கொள்ளக் கடவாய் என்ற மட்டில் நிறுத்தி யிருப்பினும் அதை யின்னது செய்யவேண்டு மென்னும் விபரத்தைப்பற்றி அடுத்த பாட்டிற் கூறுவார். 53

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

வழித்திடு மருந்து தன்னை வடிவுறுங் கெவுனந் தன்னில்
செழித்தியாய் மேலிற்பூசிச் சிறந்திடுங் கையில் வைத்து
கழித்திடுங் களியின்சீலை கனக்கவே மேலி லிட்டு
ஒழித்திடு முலையி னுள்ளே தினமரை யூது வாயே.

இதில் முன் வழித்தெடுத்த மருந்தை யின்னது செய்யவேண்டு மெனச் சொல்கின்றார்.

(இ - ள்.) முன்பாட்டிற் குறித்தபடி வழித்தெடுத்து மருந்தை முன் ஓர் வகை நீரில் ஊறவைத்தெடுத்திருக்கின்ற கெவுன குளிகையின் மேலே செழுமையாகப்பூசி அதையெடுத்துச் சிறப்புப் பொருந்திய கையிலே வைத்துக் கொண்டு மிகுதியாகிய களிச்சீலையினாலே கனமாகச் சீலைமண்செய்து அதை நெருப்புலையில் வைத்து அரை நாள்வரை ஊதக்கடவாய். எ - று. 54

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை.

இதுவுமது

ஊதியே குகையமர்ந்து உலர்ந்தது நீற்ற பின்பு
வீதியே கவசம் வாங்க வியன்மணி மணியா நிற்குங்
கோதியே மணிக டன்னைக் குறியுடன் பதனம் பண்ணு
ஊதியே கிட்டம் போல வுலர்ந்தது சிறிது நிற்கும்.

இதில் முன் உலையில் வைத்தூதும் மருந்து பின்னாகும் விதத்தைச் சொல்கின்றார்.

(இ - ள்.) முன் சொன்னபடியே மருந்தைக் குகையில் வைத்துக் குகை யழுகும்படியாக வூதிக்குகை நெருப்பானது அமர்ந்து நீற்றுப்போன பிற்பாடு அதற்குள்ளிருக்கு மருந்தை யெடுத்துக் கவசத்தை நீக்கிப் பார்த்தால் உள்ளிருந்த மருந்தானது சிறுசிறு மணிகளாகிப் பிரகாசித்துக் கொண்டிருக்கும். அவ்விதம் பிரகாசித்துக் கொண்டிருக்கப் பட்ட மணிகளைக் குறிப்போடு எடுத்துப் பத்திரப் படுத்தக் கடவாய். அந்தக் குகைக்குள் இந்த மணிகளைத் தவிர சில பாகங்கள் கிட்டத்தைப்போல சிறிது சிறிதாக உதிர்ந்து கிடக்கும். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: உலை நெருப்பானது எல்லாம் எரிந்து கரியெல்லாம் நீற்று நன்றாக ஆறினபிற்பாடு குகையை யெடுத்துக் கவசத்தை நீக்க வேண்டும். அப்படி நீக்கின பிற்பாடு அதற்குள் மணியாக விருக்குமருந்தை யெடுத்துப் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டும். இதைத் தவிரக்கிட்டம்போற் சிறிது உதிர்ந்துகிடக்கு மென்றதனால் அவைகளை யெடுத்து இன்னது செய்யவேண்டு மென்னும் விபரத்தைப்பற்றி அடுத்தபாட்டிற் கூறுவா ரெனவறிக. 55

இதுவுமது.

கிட்டம்போ லுற்ற மேன்மை கெடியுறு மருந்து தன்னைத்
திட்டாய்ப்பதனம் பண்ணு செப்பநா வரிதுவேதை
துட்டனாந் தாம்பூ ரத்திற் சொன்னிறை யாயி ரத்தில்
அட்டமா வொன்றை யீய வழகுறு மாசை யாமே.

இதில் கிட்டம் போலுதிர்ந்து கிடக்குமென்று சொன்ன மருந்தினுடைய வேதை சொல்கின்றார்.

(இ - ள்.) மேலே கிட்டம்போ லுதிர்ந்து கிடக்குமென்று சொன்ன தாகிய சிறப்புப் பொருந்திய மருந்தைத் திடத்தோடு எடுத்துப் பத்திரப்படுத்தக் கடவாய். இதனுடைய வேதைகளை நாவினாற் சொல்வதரிதாகும். இந்த மருந்தை அழுக்கு நிறைந்திருப்பதாகிய தாம்பிரத்திலே ஆயிரத்திற் கொன்று கொடுத்தால் அந்தத் தாம்பிரமானது மிகவும் அழகு பொருந்திய தங்கமாகும். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை. 56

இதுவுமது

ஆணியும்பன்னிரண்டென் றறைகுவர் வணிகரானோர்
ஆணதோ பெண்ண தோவென் றையுற வெய்தி மாந்தர்
காணுதற் கரிதா நின்ற கடவுளின் சித்த மின்னங்
காணியுங் கோடி யாகக் கருவதைக் கழறக்கேண்மோ.

இதில் மேற்சொன்னபடியாகிய பதங்கத்தின் மாற்று முதலியன சொல்கின்றார்.

(இ - ள்.) மேற்சொல்லியபடி யாகிய தங்கத்தைச் செட்டிகளா யிருக்கப்பட்டவர்கள் பன்னிரண்டு மாற்றுடையதெனச் சொல்வார்கள். இது இவ்விதமானது மனிதர் கூட்டங்களால் ஆணா? பெண்ணா? வென்று சந்தேகித்து இன்னதெனப் பார்ப்பதற்கருமையாக நிலைபெற்று நின்ற கடவுளுடைய கிருப கடாட்சமாகும். இன்னும் காணியென்னுஞ் சிறிய அளவினை யுடைய பொருளும் கோடி யென்னும் பெரிய அளவினையுடைய பொருளாவதற்கு ஆதாரமாகிய ஓர் மூலத்தைச் சொல்வேன் கேட்பீர்களாக. எ - று.

சூக்ஷ¬ம விளக்கம்: மேற்கண்ட மருந்தை தாம்பிரத்தில் ஆயிரத்திற் கொன்றீய பன்னிரண்டு மாற்றாகிய தங்கமானது தெய்வானுக்கிரகத்தா லாகையால் இது இப்படியானது கடவுளுடைய கிருபாகடாட்ச மாகுமென்றார். காணிக்குக் கோடியாகப்பட்ட ஓர் முலத்தைச் சொல்வேன் என்றது இந்த மருந்தினால் பின்னாலாகப்பட்ட அநேக விதமாகிய ஆச்சரியந்தங்கிய வேதைகளைக் குறித்தென்க. 57

நொண்டிச் சிந்து

கனகமின் மருந்துதனை - ஆயிரத்திற்
கதியுட னொன்றெனவுங் காட்டிடவே
வனமது விரண்டோடி - செம்பெனவே
வண்மையுடன் றோன்றிடுமே கன்மையுறவே
தனமுறு தாம்பிரத்தைத் - தாம்பிரத்திற்
றாக்கிடுவாய் காணிக்கொரு கோடியெனவே
இனமுட னிரணியாம் - வேதைவே
றியற்றுவேன் கெவுனமே யியல்புடனே.

இதில் மேற்கண்ட மருந்தின் வேறுவேதை சொல்கின்றார்.

(இ - ள்.) மேற்சொல்லிய மருந்தைத் தங்கத்தில் ஆயிரத்திற் கொன்றுவேகமாகக் கொடுத்தூதினால் அந்தத் தங்கத்தினிறமானது பேதப்பட்டு வளப்பம் பொருந்திய செம்பாய்ப் பிரகாசிக்கும். இதை தங்கச் செம்பென்றுசொல்லப்படும். இந்தத் தங்கச்செம்பை சாதாரணத் தாம்பிரத்தில் கோடிப்பங்கிற்குக் காணிப்பங்கு கொடுத்தால் அவ்வளவும் உயர்ந்த தங்கமாகிவிடும். இனி கெவுன குளிகையைப் பற்றின வேறு வேதைகளையுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. எ - று.

சூக்ஷ¬ம விளக்கம்: இதிற் சொல்லிய தங்கச் செம்பினது பெருமைக்கு அளவேயில்லை. அதைத் தாம்பிரத்தில் கோடிக்குக் காணி கொடுத்தால் உயர்ந்த தங்கமாகி விடுமென்று சொன்னதனாலேயே அதன் பெருமை நன்கு விளங்குகின்றது. இனிமேல் கெவுன குளிகையைப் பற்றின வேறு வேதைகளைச் சொல்வேன் என்றதனால் முன் மணி மணியாக ஆகியிருக்கும் கெவுன குளிகையைப் பின் செய்யவேண்டிய விதங்களைச் சொல்வாரெனவறிக. 58

சந்த விருத்தம்

சற்றானதை விரைவாகவே தடிமூசையிற் செலுத்தி
உற்றாகவே யுலையூதிட வொளிவாகிய தருணம்
குற்றாப்பண மொன்றேமுனங் கூறியதோர் தயிலம்
உற்றாகக்கண் விட்டாடியே யொன்றாகிடும் நன்றாய்.

இதில் முன் கெவுன குளிகையைச் சம்பந்தித்த வேறு மார்க்கஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) முந்திச் சிறு மணிகளாகி யெடுத்து வைத்திருக்கின்ற கெவுன குளிகையாகிய மருந்தை பலம் பொருந்திய மூசையிற் போட்டுப் பொருத்தமாக உலையில் வைத்தூத அவை யெல்லாம் உருகிப் பிரகாசிக்கும். அப்படி நன்றாயுருகிப் பிரகாசிக்கின்ற தருணத்தில் முன்னேசொல்லிய இரண்டாங்காண்டத்தி லுள்ளதான கெந்தகத் தைலத்தில் ஒரு பணவெடையெடுத்து அதில்விடக் கடவாய். அப்படி விட்டவுடன் இந்தக் கெந்தகத்தைலமும் முன் மருந்தும் ஒன்றாக மிஸ்ரமித்துவிடும். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை. 59

இதுவுமது

ஆடுமணி யதனைக்கூ டூாகுமெருத் தனிலே
சாடென்னவே சாய்த்தேயெடு தழல்காங்கையுந் தணிபின்
ஆடுமெழிற் சித்தானது மஷ்டமுனக் கடிமை
நாடுந்தொழில் வகையானது நவில்வேன்பினு நயமா.

இதில் முன் உருகிக் கொண்டிருக்கு மருந்தைப் பின் செய்யவேண்டிய விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) முன் பாட்டிற் சொன்னபடி கெந்தகத்தைலம்விட்டு உருகிக்கொண்டிருக்கு மருந்தை அப்படியே யெடுத்துக் குழகுழப்பாகிய சாணத்திலே சிறு குழிசெய்து அதிற் பொருந்தும்படியாக விடக் கடவாய். அப்படிவிட்டு நெருப்பினது சூடானது ஆறினபிற்பாடு அதை யெடுத்துக் கொள்ளக் கடவாய். அப்போது எல்லாந் திரண்டு ஒரே மணியாகியிருக்கும். இந்த மணியைத்தான் கெவுனகுளிகை யென்று சொல்லப்படும். இதைப் பத்திரப்படுத்தக் கடவாய் இதனால் உனக்கு எட்டுவிதமாகிய சித்துக்களும் அடிமையாகி ஆடும். "இனி இந்தக் கெவுனகுளிகையால் நடக்கும் தொழில் வகைகளைப் பின்னே ஓரிடத்திற்கூறுவேன். அங்குக் கண்டுணர்ந்து கொள்வாயாக. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இப்பாட்டில் சாணமென்று சொல்வதற்குப் பதிலாகக் கூழாகுமெருத்தனிலே யென்றது பரிபாஷை நோக்கியென்க. இந்தச் சாணத்தையெடுத்து ஓர் மொத்தையாக உண்டைசெய்து வைத்துக்கொண்டு அதில் உருகியிருக்கின்ற மருந்தானது கொள்ளும்படியான ஒரு சிறுகுழிசெய்து அதில் அம்மருந்தை யெடுத்துச்சாய்க்க வேண்டும். அப்படிச் சாய்த்தவுடன் சிறிதுநேரத்தில் அதிலுள்ள சூடானது ஆறித் திரண்டு ஓர் மணிரூபமாகக் கட்டிவிடும். இந்த மணிதான் கெவுனகுளிகை. இதையே யெடுத்துப் பத்திரப்படுத்த வேண்டும். இதனால் அஷ்டமகாசித்தும் கைகூடும். இதனாலாகுந்தொழில் மார்க்கங்களைப் பின்னோரிடத்திற் சொல்வேனென்றதனால் அவ்விபரங்களைப் பத்தாங்காண்டத்திற் றெளிவாகச் சொல்வாரெனவறிக. இத்தோடு இம்முறையை முடித்துவிட்டார். இனி ஞானத்தைப்பற்றிச் சொல்லி விட்டுப் பின்னால் ஓர் முறை சொல்லத் தொடங்கு கின்றார். 60

ஞானம்

61, 62, 63, 64, 65, 66, 67, 68 - ஆம் பாட்டுகள். இந்த எட்டுச் செய்யுட்களினாலும் ஞானத்தைப்பற்றிச் சொல்கின்றார். வேண்டினோர் மூலநூலைப் பார்த்து தெரிந்தோர்களிடங் கேட்டுக்கொள்வார்களாக.

இந்திரஜாலமை.

கலி விருத்தம்

அளக்க லுற்றிடு மாடவர் கேண்மினோ
புளக்க மாகப் புகலுவேன் வேதைகள்
மளக்க மாக மறைப்புமை தன்னிலே
இளக்க மாக வெடுவிணை முன்னிறை.

இதில் இம்முறைக்காம் ஓர் மருந்தும் நிறையுஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) தவமகிமையை யுடைய பெரியோர்களால் இவ்வளவென்று கணக்கிட் டறியும்படியான மனிதர் கூட்டங்களே! அனுபவமாக இனிவேறு வேதைகளைச் சொல்வேன் கேட்பீர்களாக. எட்டாங்காண்டத்திற் சொல்லியிருக்கின்ற ஜால மையில் அன்போடு இரண்டு என்ற அளவு இதற்குமுன் முறையிற் சொல்லிவந்த கிரமங்களின்படியே யெடுத்துக்கொள்ளக்கடவாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இந்த மையை இரண்டு என்ற அளவு முன் முறையின் கிரமங்களின்படி எடு எனவே முந்தின முறையில் விராகனெடைக் கணக்குச் சொல்லப்பட்டிருப்பதால் இதையும் விராகனெடைக் கணக்காகவே யெடுக்கவேண்டுமென ஏற்பட்டது. ஆகவே மேற்கண்ட ஜாலமையில் இரண்டு விராகனெடை யெடுத்துக் கொள்ள வேண்டியது. 69

இதுவுமது

கோடி முன்னுங் குழிபின்னுங் கூட்டியே
சோடி சாதிக் கருமையின் சொல்லுவேன்
நீடி யான நிணமது தன்னிலே
போடி யாகவே போட்டெ யுலக்கிடு.

இதில் மேற்படி மையின் செய்முறை சொல்கின்றார்.

(இ - ள்.) கோடியென்னும் பதத்தின் முதலெழுத்தையும், குழியென்னும் பதத்தின் பின்னெழுத்தையுங் கூட்டி அதனாலென்ன பெயரமையுமோ அப்பெயருள்ள ஜெந்துவில் கருமையா யிருக்கப்பட்ட ஆணும் பெண்ணுமாகிய இரண்டினுடைய நீட்சி பொருந்திய கொழுப்பிலே முன்பாட்டிற் குறித்தபடி யெடுத்த இரண்டு விராகனெடை மையையும் போட்டுக்கலக்கக் கடவாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: கோடி யென்னும் பதத்தின் முதலெழுத்தாவது (கோ.) குழியென்னும் பதத்தின் பின்னெழுத்தாவது (ழி.) இவ்விரண்டெழுத்துக்களையுஞ்சேர்க்க (கோழி) யென்றானது. இதுவே மேற்குறித்த ஜெந்துவாம். இதைக் கருமையென்றதனால் (கருங்கோழி) யென்றேற்பட்டது. இதில் ஜோடியென்றதனால் சேவலும் பெட்டையுமென ஏற்பட்டது ஆகவே கருங்கோழியில் சேவலும், பெட்டையுமாகிய இரண்டினது கொழுப்பையும் எடுத்துக்கொள்ள வேண்டியது. 70

திருப்புகழ்ச் சந்த விருத்தம்.

சவுரிய முடனே தமனியச் செப்பிற் றனியாக்கு
சிவிகையி னேறு சுமப்பவ னெற்றி சிரமீதிற்
கவினுறு கடுகினளவிடு கதிசேர் காளைகளே
மவுனமாய் மனுவோர் மருண்டு மயங்கி மவுலுவரே.

இதுமுதல் மேற்படி மையின்வேதை சொல்கின்றார்.

(இ - ள்.) மேற்சொல்லியபடி கருங்கோழிக் கொழுப்பிற்கலக்கிய மையைச் சுகத்துடனே பொன் சிமிழில் பத்திரப்படுத்தக் கடவாய். அதன்மேல் ஒரு பல்லக்கிலேறுவாய். அப்படி யேறிக்கொண்டவுடன் அந்தப் பல்லக்கைச் சுமப்பவர்களது சிரத்தின்மேல் (அதாவது, நெற்றியில்) அழகுபொருந்திய ஓர் கடுகளவு மேற்படி மையை யெடுத்துத் திலதமிடக் கடவாய். அப்படிச்செய்துகொண்டு பல்லக் கைச் செலுத்தக்கடவாய். அப்படிச் செலுத்தினால் உன்னையும், உன் பல்லக்கையும் கண்டவுடன் மனிதர்களெல்லாம் மிகவும் மயக்க முற்று ஆச்சரியப்பட்டு இதென்ன விந்தையெனச் சொல்வார்கள். எ - று.

சூக்ஷூம விளக்கம்: மேற்கண்ட மையைப் பல்லக்கைச் சுமப்பவர்களி னெற்றியிற் றிலதமிட்டுக் கொள்ளும்படி செய்துவிட்டுப் பல்லக்கை நடத்தினால் பார்ப்பவர்களெல்லாம் மிகவும் மயக்கத்தை யடைந்து ஆச்சரியப் படுவார்கள். இன்ன காரணத்தினால் ஜனங்கள் ஆச்சரியப் படுவார்களென்னும் விபரத்தைப்பற்றி அடுத்தபாட்டிற் கூறுவார். இங்கு சொல்லத் தொடங்குவதை நன்றாய் ஆராயப்புகின் இந்த மையினால் அநேக ஆச்சரியப்படும்படியான ஜால வித்தைகளையெல்லாம் செய்யலாமென ஏற்படுகிறது. அவ் விபரங்களையெல்லாம் பின்னே விரித்துக்கூறுவார். அங்கு கண்டு தேர்க. 71

வேறு செய்யுள்

சுமப்பவரன்றியே சிவிகை துங்கமாய்
இமைப்பினி லேகுவதென்ன காரணம்
அமைப்பவ னறிவனேயன்றி வேறுண்டோ
கமைப்புடன் காளையர் கருதுவாரன்றே.

இதில் முன் சொன்னபடி ஆச்சரியப்படுங் காரணத்தைச் சொல்கின்றார்.

(இ ள்.) முன்பாட்டிற் சொன்னபடி செய்துகொண்டு சென்றால் உன் பல்லக்கைப் பார்த்தவுடன் ஜனங்களெல்லாம் இதென்ன இந்தப் பல்லக்கானது சுமப்பவர்களில்லாமல் உயரவாக நிமிஷநேரத்தில் அதிகதூரஞ் செல்லுவது என்னகாரணம். இதன் இரகசியத்தை

எல்லாவற்றையும் உண்டாக்கப்பட்ட கடவுளே யறிவானல்லாது மற்றயாரறிவார்களென்று சொல்லிக்கொண்டு மிகவும் ஆச்சரியக் கருத்தை யடைவார்கள். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: முன் சொன்னபடி பல்லக்குச் சுமப்பவர்களினது நெற்றிகளில் திலதமிடும்படி செய்துகொண்டு பல்லக்கை நடத்தினால் மையினது வல்லபத்தால் ஜனங்களுடைய கண்களுக்குப் பல்லக்குச் சுமப்பவர்களின் உருவங்கள் தோன்றா. ஆகையினாலே சுமப்பவரின்றிப் பல்லக்குச் செல்கின்றதேயென ஆச்சர்யப்படுவார்கள். முன் பாட்டில் ஆச்சரியப்படுவார்களென்றதும் இக்காரணத்தை முன்னிட்டே யெனவறிக. 72

இதுவுமது

சத்திரங் கரந்தனி லேந்து வோன்றலை
நெற்றியிற் றரித்திடு நிறைமுன் வாறுபோற்
சுற்றினிற் சூழ்ந்தவர் தூக்கு வாரிலை
எத்திற மாயமென் றியம்பு வாரரோ.

(இ - ள்.) இன்னு மேற்படி மையை முன் சொன்னபடியே கடுகினள வெடுத்து குடைப்பிடித்துக்கொண்டு வருபவனது நெற்றியிலே திலதமிட்டுவிட்டால் அந்தக் குடைப்பிடிப்பவனது ரூபம் ஜனங் களுக்குத் தோற்றாது. அப்படித் தோற்றாமலிருக்கவே ஜனங்க ளெல்லாம் இதென்ன ஆச்சரியமா யிருக்கின்றது குடையானது பிடிப்ப வரின்றிச் செல்கின்றதேயென ஆச்சரியப்பட்டு மொழிவார்கள். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: இந்த மையை எவர் நெற்றியிற்றடவினும் ரூபந்தோற்றாதென வேற்படுகின்றது. இந்த மையை முடித்தவர்க்கு குடை, சிவிகை முதலிய சிறப்பெல்லா மேற்படும்போலும். 73

இதுவுமது

சாமரை யியற்றுவோன் றனது நெற்றியிற்
றூமமாத் தரித்திடுஞ் சொல்லும் வாறுபோற்
காமுறு காளையர் கண்கள் காணவே
தோமுறத் தோற்றிடாச் சூட்ச மாகுமே.

இதிற் பின்னொரு வேதை சொல்கின்றார்.

(இ - ள்.) மேற்கண்ட மையை முந்திச்சொன்ன கிரமங்களின்படியே சாமரை வீசுபவனது நெற்றியிலே கடுகளவெடுத்து இரகசியமாகத் திலதமிட்டு விடக் கடவீர்கள். அப்படிச்செய்தால் அந்தச் சாமரை வீசுபவனது ரூபம் பிறருக்குத் தோற்றாம லிருக்கும்படியான தன்மையைச் செய்யும். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: மேற்படி மையைத் திலத மிட்டவுடன் சாமரை வீசுபவன் பிறர் கண்களுக்குத் தோற்றமாட்டான். 74

இதுவுமது

மும்முர சொலிப்பவர் முகத்தி னென்றியிற்
செம்மையாய்த் திலதமே செறிய வைத்திடிற்
கொம்மெனப் புடைப்பது வன்றி மற்றொரு
மம்மரின் மாந்தரின் வடிவு தோன்றிடா.

இதிலும் வேறு வேதை சொல்கின்றார்.

(இ - ள்.) முன் சொல்லிவந்த அளவின்படியே மேற்கண்ட மையை மூன்று வகையாகிய முரசு வாத்தியங்களை அடித்து முழக்கப்பட்டவர்களுடைய நெற்றியில் அழகாகப் பொட்டிட்டு விட்டால் முரசடிக்குஞ் சத்தங் கேட்குமே தவிர அடிப்பவர்களுடைய ரூபந் தோற்றமாட்டாது. எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: வெளிப்படை. 75

இதுவுமது.

வேயினா லிசையுறு வென்றி யோனுதல்
ஏயவே யியற்றிடு வியல்முன் வாறுபோற்
ஊயவே யூதிடு மோசை யன்றியே
தோயவா டவர்தமைத் தோற்றி டாதன்றே.

இதில் இன்னொரு வேதை சொல்கின்றார்.

(இ - ள்.) இன்னும் மேற்கண்ட மையை யெடுத்து முந்திச்சொன்ன முறைகளின்படியே வேய்ங்குழல் வாசிக்கப் பட்டவனுடைய நெற்றியிற் பொருந்தும்படியாகத் திலதமிட்டுவிட்டால் அவன் இசைக்கும் இசை

கேட்குமே தவிர வாசிப்பவன் இன்னவனென ஜனங்களுக்குத் தெரியமாட்டாது. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை. 76

இதுவுமது

வெற்றிவாள் தோமரம் வேலுஞ் சூலமுங்
குற்றுடை கடகமுங் குந்தஞ் சக்கரம்
மத்துறு தண்டமு மகிளி யாழிகை
சுற்றினி லிடித்திடுந் தோன்றல் கூளியில்

இதிலும் மற்றொருவேதையே சொல்கின்றார்.

(இ - ள்.) வெற்றி பொருந்திய வாளாயுதத்தையும், தோமரத்தையும், வேலாயுதத்தையும், சூலாயுதத்தையும், சிறிய உடைவாளையும், இன்னும் பல ஆயுதவர்க்கங்களையும், குந்தாயுதத்தையும், சக்கரத்தையும், வலிபொருந்திய தண்டாயுதத்தையும், கைக்கொண்டு வீரர்கள் படையில் தாக்கும்படியான அரசர்களதுகாலாட்படைக் கூட்டத்திலே, எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இந்தப்பாட்டும் அடுத்த பாட்டும் குளகமாதலினாலே என்ற வரையில் நிறுத்தினார். மற்றவிபரங்களை அடுத்தபாட்டிற் கூறுவாரென வறிக. 77

இதுவுமது

சிரத்தினிற் றாக்கிடு திலத மையதை
உரத்தொடு நோக்குவ ரொளி மயங்கியே
கரத்தினிற் பிடிப்பவர் தம்மைக் காண்கிலந்
தரத்தினி வாயுத மேதென் றோதுவார்.

இதுவுமது.

(இ - ள்.) மேற்சொன்னபடி காலாட்படைக் கூட்டத்திலே முன்சொன்ன ஆயுதங்களைக் கைக்கொண்டு வீசப்பட்ட வீரர்களுடைய நெற்றியிலே முந்தின கிரமங்களின்படி மேற்படி மையையெடுத்துத் திலதமிட்டுவிட்டால் அவர்களுடைய ரூபந் தோன்றாமல் தாக்குவதும், ஆயுதங்களு மட்டுமே தெரியும், இதனால் பார்ப்பவர்களெல்லா மதிசயித்து இதென்ன ஆச்சரியம் இந்த ஆயுதங்களைப் பிடித்திருப்பவர்களை காண்கிலம், ஆயுதங்கள் மட்டுமே பல

விடங்களிலுஞ் சென்று வீரர்களைத் தாக்குகின்றன. இந்த ஆயுதங்களெல்லாம் எங்கேயிருந்து வந்தனவென்று மருட்சியடைந்து ஆங்காங்கே சொல்லிக்கொண்டு திரிவார்கள். எ - று.

சூக்ஷுமவிளக்கம்: இத்தகைய வேலைகளெல்லாம் இராஜாக்களுடைய யுத்தங்களுக்குப் பெரும்பான்மையும் உபயோகமாம். இனி இதுமுதல் இந்த மையின் வேறு ஜாலவித்தை சொல்லத் தொடங்குகின்றார். 78

ஜாலவித்தை

கலி விருத்தம்.

மால் முற்றிடு மாந்தரே பார்த்திடீர்
சால வித்தைவே றொன்றினிச் சாற்றுவேன்
வாலை யுற்ற வயதுள வாடவன்
காலை யுற்றுக் கடுவுயிர் துஞ்சிடில்.

இதுமுதல் மேற்கண்ட ஜாலவித்தைக்கா மார்க்கங்களைச் சொல்கின்றார்.

(இ - ள்.) விருப்பம் பொருந்திய மனிதர்களே! இன்னொரு விதமான ஜாலவித்தையைச் சொல்வேன் கேட்டுணர்வீர்களாக. பாலியத்தன்மை பொருந்திய ஒரு மனிதன் அவனுடைய காலமானது முடிவாகி அருமையான வுயிரை விட்டு நீங்குவானேயாகில் (அதாவது இறந்துபோய் விட்டால்) எ - று.

சூக்ஷுமவிளக்கம்: இதில் இறந்துபோய் விட்டால் என்றவரையில் நிறுத்தியிருப்பதில் மற்ற விபரங்களை அடுத்த பாட்டுமுதற் கூறிவாரெனவறிக. 79

இதுவுமது

கூடிச் சூழ்ந்தவர் கொட்டி முழக்கியே
பாடை யேற்றிதீ யெரிந்திடும் போதையில்
மூட மாக முதுகுமுன் தன்னிலே
ஓடி யேவரு மூன மெடுத்திடு.

இதில் முன் இறந்தவனா லாகவேண்டிய காரியத்தைச் சொல்கின்றார்.

(இ - ள்.) முன் பாட்டிற் சொன்னபடி பாலியமான மனிதன் இறந்து போன பிற்பாடு அவனைச் சேர்ந்தவர்களெல்லாங் கூடியழுது கொட்டி

முழக்கிப் பாடை மீதேற்றி மயானத்திற் கொண்டுபோய் வைத்து நெருப்பிட்டுவிட்டு வந்து விடுவார்கள். அப்படி வந்தபின் அந்தப பிணமானது தீப்பற்றி யெரியும், அப்படி யெரியும்போது அந்தப் பிணத்தினுடைய முதுகெலும்பி லிருந்தோடி வரப்பட்ட மாமிச சாரமாகிய தைலத்தை வேண்டிய அளவு எடுத்துக்கொள்ளக் கடவாய்.

சூக்ஷூம விளக்கம்: ஒருவன் இறந்து விட்டால் அவன் சுற்றத்தார் கூடியழுவதும், கொட்டி முழக்குவதும், பின் பாடையி லேற்றுவதும், மயானத்திற்குக் கொண்டுபோவதும், அங்கு வைத்து நெருப்பிடுவதும் இயற்கையென யாவர்க்குந் தெரியுமாயினும் பிணத்தைச் சிறப்பிக்கவேண்டி அவைகளையெல்லாஞ் சொன்னாரெனவறிக. மேற்கண்ட தைலத்தை யெடுத்து இன்னது செய்யவேண்டு மென்னும் விபரத்தை அடுத்தபாட்டிற் கூறுவார். 80

இதுவுமது

பேடி யொன்றொடு பீயினீ றானதும்
மூடி யாக முதற்றளை மோனையுஞ்
சாடி யாகவே தாக்கு தலைக்குறை
கூடும் பேர்வைத்தாற் கூட்டும் பணமைந்து.

இதில் மற்றொரு மருந்தும் நிறையுஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) பேடி யென்று சொல்லப்பட்ட பதத்தினுடைய முதலெழுத்தோடு, பீய் என்ற பதத்தின் கடையெழுத்தையும், இந்தப் பாட்டின் முதலடிக்கு மோனையாக நிற்கின்ற வெழுத்தையும் தாக்கு என்ற பதத்தில் முதலெழுத்தை நீக்கிவிட்டு நின்ற மீதி யெழுத்துக்களையும் சேர்த்தால் என்ன பெயரமையுமோ அப்பெயருள்ள சரக்கில் ஐந்து பணவெடை யெடுத்துச் சேர்க்கக் கடவாய். எ - று.

சூக்ஷூம விளக்கம்: பேடியென்ற பதத்தின் முதலெழுத்தாவது (பே,) பீய் என்ற பதத்தின் கடையெழுத்தாவது (ய்,) இந்தப் பாட்டின் முதலடியின் மோனைத் தொடையாகிய வெழுத்தாவது (பீ,) தாக்கு என்ற பதத்தில் முதலெழுத்தை நீக்கிவிட்டு நின்ற சேஷமாவது (க்கு) ஆக இவைகளையெல்லாம் முறையே ஒன்றாகச் சேர்க்க (பேய்பீக்கு) இதைப் பேய்ப்பீர்க்கெனக் கொள்ள வேண்டியது. இதில் ஐந்து

பணவெடை யெடுத்துக்கொள்வா யென்றாரே தவிர செடியா, கொடியா, விதையா வென்னும் விபரத்தைப்பற்றி ஒன்றும் சொல்லப்படவில்லை. ஆயினும் எமதுஆசான் இதன் வித்திலேயே ஐந்து பணவெடை யெடுத்துக்கொள்ள வேண்டுமெனச் சொல்லி யிருக்கின்றபடியால் அவ்வாறே இந்தப் பேய்ப்பீர்க்கின் வித்திலேயே ஐந்து பணவெடை யெடுத்துக்கொள்ள வேண்டியது. 81

சந்த விருத்தம்

இங்குநவில் மையெடு விராகனெடை யிணையே
பொங்கமுடன் கல்வமதிற் போட்டுமு னினத்தில்
முங்கமுட னாழிகையின் மூன்றென வரைத்து
தங்கமுறு செப்பதனிற் றான்பதனம் பண்ணு.

இதிலோர் சரக்குஞ் செய்முறையுஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) இதற்குமுன் சொல்லியிருக்கின்ற ஜாலமையிலும் இரண்டு விராகனெடை யெடுத்துப்பேய்ப்பீர்க்கின் வித்தையும், இதையும் கல்வத்திற் போட்டு முன் சொல்லியிருக்கின்ற ஊனத்தைவிட்டுப் பலமாக மூன்றுநாழிகை வரையரைத்துப் பின் வழித்தெடுத்து ஓர் தங்கசெப்பில் பத்திரப்படுத்தக் கடவாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: பேய்ப்பீர்க்கின் விதையையும், இந்த மையையுங் கல்வத்திற்போட்டு முன்னே சொன்னபடி சவத்தின் முதுகிலிருந்தெடுத்த ஊனத்தை விட்டரைக்க வேண்டியது. 82

வேறு செய்யுள்

மையானதின் வேதை வகுத்திடுவேன்
அய்யா வுட னாடவர் நெற்றியிலே
கையா லெடுத் தேயுடன் சாத்திடுவாய்
மெய்யாகமுன் வென்றிடும் வாறதுபோல்

இதுமுதல் இந்த மையின் வேதைசொல்லத் தொடங்குகின்றார்.

(இ - ள்.) இந்த மையினுடைய வேதைகளை இனிச் சொல்வேன் கேட்பீர்களாக. இதைக் கையினாலேயெடுத்துக் கிழவர் முதல் பாலிய

ரீறாகவுள்ள மனிதர்களுடைய நெற்றியிலே, முந்தினமையிற் சொல்லி யருக்கின்ற கிரமப்படியே திலதமிட்டு விடக்கடவாய். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: முந்தின மையிற் சொல்லியிருக்கின்ற கிரமப்படி யென்றதனால் இதையும் கடுகளவே யெடுத்துத் திலதமிட வேண்டு மெனவறிக. *83*

இதுவுமது

குறி யாகவே பார்ப்பவர் கூர்விழிக்கே
வெறி யாகவே வேற்றுரு வாகியது
தரியாமல் தடிந்துடல் கேட்டசைக்கும்
குறியாகவே கொள்ளுவர் மாந்தர்களே.

இதில் முன் திலதமிட்ட மனிதர் ஆகும் விதத்தைச் சொல்கின்றார்.

(இ - ள்.) முற்பாட்டிற் குறித்தபடி திலதமிட்டுக் கொண்ட மனிதர்கள் பார்க்கப்பட்ட மற்றவர்களுடைய கண்களுக்கு மயக்கமாகும் படி மாறுருபங்கொண்டு உலகத்திற் றரியாமல் மின்னல் தோன்றி மறைவதுபோல் தோற்றித் தோற்றி மறைவார்கள். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்; இதில் மனிதர்கள் வேற்றுருக் கொள்வார்களென்று மட்டும் சொல்லி யிருக்கின்றாரே தவிர இன்னவித ரூபத்தை யடைவார்களென்ற விபரத்தைப்பற்றித் துலக்கமாகச் சொல்லப் படவில்லை. ஆயினும் அந்தப்படி செய்யுங்காலத்தில் அதின் விபரம்தானே விளங்கிப்போகும். *84*

இதுவுமது

மறை போலெழி லாமுயர் பெட்பமுறு
நறை வீசிய நாரியர் நன்னுதலிற்
கறை யாகவே காட்டிடு வாய்திலதம்
வறி போல்வடி வாக வயங்கிடுவாள்.

இதில் வேறு வேதை சொல்கின்றார்.

(இ - ள்.) இலட்சண சாஸ்திரங்களிற் சொல்லிய கிரமப்படி மிகுந்த அழகையும், தேன் கமழுங் கூந்தலையுமுடைய விருத்த திசையையுடைய ஸ்திரீகளினது நெற்றியிலே முந்தின கிரமங்களின்படியே கறுப்பாகத்

தெரியும்படியாய்த் திலதமிடக் கடவாய். அப்படித் திலதமிட்டவுடன் அந்த விருத்த திசையையுடைய பெண்ணானவள் நல்ல யௌவன ஸ்திரீயாக விளங்கிடுவாள். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இந்த மையைக்கிழவிக்குத் திலதமிட்டால் குமரிபோல தோன்றுவாள். 85

கொச்சகக் கலிப்பா

குஞ்சரத்தின்சிரமதிலே கொள்ளையுறுமருந்துதனில்
முன்சொலென நாட்டி டுவாய் மூனமிகு வேகமுறும்
வெஞ்சினங்க ளுறுமானை வேசரியைப் போலாகும்
என்செயலென் றறியாதே யியற்றுவேன் வேதையன்றே.

இதில் மற்றொரு வேதை சொல்கின்றார்.

(இ - ள்.) இன்னுமிந்த மையை முன் சொல்லிவந்த கிரமங்களின் படியே கடுகளவெடுத்து யானையினது நெற்றியிலே திலதமிடக் கடவாய். அப்படிச் செய்தால் மிகவும் வேகத்தையும், சினத்தையு முடைய அந்த யானையானது கழுதையைப் போலாகிவிடும். இதெல்லாம் என்செயலால் நடப்பதென் றெண்ணாதே. கடவுளுடைய செயலேயாகும். இன்னுமற்ற வேதைகளையுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. எ - று.

சூக்ஷும விளக்கம்: இந்த மையினால் யானை கழுதையாகிவிடு மெனவறிக. 86

சந்த விருத்தம்

உகளக்கதி வலுவுற்றிடு முகளுமிகு காது
திகழுற்றிடு சிரமீதினிற் செறிப்பாய்தில தமதாய்
அகமுற்றிடு வாயானதி னடைவானது குறைந்து
புகழாகவே பூச்சையெனப் புகல்வார் புவி மனுவோர்.

இதிற் பின்னுமொரு வேதை சொல்கின்றார்.

(இ - ள்.) தாவுவதில் மிகவும் வல்லமை பெற்றது நிமிர்ந்த இரண்டு செவிகள் பிரகாசிக்கப்பட்டதும் அகன்ற வாயை யுடையதுமான ஓர் ஜெந்துவுடைய நெற்றியில் மேற்கண்ட மையைத் திலதமிட்டால் அந்த

ஜெந்துவுடைய உக்கிரசொரூபமெல்லா மாறிவிடும். அதைப் பார்த்தவர்களெல்லாரும் பூனையெனச் சொல்வார்கள். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: மேற்சொல்லிய இலட்சணங்களையுடைய ஜெந்துவானது (புலி.) இந்தப் புலியினுடைய நெற்றியில் மேற்கண்ட மையைத் திலதமிட்டுவிட்டால் அந்தப் புலியானது பூனையைப்போல தோற்றும். 87

வேறு செய்யுள்.

காசினி நெளிந்திடக் கதி நடையுறுந்
தூசியின் சிரத்தினிற் றோயு மையதை
ஓசைசெய் கனலொடு வுயர மன்றியே
கூசையல் குனியிழை யென்று கூறுவார்.

இதில் பின்னுமொருவேதை சொல்கின்றார்.

(இ - ள்.) இன்னும் மேற்கண்ட மையை பூமியானது அசைவுறும்படியாக வேகமாகிய நடையைச் செய்கின்ற குதிரையினுடைய நெற்றியிலே திலதமிட்டு விட்டால் அந்தக் குதிரையானது புகழத்தக்க தன்னுடைய தேகக்கனமும், உயரமுமில்லாமல் குனிந்த தன்மையையுடைய மானைப் போலாகிவிடும். அதைப் பார்த்தவர்களெல்லாரும் மானென்றே சொல்வார்கள்.

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை. 88

கலி விருத்தம்

அருண நெற்றியி லங்கு தரித்திடும்
வருண மாறி வலுத்த நடையுறும்
சருண முற்றச் சுவமெனக் கான்றிடும்
கருண மாறு சவுமியக் காட்சியே.

இதிலும் வேறொரு வேதை சொல்கின்றார்.

(இ - ள்.) மானினுடைய நெற்றியிலே மேற்படி மையை முந்தின கிரமங்களின்படியே திலதமிட்டு விடக்கடவீர்கள். அப்படிச் செய்தவுடன் அந்த மானானது தன்னுடைய நிறமும் இயல்பும்மாறி வலிமை பொருந்திய நடையையுடையதாகி நல்ல குதிரையைப்போல

தோற்றிவிடும். இதெல்லாம் இந்த இலக்க சௌமிய சாகரத்தினுடைய ஆராய்ச்சியினாலே யுண்டாகும். எ - று. 89

சூக்ஷுமவிளக்கம்: வெளிப்படை.

நொண்டிச் சிந்து

இங்குநவில் வாறது போற் - காட்டிலுள்ள
விலங்கின முழுமையி லெய்திடவே
வெங்கெனவே வேற் றுருவா - யவையவை
விளங்கிடத் தெரிந்திடும் விழிதனக்கே
மங்கமுடன் மத்தஞ் சாற்றில் - மையதனை
மார்த்தித் தினியெடுத்துச் சித்திரமுடனே
சங்கையுடன் சால மினி - வேறொன்று
சாற்றுகிறே னோர்த்தியுடன் பார்த்தறிந்துகொள்.

இதில் விலங்கினங்கட்கெல்லாம் மொத்தவேதை விளம்புகின்றார்.

(இ - ள்.) மேலே சொல்லிக்கொண்டுவந்த கிரமங்களின்படியே மேற்கண்ட மையைக் காட்டிலுள்ள மற்ற மிருக வகைகளிலெல்லாம் திலதமிட அந்த மிருகங்களெல்லாம் ஒவ்வொன்றும் தனித்தனியே வேறு ரூபங்களையடைந்து கண்களின் பார்வைக்குப் பேதங்களாக விளங்கும். பின்பு மேற்படிமையை ஊமத்தஞ்சாற்றிற்கலந்து குழப்பி யெடுத்துவைத்துக் கொள்வாய். இனி இவ்விதஞ் செய்த மையினால் அழகோடு நடக்கும்படியான ஜால வேடிக்கைகளைச் சொல்வேன். ஒழுங்கோடு கண்டுணர்ந்து கொள்வாயாக. எ - று.

சூக்ஷுமவிளக்கம்: ஊமத்தஞ்சாற்றிற் கலந்து கொண்ட மையினால் இனி பலவிதமான ஜாலவேடிக்கைகள் நடக்குமெனக் காண்க. அவைகளை யெல்லாம் அடுத்தபாட்டுமுதற் கூறுவார். 90

வேறு செய்யுள்.

ஓலையில் மையதை யுறத் தடவிநீ
சாலயி லெறிந்திடு தவழ்ந்து சீறியே
ஆலமுற் றிடுமர வென்ன வாடிடும்
சாலமி லரியதென் றறிந்து சார்ந்திடு.

இதுமுதல் முன் ஊமத்தஞ்சாற்றிற் குழப்பிய மையின்வேதை சொல்லத் தொடங்குகின்றார்.

(இ - ள்.) பனையோலையில் மேற்கண்ட மையைப் பொருந்தும்படியாகத் தடவி பாதை மார்க்கங்களிலெறிந்துவிடக் கடவாய். அப்படி யெறிந்துவிட்டால் அந்த ஓலையானது தவழ்ந்து சென்று சீறலைச்செய்து விடம் பொருந்திய நாகப்பாம்பைப்போல் எழுந்து ஆடும். இது ஜாலவித்தைகளிலெல்லாம் மகா அருமை வாய்ந்தது. ஆகையால் இதைத் தெரிந்து செய்யக் கடவாய். எ று.

சூக்ஷ்ம விளக்கம்: வெளிப்படை. 91

இதுவுமது

வேம்பிலை தன்னிலே விளம்பு மையதை
தாம்புறத் தரித்ததைத் தனுசர் முன்னெறி
தேம்பியே திடுக்கெனத் திரண்டே யோடுவர்
ஓம்புட னேதெறுக் காலென் றோதியே.

இதில் மற்றொருவேதை சொல்கின்றார்.

(இ - ள்.) இன்னும் மேற்கண்ட மையை வேப்பிலையிலே பிடிக்கும்படியாகத் தடவி மனிதர்களுக்கு முன்பாக எறிந்துவிடக் கடவாய். அப்படி யெறிந்து விட்டால் அந்த வேப்பிலையானது தேளாகிவிடும். அதைக் கண்டவுடன் மனிதர்களெல்லாரும் தேளென்று திடுக்கிட்டுப் பயந்தோடுவார்கள். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: வெளிப்படை. 92

இதுவுமது

சாலியில் மையதைத் தடவிச் சாலையிற்
கோலியே யெறிந்திடு குளவி போலது
சீலையி லிருபுறஞ் சிறகு டனெழும்
வாலையி லிரைச்சலும் வடிந்தி லங்குமே.

இதில் வேறொருவேதை சொல்கின்றார்.

(இ - ள்.) மேற்கண்ட மையை நெல்லிலே தடவி பாதையில் அள்ளியெறிந்து விட்டால் அந்தநெற்களெல்லாம் சிறு சிறு

வண்டுகளைப்போலாகி இரண்டு பக்கமும் இறகுகளை யுடையனவாய்ப் பறந்து இரைச்சலோடு விளங்குவனவாம். 93

இதுவுமது

விண்டிடு மையதை விளம்பும் வாறுபோல்
கொண்டையங் கனியிடைக் கோத மோதிடில்
வண்டென விரைச்சலும் வடிவ மாகிடுங்
கண்டிடுங் காசினி யுரையுங் காளைகாள்.

இதிலும் வேறு வேதை கூறுகின்றார்.

(இ - ள்.) சொல்லப்பட்ட இந்தமையை முன் சொன்ன கிரமங்களின் படியே இலந்தைக்கனியில் தடவி யெறிந்துவிட்டால் அது தும்பியைப்போன்ற ரூபமாகி அதற்குத்தக்க சத்தத்தையும் வடிவத்தையு மடைந்துவிடும். பூமியிற்பொருந்திய மாணாக்கனே கண்டுணர்ந்து கொள்வாயாக. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை. 94

இதுவுமது

கொக்குவின் றருமிசைக் குறித்த மையதைச்
சிக்கிடத் தீட்டிடு செப்பும் வாறுபோல்
அக்கணம் நாவலின் றருவைப் போலுறுந்
தக்கதோர் சாலமென் றறியுந் தாசரே.

இதில் வேறு ஜாலஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) மாமரத்தின் மீது மேற்கண்டமையைப் படும்படியாக முன்குறித்த கிரமங்களின்படியே பூசிவிடக் கடவாய். அப்படிப் பூசிவிட்டால் அந்தச் சமயம் மாமரமானது தன்னுடைய நிலைமைமாறி நாவல் மரத்தைப்போலாகிவிடும். அடியார்களே! இது ஜாலவகைகளி லெல்லாம் மிக்க உயர்வு பெற்றதெனக் கண்டுணரக் கடவீர்கள். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை. 95

இதுவுமது

மகிழமின் றருமிசை மாட்டு மையதை
இகுழமில் நாவலென் றியற்று வார்நரர்

தகையுட னித்தருத தன்னில் மாட்டிடத்
தொகையுடன் முன்றருப் போலுந் தோற்றுமே.

இதில் பின்னுமொரு ஜாலஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) மேற்கண்டபடி இந்த மையை மகிழ மரத்திலே பூசிவிட்டால் அது நாவல் மரத்தைப்போலாகிவிடும். அதைப் பார்த்தவர்க ளெல்லாரும் நாவல் மரமென்றே சொல்வார்கள். அப்படி மாறிய இந்த நாவல் மரத்தில் மையைத் தடவினால் முந்தின மகிழமரத்தைப்போல தோன்றும். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: வெளிப்படை. 96

இதுவுமது

நாகமின் றருமிசை நாட்டு மையதைச்
சோகெனச் சொல்லுவார் துரிதங் கண்டறி
பூகமிற் பொற்புடன் புரிய முன்னியல்
நாகமென் றறைகுவர் நாரின் கும்பலே.

இதிலும் வேறொரு ஜாலமே சொல்கின்றார்.

(இ - ள்.) இன்னும் இந்த மையை நாக விருக்ஷத்தில் முந்தின கிரமப்படி பூசிவிடக் கடவாய். அப்படிப் பூசிவிட்டால் அந்தத் தருவைப் பார்த்தவர்கள் அசோக மரமெனச் சொல்வார்கள். கமுகமரத்தில் இதை அழகுடனே பூசிவிட்டால் பார்க்கின்ற மனிதர் கூட்டங்கள் முந்திச் சொன்னதாகிய நாகமரமெனச் சொல்வார்கள். இவைகளையெல்லாம் வேகமாகப் பார்த்தறியக் கடவாய். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: வெளிப்படை. 97

கலி விருத்தம்.

கோங்கு வின்றரு மீதிற் குறித்திட
வேங்கை யென்று விளம்பிடு வாரரோ
வேங்கை மீதில் விரைவுடன் பூசிட
மூங்க மாக முயலுவர் பாதிரி.

இதிலும் ஜாலமே சொல்லுகின்றார்.

(இ - ள்.) இன்னும் மேற்படி மையைக் கோங்குமரத்திற் பூசிவிட்டால் அந்தக் கோங்குமரத்தை வேங்கை மரமெனச்

சொல்வார்கள். இதை வேங்கை மரத்திற்க்கிரமமாகப் பூசிவிட்டால் அதைப் பாதிரி மரமெனச் சொல்வார்கள். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை. 98

வேறு செய்யுள்.

அனிச்சமென் றருமிசை யழகு மையதை
இனிச்சமேற் றடவிட வியலு டனது
தனிச்செனச் சண்பகத் தருவை யொத்திடுங்
கனிச்சிபோற் காசினி யுறையுங் காளையே.

இதில் வேறு ஜாலங் கூறுகின்றனர்.

(இ - ள்.) மேலே சொல்லி வந்ததாகிய மையைவாகை விருக்ஷத்தில் தடவிவிட்டால் அந்த வாகைமரமானது மிகப் பொருத்தத்தோடு ஒப்பற்ற சண்பகமரத்தை நிகர்த்திருக்கும். பூமியிற் பொருந்திய மாணாக்கனே! இவற்றையெல்லாம் உற்றுணரக் கடவாயாக. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இங்கே சொல்லிவந்தபடி மரங்களெல்லாம் வேற்றுருக் கொள்ளுமென்றால் இந்த ஜாலமையின் பெருமை அளவிட்டுச் சொல்லுந்தரமா? இவைகளையெல்லாம் உணர்ந்த மகான்களுக்குத் தொண்டு புரிந்து முறைப்படியே கேட்டுத் தெரிந்து செய்தால் இதிற்சொல்லி யிருக்கின்றபடி நிச்சயமாக நடக்கு மென்பது திண்ணம். மேற்கண்டபடி செய்து கொள்ளாதவர்களுக்கு இவைகள் எவ்விதத்தாலும் சித்தியாகா. 99

இதுவுமது.

ஜாலமும் ஞானமு மிவணிற் சாற்றினோங்
காலமுங் கணக்கையுங் கண்ட றிந்திடுந்
தாலமி லுற்றிடுந் தனுசர் கும்பலே
ஓலமா மொன்பதாங் காண்ட முற்றுமே.

இதிற்காண்டத்தின் முடிவு கூறுகின்றார்.

(இ - ள்.) பூலோகத்திற் பொருந்திய மனிதர் கூட்டங்களே! இந்த ஒன்பதாவது காண்டத்தில் பல விதமான ஜால வித்தைகளையும், ஞானத்தையும் வகைவிபரமாகச் சொல்லிவிட்டேன். எல்லாவற்றையும்

பார்த்தறியக் கடவீர்களாக. இம்மட்டோடு இந்த ஒன்பதாங் காண்டமும் முற்றுப்பெற்று விட்டது. எ - று.

சூக்ஷுமவிளக்கம்: இதில் பல விஷயங்களைச் சொல்லிவிட்டேன். இம்மட்டோடு இக்காண்டம் முற்றுப் பெற்றது என்றதனால் இக்காண்டத்தைச் சம்பந்தித்த சில விஷயங்களை அடுத்த காண்டத்திலுங் கூறுவாரென ஏற்படுகின்றது. இனி அடுத்த பத்தாவது காண்டத்தில் இந்நூலிற்கே ஆதாரமாகிய பல விஷயங்களையுங் கூறுவாரெனக் காண்க. சுபம். 100

ஒன்பதாங்காண்டம்

முற்றுப் பெற்றது.

கடவுள் துணை.

இலக்கசௌமிய சாகரம்

தேர்ந்தெடுத்த செய்யுட்களும் தெளிபொருள் விளக்கவுரையும்

பத்தாங்காண்டம்

காப்பு

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

அண்டரண்ட மொன்றாகி யரலை யாகி
அறலாகி விறலாகி யமுத மாகிக்
கொண்டரண்ட மொன்றாகிக் குயிலு மாகிக்
கொறியாகிப் பரியாகிக் கொம்மை யாகிப்
பிண்டரண்ட மொன்றாகிப் பீடு மான
பேரின்பப்பெரியோனும் பிரிய முற்று
விண்டரண்ட வாயிரத்தின் மருந்து சொல்ல
வெற்றியுற்ற வாதிமகா சோதி காப்பாம்.

இதில் வழக்கப்படியே இக்காண்டம் இனிது முடியும்வண்ணம் தெய்வ வணக்கத்தைக் கூறுகின்றார்.

(இ - ள்.) தேவர்கள் வசிக்கும்படியாகிய ஒப்பற்ற பேரண்டமாகி, நீண்ட கடலாகி, அக்கடலிற்றோன்றும் பேரலைகளாகி, அமுதங்கடைகின்ற காலத்தில் தேவர்களுக்கு மிகுந்த வெற்றி ரூபமாகி, அப்போதெழுந்த அமுத வடிவமுமாகி, அருமையைக்கொண்டு ஓர்முட்டைவடிவமாகி, அதனுள்ளிருந்தெழுந்த குஞ்சுப்பருவமுள்ள குயில் வடிவமாகி, மேடரூபமாகி, அஸ்வவடிவமாகி, எங்கும் நலத்தைச் செய்வதாகிய அழகாகி, பிண்டரூபமாயிருந்து வெளிப்படும் மானிடர்கள் வசிப்பதாகிய பூவுலகுமாகி, அளவற்ற பெருமையும் வாய்ந்தவனாகிய பேரின்பத்தையுடைய இறைவன் மனதினிடமாக

விருப்பங்கொண்டு உலகத்தவரின் பொருட்டாக ஆதியில் உரைத்த அருமை பொருந்திய அந்த ஆயிரம் பாடல் களையுடைய இலக்க சௌமிய சாகரத்தின் பத்தாவது காண்டத்தில் வரவேண்டிய சில மருந்து விபரங்களையெடுத்துக்கூறுதற்கு மிகவும் ஜெயத்தைப்பொருந்தி எல்லாவற்றிற்கும் முதலாகிப் பிரகாசியாநின்ற ஒப்பற்றபெருஞ்சோதியே காப்பாகும். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இந்நூலின் முதற்காண்டத்திலிருந்து ஐந்தாங்காண்டம் வரையில் கண்ணோக்கு மிடமெங்குங் கத்தன்காப்பு என்றும், மற்ற நான்கு காண்டம்வரை அகண்டவெளி ஆதிகாப்பே என்றும், இந்தப் பத்தாங்காண்டத்தில் ஆதிமகா சோதிகாப்பே என்றும் காப்புடைச் செய்யுட்களில் கூறிவந்திருப்பதற்குத் தக்க காரணங்க ளுண்டென்றும், அவை இரகசியத்தில் வைக்கத் தக்கனவென்றும் பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றோம். அவை நமது புத்திக்கெட்டவில்லை, எனினும், இதில் ஆதிமகா சோதியென்றது மூலப் பிரகிருதியாகிய சத்தியேயென்றும், அச்சத்தி எங்கும் நிறைந்து எல்லாவற்றிற்கும் ஆதாரமா யிருப்பதுபோல, சத்திபீஜமென்னும் மந்திரம் இக்காண்டத்திலிருந்து இந்நூலிற் கூறப்பட்டிருக்கும் எல்லாவற்றிற்கும் ஆதாரமாயிருப்பதாலும், அதுவே முதலிற் கூறப்படுவதாலும் அச்சத்திக்கே முதலில் வணங்கக்கூறினாரென்றும் எண்ணவிடமிருக்கின்றது. ஆனாலும், அறிந்த மகான்களிடத்திற் கேட்டுத் தெரிந்துகொள்வது நலமாம். 1

நூல்

இந்த நூலின் நான்காவது காண்டத்திற் சொல்லி யிருக்கின்ற பாதாள அஞ்சனத்தை உபயோகிக்குங் காலத்தில் வேதாள முதலியவைகளால் துன்ப நேராதிருக்கும்படி அவற்றைக் கட்டிக்கொள்வதற்காக பத்தாவது காண்டத்தில் ஓர் சூக்ஷுமுரைப்போம் அங்குணர்ந்து கொள்வீர்களாக என்று அந்த நான்காங்காண்டத்தின் ஈற்றிற் கூறியபடியே அவ்வேதாள முதலியவற்றை அடக்குதற்கான மந்திரத்தை இதுமுதல் கூறத்தொடங்குகின்றார்.

கலி விருத்தம்.

தனமானது நிலமீதினிற் சார்பாய்ப்பிர தானங்
கனமாகிய வழியானது கண்ணோக்கவே சொலுமை

தனைநோக்கவே முனஞ்சாற்றினன் றயவானமந்திரமே
நினைவாகுநீ யிதுவேயிது நிகழ்த்தும்வகை கேண்மோ.

இதில் பாதாள அஞ்சனத்துக்குச் சகாயமாகும் மந்திரத்தைச் சொல்வதாகக் கூறுகின்றார்.

(இ - ள்.) இப்பூவுலகில் எல்லோர்க்கும் பொருளானது பொருத்தமாய் முதன்மையாகும். ஆதலால், அதை அடையும் பொருட்டாக அது மிகுந்திருப்பதான வழியைக் கண்டுணர்வதற்காக இன்றியமையாததென்று கூறப்பட்ட பாதாள அஞ்சனத்தை எல்லோரும் பார்க்கும்படியாக முன் நான்காங் காண்டத்திற் சொல்லினன். அது யாதொரு தீங்குமின்றிச் சித்திக்கும்படியானதும், தேவதைகளின் கிருபைகளைப் பெற்றதும் இடைவிடாது நினைத்தற் கேதுவானதுமாகிய மந்திரம் கீழே சொல்லப்படுவதாகும். இதை யெடுத்து உச்சரிக்கும் படியான மார்க்கத்தை எடுத்துரைப்போம் கேட்பாயாக. எ-று.

சூக்ஷுமம விளக்கம்: இதனால் கீழேவரும் மந்திரம் பாதாள அஞ்சனத்திற்கே பெரும்பாலும் உரியதென ஏற்படுகிறது. மற்றவைகளுக்கும் ஆகுமென்று பெரியோர் சொல்லக் கேட்டிருக் கின்றோம். ஆதலின், இதைப்பற்றிய நுட்பமான விஷயங்களை யெல்லாம் அனுபவிகளிடம் வினவித் தெரிந்துகொள்க. 2

பாதாள அஞ்சனத்திற்கும், மற்றவைகளுக்கும் உபயோகமாம் ஏகாக்ஷரமும் சத்தி பீஜமும்.

சந்த விருத்தம்

அந்தர முன்பெயர் முந்தின வன்முறை
தந்திர மேயிது வுந்துதல் முந்தினன்
மந்தரம் பிந்துதல் கிந்தப முந்தியே
பந்திடல் முந்தினந் தந்தியும் பிந்திரு
சிந்திட வின்றலை கெந்தியும் விண்கடை
தொந்தமுன் னீறுடன் விந்தையி னாமமே
ஐந்தரு வின்னிகர் சுந்தரி யின்விழி
தந்தனிற் றோய்பவ னுந்தியு மிரண்டதே.

இதில் எல்லாவற்றிற்கும் ஆதாரமாகிய ஏகாக்ஷரமும் சத்தி பீஜமும் சொல்லுகின்றார்.

(இ - ள்.) அந்தரமென்னும் பதத்தில் முன்னே யிருக்கப்பட்ட ஓர் பெயரைக்கொண்ட எழுத்தையும் அவ்வெழுத்துக்கு முறையாயுள்ள பக்கத்தில் நெருங்கிய வோரெழுத்தையும், உந்துதல் என்னும் பதத்தின் முதலெழுத்தையும், மந்திரமென்னும் பதத்திலுள்ள பின்னெழுத்தையும் எடுத்துச்சேர்க்க சூக்ஷுமமாகிய ஓரக்ஷரமாகும். அதனோடு கிந்தபமென்னும் பதத்திலுள்ள முதலெழுத்தையும், பந்திடலென்பதற்குப் பிரதி பதமாயுள்ள ஓர் பதத்தின் முதலெழுத்திற்கடுத்த வெழுத்தையும், தந்தியும் என்ற பதத்தில் பின்னிரண்டெழுத்தையும், சிந்திட என்ற பதத்தின் முதலிலிருக்கப் பட்ட எழுத்திற்கு முதலெழுத்தாகிய வோரெழுத்திற்கு ஈற்றெழுத்துடனே கெந்தியும் என்ற பத்திலிருக்கப்பட்ட மிகவும் உயர்ந்த கடையெழுத்தையும் எடுத்துச் சேர்க்க நாம் முற்கூறிய ஆச்சரியமான மந்திரத்தின் திருநாமமாகும். கேட்டதையெல்லாம் அளிக்கும்படியாகிய பஞ்சதருவை நிகர்த்த பராசத்திக்கு, எல்லாவற்றிற்கு மேலான மோக்ஷவீட்டிற்குப் போவதான வழியைக் காட்டுதற்குரிய ஞானக் கண்களைக் கொடுத்தவனும், அவளிடத்து இடைவிடாது தோய்ந்திருப்பவனுமாகிய பரமாத்மா தங்கும் நடுவிடமும் இங்கு இரண்டு வகையாகப் பிரித்துக் கூறிய மந்திரமேயாகும். எ - று.

சூக்ஷுமவிளக்கம்: அந்தரம் என்னும் பதத்தில் முன்னே யிருக்கப்பட்ட ஓர் பெயரைக்கொண்ட எழுத்தாவது அகரம்; இது (அ.) அந்த எழுத்துக்கு முறையாயுள்ள பக்கத்தில் நெருங்கிய வோரெழுத்தாவது (இ.) உந்துதல் என்னும் பதத்தின் முதலெழுத்தாவது (உ.) மந்திரமென்னும் பதத்திலுள்ள பின்னெழுத்தாவது (ம்.) இந்த நான்கெழுத்துக்களையும் ஒன்றாகச் சேர்க்க (அ. இ. உ. ம்.) என்றாகும் இவை புணருமிடத்து (ஐயும்) என மாறுபடும். இதுவே ஏகாக்ஷரமாம். இனி, கிந்தபம் என்னும் பதத்தின் முதலெழுத்தாவது (கி.) பந்திடல் என்ற வைத்திய பரிபாஷை பதத்திற்குப் பிரதி பதமாயுள்ள ஓர் பதமாவது எலுமிச்சம்பழம். இதை எலிமிச்சம்பழம் என்றும் சொல்லுவது உலகவழக்கு. இதில் முதலெழுத்திற்கடுத்த வெழுத்தாவது (லி.) தந்தியும் என்ற பதத்திலிருக்கும் பின்னிரண்டெழுத்துக்களாவன: (யும்.) இந்த நான்கெழுத்துக்களையும் கூட்ட (கிலியும்) என்றாகும். இனி, சிந்திட என்ற பதத்தின் முதலிலிருக்கப்பட்ட எழுத்தாவது சி இதற்கு முதலெழுத்தாகிய வோரெழுத்தாவது ச இந்தச் சகரவர்க்கத்தின்

ஈற்றெழுத்தாவது (சௌ.) கெந்தியும் என்ற பதத்திலிருக்கப்பட்ட கடையெழுத்தாவது (ம்.) இவ்விரண்டையும் ஒன்றாகச் சேர்க்க (சௌம்) என்றாகும். இதை (சவ்வும்) என்றும் மாற்றிக் கொள்ளலாம். ஆக மேற்கண்ட மூன்று வாக்கியங்களையும் ஒன்றாகச் சேர்க்க (ஐயும், கிலியும், சவ்வும்) என்றாகும், இம்மூன்றுஞ் சேர்ந்ததே சத்திபீஜமெனப்படும். இதுவே எல்லா மந்திரங்களுக்கும் மூலாதாரமா யிருப்பதாம். ஒவ்வொரு மந்திரமும் இது சேர்ந்தாலொழியப் பலிக்காது. இது சத்திக்குரியதாயினும் பரமாத்ம சொருபமாம். இதுவே பின் பாதாள அஞ்சனத்திற்காகச் சொல்லப்பட்டிருப்பவைகளுக்கும், மற்றவைகளுக்கும் முதலிற் சேர்த்துக்கொண்டு உச்சரிக்கத் தகுந்ததாம். எந்த மந்திரத்துக்கும் இதை முதலிற் சேர்த்தல் வேண்டும். 7 வது காண்டத்திற்சொல்லியிருக்கிற ஐம்பத்தோரக்ஷரத்துக்கும் இதைச் சேர்த்தடைக்கவேண்டும்.

ஐயும், என்பது சுயம்புவாகிய மூன்றெழுத்துக்கள் சம்பந்தப்பட்ட தென்பதையும், ஏகாக்ஷரமாகிய ஓங்காரத்தின் அங்க மென்பதையும் விளக்குதற் பொருட்டே இப்பாட்டின் முதலடியில் "தந்திரமேயிது" என்றார். இப்பாட்டில் கண்டெடுத்த எழுத்துக்கள் முந்தின காண்டங்களில் கூறியிருக்கும் முறைப்படியே தனித்தனி பிரித்தெடுக்கப் பட்டன. இதில் எலுமிச்சம்பழத்துக்குப் பந்திடல் என்று சொல்லிய பரிபாஷை நாமம் இந்நூலில் பலவிடங்களில் வழங்கப்பட்டு வருதல் ஆங்காங்குக் கண்டுணர்ந்து கொள்க. கெந்தியென்பது சத்தி சரக்கானதால் இதில் வரும் மந்திரம் சத்தி பீஜமென்பதைக் காட்டும் பொருட்டே இப்பாட்டின் மூன்றாவ தடியில் "கெந்தியும்" என்று குறிப்புக் காட்டினார். இந்தச் சக்தி பீஜமானது மிகவும் ஆச்சரியம் பொருந்திய தென்பதை விளக்கும் பொருட்டே அவ்வடியில் விந்தையினாமமே எனக்குறிப்பிட்டார் பராசக்தியே உலகரக்ஷிப்புக்குக் காரணமா யிருத்தலின் "ஐந்தருவின்னிகர் சுந்தரி" என்றுங் கூறினார். சத்திக்கும் பரமாத்துமாவே உடனின்று எல்லாவற்றையுந் துலக்குபவனாதலின் "அவளுக்கு விழிதந்தவனும். அவளிடத்திற் றோய்பவனும்" என்றார் இந்தச் சுத்திபீஜத்துள்ளும் பரமாத்மா கலந்திருப்பதால் "அவனுந்தி" என்றார். இதில் சிவசத்தி அம்சங்கள் சேர்ந்திருப்பதை முன்னிட்டே "இரண்டதே" என்றும் ஈற்றில் கூறினர். இன்னும் இப்பாட்டிற்குச் சில மகான்கள் பற்பல விதமாகப் பொரு ளுரைப்பர். நாம் கேட்டபடி எமக்குத்தெரிந்த வரை இங்குத் துலக்கினோம். விசேஷமாகச் சொல்வோர்கிடைப்பினும் அவர்களிடமும் கேட்டுத் தெரிந்து கொள்க. நாம் இதற்கெழுதின

விளக்கம் சரியில்லையெனத் தெரிந்த மகான்கள் வேறு விதமாக எழுதியனுப்பினும் அதை அவர்கள் பெயருடன் மறுபதிப்பில் வெளியிடச் சித்தமாயிருக்கின்றோம்.

இதன் முதற்காண்டத்தின் நூலாரம்பத்தில் அந்தரமென்று தொடங்கினதாலும், இக்காண்டத்தின் நூலாரம்பாகிய இப்பாட்டிலும் அதே விதமாக அந்தரமென்று தொடங்கினதாலும், இந்தக்காண்டத்திற்கும், அந்தக் காண்டத்திற்கும் தொந்த முண்டென்றும், இன்னும் பல விசேஷங்களடங்கியிருக்கின்றன வென்றும் பல மகான்கள் சொல்லுகின்றார்கள். அவ்விசேஷங்களை அத்தகையர்க்குத் தொண்டு செய்தேனும் கேட்டுணர்ந்து கொள்க.

இனி, இது முதல் ஐந்துபாடல்களால் பாதாள அஞ்சனத்திற்கான சில தேவதைகளின் மந்திரங்களைச் சொல்லுகின்றார். இவற்றின் விபரங்கள் இப்பாடல்களுக்கு மேல்வருஞ்செய்யுளால் விளங்குமாதலின் அப்பாடல்களை மட்டும் இவ்விடத்தில் உரையின்றி யெடுத்தெழுதுகிறேம். 3

கலி விருத்தம்.

செப்பு மந்திரஞ் செப்பினங் கண்டறி
ஒப்பு மந்திர மோதுவங் கேண்மினோ
துப்பு மாமக டாவெனச் சொல்லிடுந்
தப்பு றாமல் தனுசரின் கும்பலே. 4

இங்கு சாவென வீட்டிக மோடுநீ
தங்கு சாவெனுந் தாட்டிக மோடுநீ
பங்கி யாகிய பாதாள பூதபா
துங்க மாகத் துலங்க வழிவிடு. 5

பூத ராட்சத புள்ளொளி பூவனே
வேத ராட்சத மெய்யொளி வீரனே
சீதை தூது சிறந்தது மானுவே
பாதை யாக வழிவிடு பாத்திட. 6

வெள்ள மேனி விரிந்தவே தாளனே
பிள்ளை துக்கிய பூதப்பி டாரனே
பள்ள முற்றிடு பாதாள பண்பெலாம்
கொள்ளை யாகவே கோத வழியிடு. 7

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கேளப்பா வீரபத்திர நாத மூர்த்தி
கெடியான மாலைவன்னி காலை வன்னி
வாளப்பா கருநீலி நீல கண்டி
யசுரர்களைத் தகர்த்தெறிந்த வண்ட நீலி
நாளப்பா வாங்காரி யமுரி சூலி
நங்கையுடன் பிறந்தாளே நாத வல்லி
காளப்பா காளிகா ளாஸ்திரி தேவி
காட்டேறி யுமாதேவி காளி கன்னி. 8

இச்செய்யுள்கள் ஐந்தினும் அடங்கி யிருப்பவை பாதாள அஞ்சனத்திற்கு வசப்படுத்தவேண்டிய தேவதைகளின் மந்திரங்களாம். அவற்றை யெடுத்துச்சரிக்கும் விதம் பின்வருஞ் செய்யுளால் விளங்கும்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இங்குரைத்த செய்யுள்களி னிடைச்சொ னீக்கி
யியல்பாகப் பேரழைத்துப் பிந்திச் சேர்த்துச்
சங்கையுடன் முன்னவின்ற சூக்ஷந் தன்னைச்
சாற்றிடுவா மாணாக்கா தயவாய்க் கேண்மோ
திங்கடன்னை யரவந்தான் றீண்டும் போது
செய்யும்வகை செப்பிடுவேன் றேசத் தோரே
சங்கையுடன் சாம்பிராணி புட்பஞ் சரீந்தந்
தாம்பூலங் கதலிலிம் பழமு மாமே.

இதுமுதல் மேற்படி மந்திரங்களை உச்சரித்துப் பூசிக்கும் விதங்கூறுகின்றார்.

(இ - ள்.) இங்குச் சொல்லிவந்தமேற்குறித்த ஐந்து பாடல்களிலு முள்ள மத்தியிற் கலந்து வருஞ்சொற்களை நீக்கிவிட்டு அவற்றிலுள்ள தேவதைகளின் நாமங்களை எடுத்துப்பின்வைத்து அவற்றிற்கு முன்னாலே மூன்றாவது பாட்டிற் கூறியிருக்கும் ஏகாக்ஷரத்தையும், சத்தி பீஜத்தையும் சேர்த்துக் கொண்டு சந்திரனைப் பாம்பானது தீண்டுகிற (கிரஹணத்தின்) போது செய்யும் படியான மார்க்கத்தைச் சொல்லுவேன்; இத்தேசத்தில் நன் மார்க்கங்களை யுணர்ந்த மாணாக்கனே! கேட்பாயாக :இப்பூசைக்கு மதிப்போடு சாம்பிராணி,

புஷ்பம், சந்தனம், வெற்றிலைபாக்கு, வாழைப்பழம், எலுமிச்சம்பழம் இவைகளாகும். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: 4 ஆவது பாட்டின் 3 ஆவது அடியிலுள்ள "மாமகடார்", என்ற சொல்லில் நடுவேயிருக்கிற 'மக', என்றதை நீக்கினால் (மாடார) என்றிருக்கிறது. இதுதான் நடுச்சொற்களை நீக்கிப் பெயர்களையெடுத்துக் கொள்ளும் மார்க்கம். இவ்விதமே மற்ற பெயர்களையும் அறிவுடையோர் ஆராய்ந்தெடுத்துக்கொள்க. இவ்வாறு தாம் தாமே தெரிந்தெடுத்துக் கொள்ளும் சக்தி யுடையோரே இத்தொழிலுக் குரியராதலினாலும், இத்தகையர் இலகுவில் தெரிந்துக்கொள்வா ராதலினாலும், மற்றையர்க்கு விளக்கியும் பயன்படா தாதலினாலும் இவ்விபரம் இங்குத் துலக்காமல் விடப்பட்டிருக்கிறது. இது நமதாசிரியரின் கட்டளைப்படியே செய்யப் படடிருக்கிறது. இவ்விபரத்தை வெளிப்படையாகக் காட்டினால் உலகத்தவர் மகான்களை மதிக்கார்களென்பதையும், பலர் கெட்டவழியிற் பிரவேசித் தழிவாரென்பதையும் உத்தேசித்தே அவர்கள் இவ்வாறு கட்டளையிட்டதாக எண்ணுகிறோம். ஒருவாறு இந்தக்கட்டளையை மீறினாலும் மீறுவோம் என்றெண்ணியே அவர்கள் இவ்விபரங்களை நமக்குங் காட்டாது மறைத்து விட்டார்கள். இதனால், நண்பர்களுக்கு இதைக்காட்டாமல் வஞ்சித்த குற்றத்திற்கும் உள்ளாக மாட்டோம். அப்படியே நாம் கேட்டிருந்து விளக்கினாலும் குருமுகத்தில் கேட்டுத் தெரியவேண்டியவைகள் இப்பாடல்களில்லாத பலவுள வாதலின் அப்பொழுதும் பயன்படாது. இப்பாடல்களிலுள்ள தேவ நாமங்களை எடுத்துச் சத்தி பீஜத்துடன் சேர்த்துக் கொண்டாலும் இவற்றிற்குச் சக்கர முதலியவைகளும் இருக்குமாதலின் அவற்றைத் தெரிவதற்கேனும் ஓர் குருவைத் தேடித்தான் போகவேண்டும். ஆதலின், இவ்விஷயங்களிற் பழக விருப்பமுள்ளோர் ஒரே முடிவாகச் சரியான குருவைத்தேடி அவரிடம் உபதேச முறையாகப் பணிபுரிந்து கேட்டுணர்ந்து கொள்வார்களாக.

மேற்கண்டவாறு கேட்டுணர்ந்தோ அல்லது, தாமாகத்தெரிந்தோ கொண்டபின் இந்தப்பாடல்களிலுள்ள மந்திரங்களை யெடுத்து அவற்றேடு ஏகாக்ஷரம், சத்தி பீஜம் முதலியவற்றை ஆதியிற்சேர்த்து சக்கர முதலியனவரைந்து அவற்றிற்குரிய ஸ்தானத்தில் கிரஹண காலத்தில் ஸ்தாபித்துச் சாம்பிராணி, புஷ்பம், சந்தனம், தாம்பூலம், வாழைப்பழம், எலுமிச்சம்பழம் இவைகளைக்கொண்டு அடியில் வரும் பாடலிற் கூறுகிறபடி பூஜைசெய்து உருவேற்றவேண்டும். 9

இதுவுமது

பழத்தினோ டிவையனைத்து முன்பில் வைத்துப்
பட்சமுறச் சற்குருவை மனத்தி லுன்னி
அழகாக வுருப்போடு தடவை நூறா
வாரறிவா ருலகத்தி னருமை தன்னைக்
கழங்காக வுருவதுவு முடிந்த பின்னீ
கர்த்தாவை மனத்திலுன்னிப் பூசை பண்ணு
விழைவாக வேதையினிக் கோடி கோடி
விண்டிடுவேன் கண்டிடுவாய் வீறுள் ளோனே.

இதில் மேற்கண்ட மந்திரங்களை உருப்போடும் விதம் கூறுகின்றார்.

(இ - ள்.) முந்தின பாட்டிற்குறித்த எலுமிச்சம்பழத்தினோடு மற்றெல்லா வஸ்துக்களையும் யந்திரத்துக்கு முன்னாலே வைத்துச்சிநேகம் பொருந்தும்படியாகச் சன்மார்க்கமுள்ள குருவை மனதிற்றியானித்து மிகவும் அழகாக மேற்குறித்த மந்திரங்களை நூறு முறை உருப்போடக்கடவாய். இப்பூமண்டலத்தில் இம்மந்திரத்தின் அருமையை எவருணர்வார்? தேவதைகளின் வெறியாட்டானது உண்டாகும் படியாக அந்த நூறு உருக்களும் முடிந்த பின்னர் ஆகிகடவுளை நெஞ்சகத்திலிருத்திப் பூசையைச்செய்து முடிக்கக் கடவாய். அப்படி முடித்துக் கொள்வதினாலுண்டாகும் கோடானு கோடி வேதைகளை இனி விருப்பத்தோடு சொல்லுவேன். மகா வெற்றி பொருந்திய மாணவனே! அவற்றைக் கண்டுணரக்கடவாய். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: மேற்கண்டவாறு மந்திரங்களை நூறுமுறைஜெபித்து முடிவில் எல்லாம் வல்ல இறைவனை மனத்திருந்தி முற்குறித்த வஸ்துக்களை நிவேதித்துப் பூசையை முடிக்கவேண்டும். "தேவதைகளின் வெறியாட்டானது உண்டாகும்படியாக உரு முடிந்தபின்," என்று சொன்னமையால் இம்மந்திரங்களை உச்சரிக்கும் போது ஆவேசமுண்டாகு மென்பது புலப்படுகின்றது. குரு கடாக்ஷமின்றி இக்காரியம் முடிவு பெறாதாதலால் "சற்குருவை மனத்திலுன்னி" என்றார், இதை முடித்துக்கொள்வதால் அளவற்ற விசேஷங்களுண்டா மென்பதைக் குறிக்கும் பொருட்டு "வேதையினிக் கோடானுகோடி விண்டிடுவேன்" என்றும், "இதை முடித்தவனுக்

கொருவரு மெதிரில்லை" யென்பது தோன்ற "வீறுள்ளோனே" என்றுங்கூறினார். 10

இதுவுமது.

வெள்ளியொடு திங்களெனுந் திவாவின் போது
விண்டதுபோற் புரிந்திடுவாய் தடவை யொன்று
வள்ளியதோ ரித்தகைநீ செய்த பின்பு
நாதாந்த மையெடுத்துக் கையில் வைத்து
விள்ளுவாய் தடவையொன்று விளக்க மாக
வேதாள பாதாள வெளிச்ச மாமே
பிள்ளையொடு பெண்டீர்க்கும் நேய ருக்கும்
பேசாதே யிக்கருவைப் பித்தர் போலே.

இதில் மேற்சொல்லிய மந்திர பலத்தால் பாதாள அஞ்சனத்தை உபயோகிக்கும் விதங் கூறுகின்றார்.

(இ - ள்.) மேற்பாட்டிற் குறித்தபடியே இன்னும் வெள்ளிக் கிழமையோடு திங்களென்று சொல்லப்பட்ட நாள் வரும்போதும் ஒருதடவை பூசைபுரியக் கடவாய். சிநேகத்தைக் கொண்ட இம்மாதிரி நீ செய்து முடித்தபின்பு நான்காங் காண்டத்திற் சொல்லிய சிவசொரூபமாகிய பாதாள அஞ்சனத்தைக் கையிலெடுத்துவைத்து இந்த மந்திரத்தை ஓர்முறை தெளிவாக உச்சரிப்பாய். அப்படி உச்சரித்த மாத்திரத்தில் வேதாளமானது குடிகொண்டு தனம் முதலியவைகளைக் காத்திருக்கும்படியாகிய பாதாளத்திலுள்ள இரகசியமெல்லாம் வெளிப்படையாகத் தோன்றும். இந்தக் கருவினுடைய இரகசியத்தை அடக்கமற்ற பேயர்போல பிள்ளை, மனைவி, சிநேகிதர் முதலிய எவர்க்கும் சொல்லி விடாதே. எ - று

சூக்ஷுமம விளக்கம்: முந்தின பாட்டிற்சொல்லியபடியே பூசைசெய்து முடித்துக்கொண்டபின்பும் அதேபோல் வெள்ளிக்கிழமை ஒரு முறையும், திங்கட் கிழமை ஒரு முறையும், முடித்துக் கொள்ளவேண்டும் இவ்வாறு முடித்துக்கொண்டால்தான் பாதாள அஞ்சனத்துக்குச் சொல்லப்பட்ட வேதைகளெல்லாம் நடக்கும். இவ்விதமாகப் பூசையை நிறைவேற்றிக் கொண்டால் அஞ்சனத்தை உபயோகிக்குங் காலத்தில் மந்திரத்தை ஒருமுறை உச்சரிப்பதனாலேயே எல்லாத்தொழிலும் நடக்கும்படியான சித்தி கை கூடிவிடும். இந்த

மர்மத்தை வெளியிடுவோர் பித்தரே யாவரென்பதை வெளியிடற்கு "பித்தர் போலே" யென்றும், இது ஒருவர்க்கும் சொல்லத் தகாத தென்பதைக் குறிப்பிடற்கு பிள்ளையொடு பெண்டீர்க்கும், நேயருக்கும் பேசாதே என்றுங் கூறினார். இவர்களுக்கே வெளியிடக்கூடா தென்றதனால் மற்றையரைப் பற்றி நாம் சொல்ல வேண்டாம். 11

இதுவரை நான்காங் காண்டத்திற் கூறியிருந்த பாதாள அஞ்சனத்திற்குரிய மந்திர விபரத்தைக் கூறிமுடித்தார். இனி, ஒன்பதாங் காண்டத்திற் கூறியிருக்கும் கெவுனமணியைப் பற்றிய பாக்கி விபரங்களை எடுத்துக்கூறத் தொடங்குகின்றார்.

9 – ஆங் காண்டத்திற் சொல்லிய கெவுன குளிகைத் தொடர்ச்சி

கொச்சகக் கலிப்பா.

தவமுடன்றாத் திரியிலுறுந் தனுசோரே க்ண்டறிமின்
கெவுனமணி நடத்தைகளைக்கிளத்திடுவேன் கேட்டிங்கு
அவமற்ற மணியதனை யாவினமு தானதிலே
நவமுறப்போட் டெடுத்திடுவீர்நாற்பதெனு நாளன்றே.

இதில் மேற்படி கெவுனமணிக்கு ஏற்றும் மற்றொருவித ஊற்றத்தைக் கூறுகின்றார்.

(இ - ள்.) தவமகிமையினாற் பூவுலகத்திற் சனித்த மானுட வர்க்கத்தாரே! 9 - ஆங் காண்டத்தின் 60 - ஆம் பாட்டிற் கூறியபடி சித்தப்படுத்திக் கொண்ட கெவுன மணியைப்பற்றிய செய்கைகளை இங்கெடுத்துரைப்பேன் கேட்டுணர்வீர்களாக. பாவமில்லாத அந்தமணியைப் பசுவின்பாலிலே புதுமை பொருந்தும்படியாக நாற்பது நாளளவு ஊறப்போட்டெடுத்துக் கொள்ளக் கடவீர்களாக. எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: இந்த மணியை நாற்பதுநாள்வரை பசுவின் பாலிற்போட் டெடுப்பதில் ஒவ்வொரு நாளும் புதியபால் சேர்த்துக்கொள்வது நலமாமென்று நினைக்கிறோம். ஆயினும், இவ்விபரத்தை அனுபவசாலிகளிடம் கேட்டுத் தெரிந்துகொள்க. இதுவரை பலவிடங்களில் மாணாக்கனை முன்னிலைப்படுத்திச் சொல்லிக் கொண்டுவந்தவர் இப்பாட்டில் உலகத்தவரை முன்னிலைப் படுத்திச் சொல்லியதற்குக் காரணம் இந்தமணி உலகமெல்லாம்

மயங்கும்படியான தொழிலைச் செய்வதை இவ்வாறு சொல்வதனால் வெளிப்படுத்தவேண்டுமென்று இந்நூலாசிரியர் கருதியதே. இவ்விபரத்தைக் கேட்டற்குரியார் தவம் பொருந்தியோரே யாதலின் "தவமுடன் தாத்திரியிலுறுந்தனுசோரே" என்றும், இந்த மணியானது பிரமிக்கத் தகுந்த பல வேலைகளைச் செய்யுமாதலின் "கெவுனமணி நடத்தைகளைக் கிளத்திடுவேன்" என்றும், இம்மணியால் எத்துன்பமும் நேராதென்பது தோன்ற "அவமற்றமணி" என்றும், இதனால் நடக்கும் தொழிலெல்லாம் புதுமையுள்ளன வாதலின் நவமுறப்போட்டு, என்றுங் கூறினார். 12

அறுசீர் விருத்தம்.

மண்ட லம்மது மாட்டிய மருந்ததை
மகிழ்வுட னெடுத்திடுநீ
விண்ட லத்தினி லேகிட வாயினில்
விழுங்கிடு வாய்மணியைத்
தென்ற லிற்சுழல் துரும்பெனச் சிறகுட
னெழும்பிய சிறையினைப் போல்
விண்டி டும்மொரு கடிகையி லுயரமில்
விகுவுட னெழுவாயே.

இதில் முன்சொன்னபடி நாற்பதுநாளூறப் போட்டெடுத்த மணியினால் நடக்கும்வேதையைச் சொல்கின்றார்.

(இ - ள்.) முற்பாட்டிற் கூறியபடி நாற்பதுநாள்வரை பசுவின்பாலில் ஊறப்போட்டெடுத்த மருந்தாகிய கெவுனமணியை மாணாக்கனே! நீ மகிழ்வுடனெடுத்துக் கொள்ளக் கடவாய். அப்படி யெடுத்துக் கொண்டவுடன் அந்தமணியை ஆகாயத்திற் பறந்து செல்லும் பொருட்டாக வாயிலடக்கிக் கொள்ளக்கடவாய். இவ்வாறு செய்வாயானால் நீ தென்றற்காற்றினால் ஆகாயத்திற் சுழன்று செல்லுந் துரும்பைப்போன்றும், இறகுகளோடு மேலேயெழும்பிப் பறந்த சிறகுள்ள பக்ஷிகளைப்போன்றும் சொல்லும்படியான ஒரு நாழிகை நேரத்தளவு மிகவும் பலத்தோடு ஆகாயத்திற் கிளம்பிச் சஞ்சரிப்பாய்.

சூக்ஷும விளக்கம்: இப்பாட்டின் ஈற்றில் "விண்டிடு மொருகடிகையில்," என்றதனால் இவ்வாறு நாற்பதுநாள் பாலிலூறப்போட்டெடுத்த மணிக்கு ஒரு நாழிகையளவுதான் மேலே

கொண்டுபோகுந் தன்மை யுண்டென்பது விளங்குகின்றது. இன்னும் இதனைப்பின்வரும் முறைகளின்படி விசேஷசித்ததாக்கிக் கொண்டால் அந்தந்த விசேஷங்களுக்குத் தக்கபடி குணமும் அதிகப்பட்டுக் கொண்டே போகும். "விண்டிடுமொரு கடிகையில்," என்பதற்கு மணியை வாயிலடக்கிக்கொண்டவுடன் ஒரு நாழிகைசென்று மேலே கிளம்புவாயென்றும் பொருளுரைக்கலாம். எனினும், பின்வரும் முறைகளில் ஒவ்வொன்றுக்கும் தூரத்தையே அதிகப்படுத்திச் சொல்லி யிருப்பதால் முன் கூறியதே சிறப்புடைத்தென்க. இம்மணியை வாயிற் போட்டவுடன் மேலே தூக்கிச்சென்றாலும் மெதுவாகச் செல்லா தென்பதுதோன்ற "தென்றலிற் சுழல் துரும்பென," என்றார். 13

வேறுவித அறுசீர் விருத்தம்.

மணியை மறுத்து மாவின்பால்
மாட்டு வழுத்தும் வாறதுபோல்
தணிய வெடுத்து வாயடக்கு
சாருங் கடிகை பதின் வழியே
திணியச் செலவே யுயரெழும்பும்
செப்பும் வகைபோ லினிக் கேளு
குணிய வேங்கை யிலைச் சாற்றிற்
கூறும் வகைபோ லாற்றிடுவாய்.

இதில் வேறொரு வேதை சொல்கின்றார்.

(இ - ள்.) முன்கூறிய மணியை யெடுத்து மீண்டும் பசுவின் பாலினிடமாக முந்தின கிரமப்படியே போட்டுவிடக் கடவாய். அவ்வாறு போட்டு அதிலிருந்த தோஷமெல்லாம் தணிந்துபோனபின் எடுத்து வாயிலடக்கிக்கொள்ளக் கடவாய். அப்படி யடக்கின மாத்திரத்தில் அந்த மணியினது வலிமையால் தேகமானது பொருந்தும்படியான பத்து நாழிகை வழித்தூரம் ஆகாயத்திற் கிளம்பிச்செல்லும். மேலும், நாம் சொல்லுகிற மார்க்கத்தைக் கேட்பாய். மேற்படி மணியின் பலத்தை இன்னும் அதிகரிக்கச் செய்ய வேண்டுமானால் குணம் பொருந்திய வேங்கையிலைச்சாற்றில் முந்திச்சொன்ன முறைபோல் நாற்பதுநாள் போடுவாயாக. எ - று.

சூக்ஷுமவிளக்கம்: முந்தின பாட்டிற் சொல்லியபடி ஒரு நாழிகை வழித்தூரம் மனிதனை ஆகாயத்திற் கொண்டுசெல்லும் தத்துவம் அமைந்திருந்த மணியை மறுபடியும் ஒரு மண்டலம் அதேவிதமாகப்

பாலிற்போட்டெடுத்தால் பத்துநாழிகை வழித்தூரம் கொண்டுசெல்லும் தத்துவம் அதற்கு உண்டாகும். அதன்மேல் அதை இன்னும் விசேஷப்படுத்தவேண்டுமானால் வேங்கையிலைச்சாற்றில் நாற்பதுநாள் போடவேண்டும். இதனாலுண்டாகும் தத்துவத்தைப்பற்றி அடுத்த பாட்டிற் கூறுவார். 14

இங்கு இந்த மணியானது பத்துநாழிகை வழித்தூரம் ஆகாயத்திற் கொண்டுசெல்லும், இருபது நாழிகை வழித்தூரம் கொண்டுசெல்லும் என்றுசொல்லிவருவதைப்பற்றி முன்னிலைமை யறியாதசில புதுநாகரீகக் காரர் அருவருப்படைதல் கூடும். இவ்வாறடைவதற்குக் காரணம் அவர்கள் நம் முன்னோரின் சாஸ்திரங்களை ஆராயாம லிருப்பதும், அறிந்தாலும் அவற்றிலுள்ளபடி செய்யும் திறனற்றிருப் பதுமாம். பெரியோர்கள் சாஸ்திரம் ஒருகாலும் பொய்யாகாது. அவற்றிலுள்ளவை கைகூடாவிடின் நமக்கு அறியும் ஆற்றலில்லை யென்று விசனிக்க வேண்டுமே தவிர பெரியோரை நிந்தித்தல் தவறாம். இவற்றையெல்லாம் செய்தனுபவித்து எழுதி வைப்பார்களேயன்றி அனுபவிக்காமல் வீணே பொய்யாக ஒரு சாஸ்திரத்தை எழுதிவைக்க மாட்டார்கள். அவ்வாறெழுதிவைத்தும் அவை மந்தமதியினரும் நிந்திக்கும்படியாகக் கைக்கூடாமற் போனதற்குக் காரணமியாதெனில், இக்காலத்தவர்க்குத் தவம், ஞானம், அடக்கம் என்பவை குறைவுபட்டிருப்பதேயென்க. இவ்விதம் கால மாறுபாட்டால் உலகவியல்வெவ்வேறு விதமாமென்பதை யுணராமலே சிலர் முற்காலத்தில் நடந்ததாகச் சொல்லும் அரும்பெருங் காரியங்களிலெல்லாம் அவநம்பிக்கை வைத்து அவற்றை யெடுத்துரைப்போரையும் தூஷித்து வருகின்றார்கள். இத்தகையர் அறிஞரால் வெறுக்கப்பட்டவரே யாவர். இக்காலத்தும் இவ்வித பெருஞ்செயல்கள் செய்யும் மகான்கள் இல்லையென்று சொல்லல் நம்மாலியலாது. அவர்களெல்லாம் கலிகாலமாறுபாட்டை யுத்தேசித்து மறைந்து வாழ்ந்து வருகின்றார்களென்றே சொல்லலாம். இதைப் பார்த்தவுடன் அசம்பாவிதமெனத் தள்ளாமல் இப்படியும் ஒன்றுண்டா? இதன் முடிவைப் பார்ப்போம் என்று கங்கணங்கட்டி இடைவிடா முயற்சியுடன் ஊணுறக்கமின்றி அத்தகைய மகான்களைத் தவமியற்றித் தேடிக்கண்டு தொண்டுபுரிந்து உபதேசம்பெற்று முறைப்படி இதனைச் செய்துமுடித்தால் இங்குச் சொல்லியிருப்பதுபோல் நடக்குமென்பதில் ஐயமின்று, நம்பிக்கை வைக்காதவர்க்குக் கிஞ்சித்தும் பலிக்காது. இத்தகைய காரியங்களெல்லாம் இலகுவிற் சித்திப்பவைகளல்ல. கைகூடவேண்டுமானால் தவஞ்செய்து தெய்வ கடாக்ஷத்தையும்

அடையவேண்டும். இவ்வித நிலைமை ஒரு சிறிதுமின்றி, திண்ணைச் சோம்பேறிகளாய்த் தூங்கி விழுந்துகொண்டு எல்லாங் கண்டவர்போ லபிநயித்து புத்தகத்தைப் பார்த்த மாத்திரத்தில் ஒவ்வொரு காரியமும் கைகூடவில்லை யென்றுவருந்திச் சிலர் பெரியோர்களை நிந்திக்கின்றார்கள், இவர்கள்மதி என்னை? அந்தோ! இவர்க்குக் கடவுளர்தாம் புத்தி புகட்டவேண்டும். ஒரு நிமிஷ நேரமாயினும் மனத்தை ஒருவழிப்படுத்தியிருக்கும் வன்மையில்லாத இவர்க்கு இத்தகைய காரியங்கள் எவ்வாறு கைகூடும்? "கந்துகம் மதக் கரியை வசமா நடத்தலாம்" என்ற தாயுமானவர் பாடலை ஆராய்ந்தால் எல்லாம் நன்கு விளங்கும்.

வேறு செய்யுள்.

போட்டமணி யானதைநீ பொற்புட னெடுத்து
வாட்டம் துறாமலுன்றன் வாய்தனி லடக்கு
ஈட்டமுட னேயிழுத்த தேகவெளி தன்னில்
கூட்டிடுமே காதமது கூறும்பதி னைந்தே.

இதில் மேற்படி மணியின் வேறொரு வேதை சொல்லுகின்றார்.

(இ - ள்.) மேலே கூறியபடி வேங்கையிலைச் சாற்றில் நாற்பதுநாள் போட்ட கெவுனமணியானதை நீ அழகோடு எடுத்துச் சிறிதும் மனவாட்டத்தை யடையாமல் உனது வாயிலடக்கக் கடவாய். அவ்வாறடக்கினால் அது உனது தேகத்தை நெருக்கத்தோடு இழுத்துக்கொண்டு ஆகாயத்தில் செல்லும்படியான பதினைந்து காதவழித்தூரம் செல்லும். எ - று.

சூக்ஷுும விளக்கம்: முன்பாட்டிற் குறித்தபடி வேங்கையிலைச் சாற்றில் நாற்பதுநாள் ஊறப்போட்டெடுத்த மணிக்கு ஆகாயத்தில் பதினைந்து காதவழி தூக்கிச்செல்லும் தத்துவமுண்டு. 15

வேறு செய்யுள்.

முன்ன வின்றவிலைச் சாற்றின் மணியை
முன்னின் வாறியல் போட்டிடு
மின்னை வென்றமணி தன்னை வாய்தனில்
விழுங்கு வாய்மகா வொழுங் குடன்
தென்னல் வீசுமெழில் நூறு காதவழி
சேர்த்தி டும்மகா நேர்த்தியா

இன்னம் வேதையினி நன்ன யத்துட
னியம்பு வேனெவருங் காணவே.

இதில் மற்றொரு வேதை சொல்லுகின்றார்.

(இ - ள்.) மேலுரைத்தபடி பதினைந்து காதவழித்தூரங்கொண்டு செல்லத்தக்கமணியை மீண்டும் அதே வேங்கையிலைச் சாற்றிலேயே இயற்கையோடு நாற்பது நாள் போட்டெடுக்கக் கடவாய். அப்படியெடுத்துக் கொண்டவுடன் பிரகாசத்தினால் மின்னலை வென்ற அந்த மணியைக் கிரமப்படியே வாயிற்போட்டு அடக்கிக்கொள்ளக் கடவாய். அவ்வாறு செய்யின் அம்மணியானது கருமை நிறத்தையுடைய நல்ல அழகானது விரியா நின்ற ஆகாசத்தின் நூறு காதவழித் தூரத்தில் அடக்கினவனுடைய தேகத்தைக் கொண்டுபோய் மிகவும் நன்மையாகச் சேர்க்கும். இன்னும் இதனுடைய வேதைகளை மிகவும் நயத்தோடு எவருங் காணும் பொருட்டாகச் சொல்லுவேன் மாணாக்கனே! கேட்கக்கடவாயாக. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: முந்தின பாட்டிற் கூறிய மணியை மீண்டும் வேங்கை யிலைச்சாற்றில் நாற்பது நாள் போட்டெடுத்துக் கொண்டால் அதற்கு ஆகாயத்தில் நூறு காதவழித்தூரம் மணிதனைக் கொண்டு செல்லும்படியான தன்மை வந்துவிடும். இந்தமணி மேற்கண்டவாறு செய்தவுடன் மின்னலைப்போற் பிரகாசிக்குமென்பது தோன்ற "மின்னை வென்றமணி" என்றார். "இன்னம் வேதையினி நன்னயத்துட னியம்புவேன்" என்றதனால் இதில் இன்னும் அநேகம் அபூர்வச்செயல்கள் அடங்கியிருக்கின்றன வென்பது தோன்றுகிறது. 16

வேறு செய்யுள்

கவுலுவேன் மணியை வனமது கரியா மத்தமிலைத்
திவலுறு சாற்றில் மண்டல மரையே செலுத்திடுவாய்
நவமுற வாயின் விழுங்கிடு தான மதிற்சாரக்
கவலுவே னறுநூறு காவதம் வழியிற் கமதியாமே.

இதில் மேற்படி மணியினது மற்றொரு வேதை சொல்லுகின்றார்.

(இ - ள்.) முன்பாட்டிலுரைத்த நல்லமிசத்தைப்பொருந்திய மணியை மேலும்நிறமானது கறுப்பாயிருக்கப்பட்ட மத்தமிலையினது துளிபொருந்திய சாற்றில் அரை மண்டலம் போட்டெடுத்துக்கொள்ளக்

கடவாய். பின்பு அதைத் தவம் பொருந்தும் படியாக வாயிலடக்கி கொள். அவ்வாறு செய்யின் ஆகாயத்தினிடத்திற் பொருந்தும் படியாக அறுநூறு காதவழிக்கப்பால் வேகத்தோடு கொண்டுபோய் உன்னைச்சேர்க்கும். மேலும் சொல்வேன் கேட்பாயாக. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: நிறமானது கறுப்பாயிருக்கப்பட்ட மத்தமிலையாவது கறுப்பூமத்தையிலை. இந்த இலைச்சாற்றிலேயே மேற்கண்ட மணியை அரைமண்டலம் ஊறப்போடவேண்டும். இவ்வாறு செய்து கொள்வதால் இந்தமணிக்கு ஒரு மனிதனை ஆகாயத்தில அறுநூறு காதவழிக்கப்பால் கொண்டுபோகும்படியான தன்மை வந்தடையும். முன் சொல்லிவந்த ஊற்றத்திலெல்லாம் இதற்கு முந்தியபாட்டில் சொல்லிய ஊற்றமானது விசேஷமென்பது தோன்ற இப்பாட்டின் முதலில் "நல்லமிசத்தைப் பொருந்தியமணி," என்னும் பொருள்பட வுரைத்தார். "தவமுறவாயில் விழுங்கிடு," என்றது இப்பாட்டிற் சொல்லிய முறைப்படி ஊறப்போட்ட மணியானது அறு நூறு காதவழிக்கப்பால் கொண்டுபோகுந் தன்மையுடைய தென்பதைச் சிறப்பித்தற்காம். 17

கும்பி.

இங்கு நவின்றிடு மிலையின் சாற்றினா
லியற்று வாய்கோ நயத்துடன்
பொங்கிய மணியைச் சங்கையுடன் வாயிற்
போட்டிடு வாய்வெகு நாட்டமுடன்
துங்க முடனதோ ராயிரங் காவதஞ்
சுற்றிடு மேவெகு பத்தியுடன்
கெங்கை மலையு முலவும் வகைகள்
கிளத்து வேன்வெகு கெடியதாய்.

இதில் பின்னுமொரு வேதை வழுத்துகின்றார்.

(இ - ள்.) மேற்பாட்டிற் சொல்லிய அந்தக் கறுப்பூமத்தைச் சாற்றிலேயே இந்த மணியைப் பழையபடியும் ஒருமுறை சிறந்த நலத்தோடு அரைமண்டலம் போட்டெடுத்துக் கொள்ளக் கடவாய். அவ்வாறு எடுத்தவுடன் அழகுமிகுந்த அம்மணியை உயர்வோடு வாயிற்போட்டுக்கொள்ளக் கடவாய். அப்படிப் போட்டுவிட்டால் அது மேலான எண்ணத்தோடும், கனத்தோடும் உன்னை ஆயிரங் காதவழி மேலே கொண்டு போய் மிக்க சிநேகத்தோடு கண்டவிட

மெல்லாம் சுற்றும். இனி, இதன்உதவியால் கங்கை, மலை, முதலியவிடங் களுக்கெல்லாம் சென்று உலாவிவரும்படியான மார்க்கங்களையும் வெகு கீர்த்தியோடு சொல்லுவேன், எனதன்பிற் குரியவனே! கேட்பாயாக. எ - று.

சூக்ஷூம விளக்கம்: "இங்கு நவின்றிடு மிலையின் சாறு," என்றதனால் மேற்பாட்டிலுள்ள கறுப்பூமத்தைச் சாறென்றே விளங்குகின்றது. ஆதலால், அந்தக் கறுப்பூமத்தைச் சாற்றிலேயே மீண்டும் அந்த மணியை அரைமண்டலம் போட்டெடுத்துக் கொள்ளவேண்டும். இவ்வாறு இரண்டாமுறை மடக்கிச் செய்வதால் இந்த மணிக்கு ஆயிரங் காதவழித் தூரம் மனிதனை மேலே கொண்டு போகும்படியான ஆற்றலுண்டாகும். இஃதன்றி "இங்கு நவின்றிடுமிலை" என்றதற்கு அடுத்தபாட்டிற் சொல்லுமிலையெனப் பொருள் கூறுவாருமுளர். அடுத்தபாட்டிற் சொல்லுமிலைக்கு வேறு செய்கைகள் கூறுவதாலும், இப்பாட்டினீற்றில் இதன் செய்கையை வேறு பிரித்துக்கூறி "கெங்கைமலையு முலவும்வகைகள் கிளத்துவேன்" என்று அடுத்தபாட்டில் வருஞ் செய்கையைத் தனி விளக்குதலாலும் அது பொருந்தாதென்க. 18

கொச்சகக் கலிப்பா.

கலனக் கலனக் கரிநிகர் மலருடையோன்
இலையதனின் சாற்றில்முன் னியல்போல போட்டெடுத்து
மலையுங் கடலுங் கடந்திடவே வாயடக்கு
நிலையாக் கடலேழு நிமிடத்திற் கடந்திடுவாய்.

இதில் மேற்படி மணியினால் சப்த சமுத்திரங்களையும் தாண்டிச் செல்லுமார்க்கங் கூறுகின்றார்.

(இ - ள்.) பக்தி மிகுந்த எனது சிஷ்யனே! கலகல வென்னும் சப்தம் தன்னிடத்தேயுண்டாக கரிபோன்ற மலர்களுடனே நின்று பிரகாசிக்கும்படியான ஓர் செடியினது இலைச்சாற்றில் முந்தின பாட்டிற்குறித்த மணியை முன்னுரைத்தவாறே அரைமண்டலம் போட்டெடுத்து மலைகளையும், கடல்களையும் தாண்டிடும் பொருட்டாக வாயிலடக்கிக்கொள்ளக் கடவாய். அப்படிச் செய்வாயானால் ஒரு நிமிடநேரத்தில் மேற்கண்டபடி சித்தப்படுத்திய

மணியினது வல்லபத்தால் ஏழு கடல்களையும், சப்தகுல பர்வதங்களையுந் தாண்டிச் செல்வாய். எ - று.

சூக்ஷூம விளக்கம்: கலகலவென்னும் சப்தம் தன்னிடத்தே யுண்டாக கரியைப்போன்ற மலர்களுடனே நின்று பிரகாசிக்கும்படி யான ஒரு செடியாவது (கறுப்பு வட்டக் கிலுகிலுப்பை.) இந்தச் செடியினது இலைச்சாற்றிலேயே மேற்படி மணியை அரைமண்டலம் போட்டெடுக்கவேண்டும். இவ்விதம் சித்தப்படுத்திய இந்த மணியை வாயிற்போட்டுக்கொண்டால் ஆகாய மார்க்கமாகக் கிளம்பி சப்த சமுத்திரங்களையும், சப்தகுல பர்வதங்களையும் தாண்டிப்போய்ச் சஞ்சரித்து வரலாம். அஃறிணையாகிய செடியை "மலருடையோன்" என்ற உயர்திணையாகக் கூறியது வைத்தியப் பரிபாஷைக்கிரமம் பற்றியென்க. "கலனக் கலனக் கரிநிகர் மலருடையோன்," என்பதற்குக் கறுப்பு வட்டக் கிலுகிலுப்பையென்று பொருள் எழுதியது முன்காண்டங்களில் பல விடங்களில் இவ்வாறு வழங்கிவந்திருப்பது கொண்டே. ஈற்றடியில் "நிலையாக் கடலேழு நிமிடத்திற் கடந்திடு வாய்," என்றுமட்டும் சொல்லியிருப்பினும் மூன்றாமடியில் "மலையுங் கடலுங் கடந்திடவே வாயடக்கு," என்றது பற்றிக் கடல்களோடு சப்தகுல பர்வதங்களையுந் தாண்டிச் செல்வாயென்று பொருளுரைக்கப் பட்டது. கறுப்பு வட்டக் கிலுகிலுப்பைச் சாற்றில் போட்டெடுத்ததனா லுண்டாகும் இம்மணியினது விரைவைக் குறிப்பிடற்கே "நிமிடத்திற் கடந்திடுவாய்," என்று ஈற்றிலுரைத்தார், 19

கலி விருத்தம்

மேல நோக்கி விரித்திடு கையதைக்
கோல மாகக் குடிலத்திற் கொண்டெழுஞ்
சீல மாகச் செகத்தினை நோக்கியே
கால மாக்கரங்காட்டவு நீட்டுமே.

இதில் முற்பாடல்களில் கூறிவந்தபடி மணியை வாயிற்போட்டுக் கொண்டபின் மேலேறுதற்கும், கீழிறங்குதற்கும் செய்யவேண்டிய உபாயத்தைச் சொல்லுகின்றார்.

(இ - ள்.) முன்னே கூறிவந்த கிரமங்களின் படியே இந்தமணியை வாயிலடக்கிக் கொண்டபின் ஆகாயத்திற்செல்ல வேண்டுமாயின்

கைகளை மேலே தூக்கி விரிக்கக்கடவாய். அவ்வாறு செய்தால் அம்மணியானது மிகவும் அழகாக உன்னை ஆகாயத்திற் கொண்டுபோய் விடும். அங்கிருந்து கீழேயிறங்க வேண்டினால் பூமிக்கு நேராகக் கீழேபார்த்துக் கரங்களை நீட்டும் பக்ஷத்தில் அங்கே கொண்டு சேர்க்கத் தனது வேகத்தை அதிகரிக்கச் செய்யும். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இந்தமணியை வாயிற்போட்டுக்கொண்டு மேலே போகவேண்டுமானால் கைகளை மேலே தூக்கி ஆகாயத்தைக் காட்டவேண்டும். அவ்வாறு ஆகாயத்திற் சஞ்சரித்துக் கீழிறங்கக் குறித்தவிடத்தில் கைகளைக் கீழேயிறக்கிப் பூமியைக் காட்டவேண்டும். இவ்விஷயம் இம்மணியைச் செய்பவர்க்கு அவசியம் தெரிந்திருக்க வேண்டுமாதலாலும், இது தெரியாவிடில் ஆகாயத்திற் கிளம்பியவுடன் கீழிறங்கமுடியாமல் தீங்குக்குள்ளாக நேருமாதலாலும் இங்கு இவ்விபரத்தை விளக்கிக்காட்டினார். 20

இதுவுமது

எண்ணிய தானம்போ யிருகை யேந்தியே
நண்ணவே நாடிய திசையிற் சேர்த்திடுங்
கண்ணகல் ககன்வெளி கடந்துங் காசினி
மண்ணெலா மிமைக்குமுன் மறைத்துச் சுற்றுமே.

இதுமுதல் மேற்படி மணியின் விசேஷ செய்கைகளைச் சொல்கின்றார்.

(இ - ள்.) முந்தின பாட்டிற் கூறியபடி குறிப்பிட்ட தானம் போயிறங்கிய பின்னர் மற்றோரிடத்திற்குப் போகும் எண்ண முண்டானால் முன்போலவே மணியை வாயிற்போட்டுக் கைகளை மேலே தூக்கிப் பொருந்தியிருக்க அம்மனிதனை ஆகாயத்திற் கொண்டுபோய்ப்பின் கீழிறக்க எண்ணிய திக்கில் கீழ்நோக்கிக் கொண்டுபோய்ச் சேர்க்கும். இம்மணியானது இங்கே குறித்தபடி செய்வது தவிர மேலேற்றிய கையைக் கீழிறக்காவிடில் கண்ணிமைக்கு முன் ஒரு மனிதனைத் தூக்கிக் கொண்டு விசாலம் பொருந்திய ஆகாய வெளியைக் கடந்தும், பூமியிலுள்ள மண்ணையெல்லாம் கண்ணுக்குத் தெரிய வொட்டாமல் மறைத்தும் மேலே போய்ச் சுற்றிக் கொண்டு திரியும். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: முன்பாட்டிற் கூறியபடி மேலேறிக் கீழிறங்கியபின் வேறோரு இடத்துக்குப்போக வேண்டுமென்று நினைத்தால் முந்தின கிரமப்படியே கையை மேலேற்றிக்

கீழிறக்கவேண்டும். மேலேறிப் போகும்போது சொன்னபடி கையைக் கீழிறக்காவிட்டால் ஆகாயத்தில் பூமி கண்ணுக்குப் புலப்படாத தூரத்தில் கொண்டுபோய் அங்குச் சுற்றித்திரியும். 21

வேறு செய்யுள்.

மண்டலமே ழுங்கடந்து வான்முகட்டி லேகியே
அண்டுதேவர் கும்பலு மடுத்திடும் ரிஷிகளும்
கண்டதி சயித்திடக் கனகவு ருலவிடும்
இன்றிதன் பெருமையை யினுஞ் சொல்வே னயத்துடன்

இதில் முன் சொன்னபடி கையிறக்காவிடில் ஆகாயத்திற் கொண்டு செல்லும் குளிகையானது செய்யும் விசேஷத்தைக் கூறுகிறார்.

(இ - ள்.) மேலே சொன்னபடி ஆகாயத்தில் ஒரு மனிதனைக் கொண்டு சென்ற மணியானது மேலும் கையை இறக்கா விட்டால் அது அப்படியே மேலேழு மண்டலங்களையுங் கடந்து அண்ட முகட்டிற்கொண்டு சென்று நெருங்கிய தேவர் கூட்டமும், சமீபிக்கும் இருடிகளும் பார்த்து ஆச்சரியங் கொள்ளும்படி பொன்னுலகமெல்லாம் உலாவிக்கொண்டு திரியும். இன்னும் இதனால் நடக்கப்பட்ட பெருஞ் செயல்களையும் இப்பொழு தெடுத்துரைப்பேன் கேட்டுணர்க. எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: இந்தமணியை வாயிற்போட்டிருக்குங் காலத்தில் மேலே தூக்கிய கையைக் கீழேமட்டும் இறக்காதிருந்தால் சிறிது நேரத்திற்குள் மானுடர் நெருங்குதற் கருமையாகிய தேவருலகத்தும் சென்று, அண்டரும், ரிஷிகளும் ஆச்சரியங் கொள்ளும்படியாக உலாவி வரலாம். தேவருலகத்தில் ஒரு மானிடன் சென்றால் எக்காலத்தும் தேகத்தோடு வரத்தகாதவன் எவ்வாறு வந்தானென்று அங்குள்ளார் அதிசயிப்பா ரென்பதைக் குறிப்பிடற் பொருட்டே "அண்டுதேவர்கும் பலும் அடுத்திடும் ரிஷிகளும் கண்டதிசயித்திடக்கனகவு ருலவிடும்" என்றார் பின்வரும் இதன் பெருமைகள் அளவிலா வாதலின் பெருமையையினுஞ் சொல்வேன் எனவுங் கூறினார். 22

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

குளிகையைக் கரத்தி லேந்திக்
குமுறுமா கடலிற் போட்டால்
வெளியின்மேற் செல்வ தன்றி
விரைந்துளே செல்லா தின்னம்

நளியுறு நீர கன்று
நண்புறு வழிபோ லாகும்
சுழியுறுங் குமிழி போல
துலங்கிடு மணியி னாலே

இதில் மேற்படி மணியின் வேறு பெருஞ் செயல்களைக் கூறுகின்றனர்.

(இ - ள்.) இன்னும் மேற்கண்ட முறைகளின்படி சித்தப்படுத்தப் பட்ட இந்தக் கமனமணியைக் கையினாலேயெடுத்து முழங்கும் படியான கடலினிடமாகப் போட்டுவிட்டால் இது ஜலத்திற்கு மேலே கிளம்பி வெளியிற் செல்வதல்லாமல் வேகங்கொண்டு கல் முதலிய வைகளைப்போல நீர்க்குள்ளே செல்லாது. மேலும் நீரில் சுழிக்கும் படியான குமிழியைப்போல் பிரகாசிக்கும். இம்மணியினால் குளிர்ச்சிபொருந்திய சமுத்திர ஜலமானது விலகி நீரிருந்த விடமெல்லாம் சிநேகம் பொருந்திய வழியைப்போலாகும். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இந்த மணியானது சமுத்திரத்தில் போட்டால் அமிழாது. மேலே கிளம்பிச் சஞ்சரிக்கும். இதை வைத்துக்கொண் டொருவன் சமுத்திரத்தி லிறங்கினால் கடல்நீரானது விலக வழியுண்டாகும். 23

வேறு செய்யுள்.

தரைமீதினில் மணியானதைத் தறுகாமலே விடவே
உரைபூமியி லுறையாமல் துழன்றேயுல விடுமே
விரைவாகவே நடவாதது விள்வேன்மின் மினிபோல்
தரைநேர்வழி மறைமன்னவன் றன்னாலுறு மன்னோ.

இதுவுமது

(இ - ள்.) மேற்கண்ட கமனமணியை அஞ்சாமற் பூமியில் விட்டுவிட அது அப்பூமியில் தங்காமல் மின்மினிப்பூச்சிபோல மேலே யெழுந்து சுழன்று சுழன்றுலாவிடும். விரைந்து பூமியிற்படிந்து நடக்கமாட்டாது. மேலுஞ் சொல்வேன் கேட்பாயாக. பூலோகத்திற் சரியான வழியையுடைய வேத முதல்வனாகிய கடவுளினது கிருபா கடாக்ஷத்தால் இந்த மணியானது இவ்விதக் குணங்களைப் பொருந்தும். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இந்த மணியைப் பூமியிற் போட்டால் கீழே படியாமல் மேலே எழுந்து சஞ்சரிக்கும். இது அதிகப் பிரகாசத்தை

யுடையாதலால் "மின்மினிபோல்," என்றும், கடவுளருளின்றி ஒன்றும் நடவாதாதலால் "மறைமன்னவன் றன்னாலுறும்," என்றுங் கூறினார்.24

நொண்டிச் சிந்து.

மணியதின் வேதையின்னும் - மாணாக்கா
வழுத்துவன் கேட்டிடு வாய்க்கு மென்றே
திணியுடன் கஞ்சாவில் - மகிழ்ந்துநீ
செலுத்துவாய் மணியினைத் திரியின்றினம்
கணியுட னவணுறையுங் - கஞ்சாவைக்
கசக்கியே தீயில்வைத் திழுத்திடவே
துணிவுட னுறும்புகையில் - தாம்பூரத்
துட்டதனைத் தாக்கிட வெற்றியாமே.

இதுமுதல் இரண்டுபாடல்களால் இம்மணியினது வாதவித்தை சொல்கின்றார்.

(இ - ள்.) மாணாக்கனே! இம்மணியினது வேதையை இன்னும் வாய்க்குமென் றுறுதிகொண்டு சொல்வேன் கேட்பாயாக. பலத்தோடு இந்தமணியை மனமகிழ்ச்சிகொண்டுநீ கஞ்சாவிற்குள் மூன்றுநாள் செலுத்திவிடக்கடவாய். அவ்வாறுசெலுத்தி அந்த மூன்றுநாளும் சென்றபின்பு கணக்கோடு அவ்விடத்திருந்த கஞ்சாவை யெடுத்துக் கசக்கிச் சுங்கானில்வைத்து அடியில் தாம்பிரத் துட்டைச் சேர்த்து நெருப்பிட்டு வாயால் புகையையிழுக்க அதனால் மிகுந்த வெற்றி யுண்டாகும்.

சூக்ஷுூம விளக்கம்: இந்தக் கமனமணியைக் கஞ்சாவிற்குள் மூன்றுநாள் வைத்திருந்து பின்பு மணியை யெடுத்துவிட்டுக் கஞ்சாவைக் கசக்கிச் சுங்கானிலிட்டு அடிப்பாகத்தில் தாம்பிரத்துட்டை வைத்து நெருப்பைக்கொளுத்திப் புகையிழுக்க அந்தத்துட்டானது களிம் பற்றுப்போகும். மற்றவற்றைப் பின்னே கூறுவார். இதனால் மிகுந்த நன்மையுண்டாகு மென்பதற்குப்பதிலாக "வெற்றியாமே" என்றார். இப்பாட்டில் கஞ்சாவை வைத்திழுத்து விட்ட புகையில் துட்டைக் காட்டுவதனால் நலமுண்டாகும் என்னும் பொருள்பட "துணிவுடனுறும் புகையில் தாம்பூரத் துட்டதனைக்காட்டிட வெற்றியாமே" என்று கூறியிருப்பினும் அடுத்த பாட்டில் "புகையுறு தீயினிற் புரியவே" என்றிருப்பதனால் அதற்கேற்ப இங்கு "கஞ்சாவுக்கடியில் தாம்பிரத்துட்டைச் சேர்த்து நெருப்பிட்டுப்

புகையிழுக்க அதனால் மிகுந்த நன்மையுண்டாகும்" என்று பொருளுரைக்கப்பட்டது. இதனாலுண்டாகும் வெற்றியாவது தாம்பிரத்துட்டானது களிம்பற்று மாற்றுயர்ந்த பொன்னாவதாம். இவ்விபரத்தை அடுத்த பாட்டிற்காண்க. 25

கலி விருத்தம்.

புகையுறு தீயினிற் புரிய வேயது
திகையொளி யடங்கியே தியங்கி மஞ்சளாம்
வகையுடன் வணிகரின் மதிப்பில்மாற்றது
துகையுட னெட்டெனச் சொல்லு வாரரோ.

இதுவுமது

(இ - ள்.) மேற்சொல்லியபடி புகை பொருந்தும் படியாகிய கஞ்சா நெருப்பில் தாம்பிரத் துட்டைவைத்துச் சுங்கான் வழியாகப் புகையிழுக்க அந்தத்துட்டானது மயங்கும்படியான மந்தவொளி நீங்கி இளகிமஞ்சள் வருணத்தையடையும் இதைப் பொன்வியாபாரி களிடத்திற் கொடுத்தால் அவர்கள் மதிப்பினால் இதற்குக் கணக்கோடு எட்டு மாற்றென்று சொல்லுவார்கள். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: முன்பாட்டிற் கூறியபடி செய்தால் தாம்பிரத் துட்டானது எட்டு மாற்றுத் தங்கமாகும். 26

வேறு செய்யுள்.

வாயதனி லேமணியை மாட்டிநீ பறந்து
போயவட மீதினிடை பொற்புட னிறங்கிக்
காயநிலை யாமணியைக் கக்குமள விங்கு
தோயமுட னேபசியுந் தோற்றிடாது காணே.

இதில் இம்மணி பசிநீக்கும் விதத்தை கூறுகின்றார்.

(இ - ள்.) மாணாக்கனே! நீ இந்தமணியை வாயிலடக்கிக்கொண்டு குறித்த விடத்திற்கு ஆகாயமார்க்கமாகப் பறந்து சென்று அவ்விடத்தில் அழகோடு இறங்கிக் காயத்தைப் பூமியில் தங்காமல் தூக்கிக்கொண்டு போவதாகிய அம்மணியை உமிழ்ந்து விடும் வரையிலும் பொருத்த முடனே உனக்குப் பசியென்பது தோற்றாது. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இந்த மணியை வாயிலடக்கிக் கொண்டு சென்றால் கக்ஷமளவும் அடக்கிக்கொண்டிருப்பவனுக்குப்பசி தோன்றாது. 27

வேறு செய்யுள்

திங்களோர் தினத்தினிற் றிகழுறு மணியை
முங்க நாட்டுவாய் முயல்முன் னாவின்பால்
பங்கிடா வருடமிற் பன்னிரு வகைதான்
திங்களின் முனமுதஞ் செய்கை கண்டிடு.

இதில் வேறு வேதை சொல்கின்றார்.

(இ - ள்.) மேற்கண்ட மணியை மாதத்திற்கு ஒருநாள் முன் இதைப் பக்குவப்படுத்திய பசுவின் பாலில் போட்டு இவ்விதமாக அப்பாலில் வருடத்திற்குப் பன்னிரண்டு முறையாக ஒழுங்கோடு செய்து கொள்வாய். மாணாக்கனே! இவ்வாறு மாதம் ஒருமுறையாக வருடத்திற்குப் பன்னிருமுறை போட்டெடுந்த அந்தப்பாலினது செய்கையை இனிச்சொல்லுவேன் கேட்பாயாக. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இந்த மணியைத் தேவையான அளவு பாலில் மாதத்துக்கு ஒருநாள் வீதம் ஒரு வருடத்திற்குப் பன்னிரண்டுநாள் போட்டுப் பின் மணியை எடுத்துவிட்டுப் பாலை மாத்திரம் பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும். இந்தப்பாலை, இன்னது செய்ய வேண்டுமென்பதைப்பற்றி அடுத்தபாட்டிற்கூறுவார். 28

கும்மி

மிஞ்சிய வமுதை யுஞ்சுக மாகவே
விழுங்கு வாய்நீயு மொழுங்குடன்
பஞ்சையு டன்பசி யஞ்சுநாள் வரையும்
பசித்தி டாமிகு வெற்றியுடன்
செஞ்சுட ராய்முக மிஞ்சி யிலங்கிடுஞ்
சித்தியு டன்முத்தி யுற்றிடுமே
துஞ்சிடா தேபொழு தைந்திலுஞ் சோதி
தூயவ னைத்தொழு தஞ்சுவையே.

இதில் மேற்கண்ட பாலினால் நடக்கும் விசேஷத்தைக் கூறுகின்றார்.

(இ - ள்.) மாணாக்கனே! நீ முன் கூறியபடி பக்குவப்படுத்தி யெடுத்திருப்பதாகிய பலமிகுந்த பாலைப்போதுமான அளவு ஒருநாள்

ஒழுங்கோடு சுகமாகப் பானஞ்செய்யக் கடவாய். அவ்வாறு செய்தால் உடனே பஞ்சையாகிய பசி ஐந்து நாளளவும் உண்டாகமாட்டாது. முகமானது வெற்றியோடு சிவந்த சூரியனைப்போன்று மிகுந்து பிரகாசிக்கும். இதனால் இன்னும் அஷ்டமாசித்தியுங் கைகூடும். முடிவில் முத்திப்பேறும் வந்தடையும். இந்தப்பாலைப் பருகியதி லிருந்து ஐந்துநாள்வரை தூங்காமலிருப்பாய், அந்த ஐந்துநாளும் பரிசுத்தனாகிய சோதிரூபமாயமைந்த கடவுளைத்தொழுது அச்சத்துடன் சொன்ன காரியங்களை நிறைவேற்றிக்கொண்டிருக்கக் கடவாய். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: மேற்கண்டபடி சித்தப்படுத்திய பாலைப்பருகினால் ஐந்துநாள்வரை பசியுண்டாகா தென்றும், காயசித்தி யாகுமென்றும், அஷ்டமாசித்தியும் சித்திக்குமென்றும், முத்தி கைகூடுமென்றும் விளங்குகிறது. "துஞ்சிடாதே பொழுதைந்தினுஞ் சோதிதூயவனைத் தொழுதஞ்சுவையே" என்றதனால் சோதியைத் தொழுதலும், தூங்காமலிருத்தலும் தவறாமல் செய்யத்தக்கன வென்பதும் அது தவறும் விஷயத்தில் அஞ்சவேண்டுமென்பதும் புலப்படுகின்றன. இவ்வாறு செய்துவருதலே யோகியர்க்கு இன்றியமையாச் சாதனமாகும். இங்குச் சொல்லியிருக்கும் முறைப்படியே இதனைப் பலதடவைகள் அனுஷ்டித்துவந்தால் மோக்ஷ சாதனங் கைகூடுமென்பது திண்ணமாம். 29

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

மணியதனை யோர்தடவை வாயிற் கொள்ளின்
மாணாக்கா யாவருக்கும் வருத்த முற்ற
பிணியோடு வாதவகை அஷ்ட குன்மம்
பெருநோவு சூலையொடு குட்டந் தீரும்
தணிவாகச் சாதகமாய் வியாதி யெல்லாஞ்
சந்திரனைக் கண்டவிரு ளென்ன வேகும்
அணியாக மேனிதள தளப்ப தாகி
யம்புயம்போல் முகமலர்ந்திங் கருளுண்டாமே.

இதில் மேற்படி மணியினாலேற்படும் பிணிநீக்கத்தைச் சொல்கின்றார்.

(இ - ள்.) மாணாக்கனே! இந்தச் சிறப்புற்ற கமனமணியை ஒருமுறை வாயிலடக்கிக் கொள்வதால் எல்லோருக்கும் துன்பத்தைச் செய்வதாகிய

பெரும்பிணிகளோடு வாதவகைகள், அஷ்டகுன்மங்கள், பெருநோய், சூலைவகைகள், குஷ்டவகைகள் முதலிய வியாதிகளும் நீங்கும். மேலும் எல்லாவியாதிகளும் இதனைக் கண்டமாத்திரத்தில் பற்றியோர்க்குத் துன்பந்தணிந்து சுகமுண்டாகும்படி சந்திரனைக்கண்ட இருளைப் போலேகிவிடும். அவ்வாறேகிய மாத்திரத்தில் இதை வாயிலடக்கிய ஒவ்வொருவருக்கும் தேகத்தில் அழகாகிய பளபளப்புண்டாகி, முகம் தாமரை புஷ்பத்தைப்போல் மலர்ச்சியுற்று இலக்குமி கடாக்ஷமுமுண்டாகும். எ - று.

சூக்ஷுமை விளக்கம்: இம்மணியை வாயிலடக்கிக் கொள்வதால் பலவியாதியும் நீங்கி உலகத்தவர்க்குத் தேகம் பொன்னிறமாம். 30

இம்மட்டில் கமனகுளிகையின் விருத்தாந்தத்தை நிறுத்தி மேல் ஐந்துபாடல்களால் ஞானத்தைப்பற்றிக் கூறி அதன்மேல் இரசமணி யொன்று சொல்கின்றார்.

ஞானம்.

31, 32, 33, 34, 35, ஆம் பாடல்கள்: இப்பாடல்களில் மேற்குறித்த ஞானத்தைப்பற்றிய விபரங்கள் துலக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை நாம் முந்திய காண்டங்களிற் குறித்தபடி தெரிந்தோரிடங் கேட்டுத் தெளிந்துகொள்க.

இரசமணி

கலி விருத்தம்

தால மாந்தரே சாற்றிடக் கேளுமோ
கூல மாகக் குதித்தே யுருள்பவன்
மாலை யான மணியெனக் கண்டிடும்
வேலைப் பாரில் விபரம்பின் விள்ளுவேன்.

இதில் இரசமணி விபரம் சொல்லுவேனெனக் கூறுகிறார்.

(இ - ள்.) பூலோகத்திற் பொருந்திய மனிதர்களே! மேலுஞ் சொல்வேன் கேட்பீர்களாக. நான் சொல்லப்போவது அதிஷ்ட முண்டாகும்படியாகக் குதித்துருள்பவன் என்று சொல்லப்பட்ட ஓர் சரக்கின் ஒழுங்கினால் செய்யும் மணியென்று கண்டுணர்ந்து கொள்வீர்.

அதைச் செய்யும் விபரத்தைக் கடல்சூழ்ந்த இப்பூமண்டலத்தில் கீழேவரும் பாடல்களால் விளக்குவேன். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: அதிஷ்டமுண்டாகும்படியாகக் குதித்துருள்கின்ற சரக்காவது (இரசம்.) இது முந்தினகாண்டங்களுட் பல விடங்களினும் வந்திருப்பதாலும் விளங்கும். இதன் ஒழுங்கினால் செய்யப்பட்ட மணியாவது (இரசமணி.) இந்த இரசமணிசெய்யும் விபரத்தைக் கூறுவதாகவே இப்பாட்டில் சொன்னார். இரசத்தின் செய்கையால் நல்லதிஷ்டங் காரணமாகப்பெறப்படும் பல நன்மைகளும் கைகூடுமென்பதை விளக்குதற்பொருட்டே "கூலமாகக் குதித்தேயுருள் பவன்," என்றார். "இரசமணிசெய்யும் விபரத்தைச் சொல்லுவேன் கேளுங்கள்" என்பது இச்செய்யுளின் பிண்டப்பொருள். 36

கொச்சகக் கலிப்பா

சொல்லிடுவேன் மாந்தர்களே
சூட்சியுறு மோர்மருந்து
அல்லல்தனை யகற்றிடுவோ
னிறமென வேயணங்கிப்
புல்லிடுமா மடையனதிற்
புகல்நிறை திரியாமே
வெல்லுகின்ற வதன்விபரம்
வராகனிறை யெடுத்திடுவீர்.

இதில் ஓர் சரக்குச் சொல்கின்றார்.

(இ - ள்.) மானிட வர்க்கத்தாரே! இம்முறைக்கான ஓர் மருந்தைச் சொல்லுவேன் கேட்பீர்களாக. துன்பத்தை நீக்கும்படியான கடவுளினது நிறத்தினைப் போன்றழகுசெய்து விளங்கிப் பொருந்து கின்ற மடையனென்ற வோர்சரக்கில் எடுக்கவேண்டியநிறை மூன்றாகும். வெற்றிபொருந்திய அந்த மூன்றின் விபரமாவது விராகனெடைக் கணக்காகும். இந்தக் கணக்கின்படியே மேற்கண்ட சரக்கையெடுத்துக் கொள்வீர்களாக. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: "அல்லல்தனை யகற்றிடுவோன் நிறமெனவே யணங்கிப் புல்லிடு மடையன்" என்ற சரக்காவது (வெடியுப்பு.) இதில் மூன்று விராகனெடை யெடுத்துக் கொள்ளவேண்டும். 37

வேறு திருப்புகழ்ச் சந்தச்செய்யுள்.

கல்வ மதிலிவ ணேந வின்றிடு
கால்கர மின்றியே யேகு வோன்றனை
மலியுற வேயதை மாட்டுவாய் நிறை - மவுல்வேனே
நல்லிய லான்றிரு மேவு முன்னவன்
நவிலுவேன் நாசியின் நாபப ணேயெடு
வெல்லுற முன்வகை நாலு நான்குவின் - முன்றம்பி
எல்லவ னைந்தென வாறு தோன்றுவ
னெடுஅதி லேழொடு மூன்று இன்புடன்
சொல்லிடு நாமமின் சூக்ஷியாமிது - தெளிவாயே
இவ்விய லாமிலைச் சாற்றி லாட்டிடு
இயற்றுவன் சாம மிரண்டு ஒன்றென
நவ்விய லாமிதன் வேதை யும்பினில் - நவில்வேனே.

இதில் மற்றொரு சரக்கும், சாறும், அரைப்புஞ் சொல்கின்றார்.

இதற்கு நம்மாசிரியரிடம் கேட்டபொருள் தற்போது மறந்துபோய் விட்டபடியால் பொழிப்பெழுதக்கூடவில்லை, ஆயினும், இதன் விபரம் சிற்சில ஞாபகத்திலிருக்கிறபடியால் அவற்றை மட்டும் சூக்ஷுமவிளக்கத்திற் காட்டுகிறோம். இப்பாடலுக்குத் தெரிந்தமகான்கள் சரியான பொழிப்புரையெழுதி யனுப்பினால் அடுத்த பதிப்பில் அதை அவர்கள் பெயருடன் வெளியிடுவோம்.

சூக்ஷும விளக்கம்: இப்பாட்டிற் கூறும் சரக்கு ரசமென்றும், அரைப்புக்காகச் சொல்லிய சாறு புகையிலைச் சாறென்றும் எமதாசிரியருரைத்த ஞாபகமிருக்கிறது. அதனால் ரசமென்றும் புகையிலைச் சாறென்றும் உறுதிகொள்ளலாம். இரசத்தின் நிறை இவ்வளவென்பது இப்பாட்டிற் கூறியிருந்தும் நாம் கேட்டதை மறந்து விட்டகாரணத்தால் கண்டுபிடிக்கக்கூடவில்லை. அவசியப்பட்டோர் இதன் விபரத்தை அனுபவசாலிகளிடம் கேட்டுத் தெரிந்துகொள்க. இப்பாட்டு விளங்கவில்லையாதலின் இம்முறைக்கு வெடியுப்பையும் இரசத்தையும் ஒன்றாகக் கல்வத்திலிட்டுப் புகையிலைச்சாறு விட்டு பாட்டின் கடைசியில் சொன்னபடி யரைக்கிறதா அல்லது வேறு விதமாக அரைக்கிறதா வென்ற சந்தேகமுண்டாகிறது. ஆதலின் எல்லா விபரங்களையும் தெரிந்தோரிடம் கேட்டுக் கொள்வதே நலம். ஒருவாறு எமக்கு விளங்கினும் அடுத்த பதிப்பில் வெளியிடுகிறோம்.38

இதுவுமது

மின்னி மின்னிப் பாரின் முளைத்து
மெல்லரும்புநீ ணிறமுஞ் சுமந்து
வன்னி யெனக்காங் கையுமிகுந்து - வடிவாகி
தன்னை யறியா தவள்பெயர் புனைந்து
தாக்குறு பனிய தினில்வ ளர்ந்து
மன்னி மருவா டைகளுமணைந்து - வயமாகி
முன்னின் முதற்றிங் களுமு யன்று
முறிகடை யான துந்த வின்று
கன்னியவள் பேர் முனங்க லந்து - கருவாகக்
கொன்னியி ளங்கொங் கையைமுன் னறுத்துக்
கூட்டிடு முன்நக ரமை மறுத்துத்
தன்னிலத் தின்பேரதுவுந் தெரிந்து - தெளிவாமே.

இதில் முன்புகையிலைச் சாற்றிலரைத்த மருந்திற்கு விட்டரைக்கவேண்டிய மற்றொரு சாறுள்ள பச்சிலை சொல்கின்றார்.

இதிற் சொல்லும் பச்சிலை இன்னதென விளங்குகிறதெனினும், இரண்டொரு இடத்தில் கூறியிருக்கும் சொற்களுக்குப் பொருள் விளங்கவில்லை யாதலின் பொழிப்பெழுதுதலை நீக்கிவிட்டுப் பச்சிலையின் பெயர் முதலிய விபரங்களை மட்டும் சூக்ஷும விளக்கத்தில் துலக்குகின்றோம்.

சூக்ஷும விளக்கம்: இப்பாட்டின் இரண்டாமடியில் "தன்னையறியாதவள் பெயர் புனைந்து," என்றமையானும், மூன்றாமடியின் ஈற்றிலும், நான்காமடியிலும் "கன்னியவள் பேர் முனங்கலந்து கருவாக கொன்னியிளங் கொங்கையை முன்னறுத்துக் கூட்டிடு முன்நகரமை" என்றமையானும் இங்குக்கூறிய பச்சிலை (சிறியா நங்கை) என்பது விளங்குகிறது. மற்றவிடங்களிற் கூறும் குறிப்புக்களாலும் இது தெளியப்படும். மேற்கண்ட இரண்டிடங்களினும் பெயர் கண்டெடுத்த விபரத்தை அடியிற்காண்க.

தன்னை யறியாதவள் ருதுவாகாதவள்; இவளைச் சிறிய நங்கையென்று சொல்லுதல் மரபாதலின் அங்குகூறிய பச்சிலை (சிறியா நங்கை) யாம். இதைமேற்கூறியபடி சிறிய நங்கை யென்றுஞ் சொல்லுதல் வழக்கு. கன்னியவள் பெயர் (சிறியாள்.) கொங்கையை

முன்னறுத்தலாவது கொங்கை யென்னும் பதத்தில் முதலெழுத்தை நீக்கிவிடல். அப்படி நீக்க நின்றது (ங்கை) "கூட்டிடு முன் நகரமை," என்றபடி இப்பதத்திற்கு முன் ந என்ற எழுத்தைச் சேர்க்க (நங்கை) என்றாகியது. இங்குள்ள நங்கை என்றதற்கு முன் (சிறியாள்) என்பதைச் சேர்க்க (சிறியாள் நங்கை) எனவாகும். இக்குறிப்பினாலும் அங்குச் சொல்லியது சிறியா நங்கையென்றும், அதற்கு இங்குரைத்தபடி சிறியாள் நங்கையென்றும் சொல்லுவதியற்கை. ஆகவே, இதனைச் சிறியநங்கை, சிறியா நங்கை, சிறியாள் நங்கையென மூன்றுவிதமாக வழங்கலாமென்பது விளங்குகின்றது. இனி இதன் சாற்றினால் செய்யவேண்டிய கருமத்தை அடுத்தபாட்டிற் கூறுவார். *39*

கொச்சகக் கலிப்பா

முனமே நவிலு மொய்ம்பனைப்போ லிலைச்சாற்றில்
தினமே யரைப்பாய் செப்பிடுவேன் வேதையினி
அனவ ரதமுமந்த மாதியென வாகி நின்றோன்
தனைப்போற்றித் திறலான்முன் றான்சொல்லு மருந்ததிலே.

இதில் சிறியாநங்கைச் சாற்றின் அரைப்பும் மேற் செய்யவேண்டியவிதமுங் கூறுகின்றார்.

(இ - ள்.) முற்பாட்டிற் கூறிய பலம் பொருந்தியவனைப்போன்ற சிறிய நங்கையிலைச் சாற்றில் மேற்சொல்லிய மருந்தை ஒரு தினமுழுதும் அரைக்கக்கடவாய். இனி, மேல் நடக்கும் வேதையைச் சொல்வேன் கேட்பாய். தினந்தோறும் முதலும் முடிவுமாகி நின்றோனாகிய இறைவனைப் போற்றி அவனருள் வலியினாலே இந்நூலின் முதற்காண்டத்தின் தொடக்கத்திற் சொல்லியிருக்கு மருந்திலே, எ - று.

சூக்ஷுமம விளக்கம்: சிறியா நங்கையிலைச் சாற்றில் அதிக நன்மையுண்டாதலை விளக்குதற்பொருட்டு இப்பாட்டின் முதலடியில் "மொய்ம்பனைப்போல் இலை" என்றார். முதற் காண்டத்தின் தொடக்கத்திற் சொல்லிய மருந்தானது (அந்த செந்தூரம்) இது மூன்றாமடியில் "அந்தம்" என்று சொன்ன குறிப்பினாலும், ஈற்றடியில் "முன்றான் சொல்லு மருந்ததிலே" என்ற குறிப்பாலும் விளங்கும். அந்த செந்தூர முறையானது கடவுள் அருள் பெற்றே சொல்லப்பட்டதாதலின் "அந்த மாதியெனவாகி நின்றோன்றனைப் போற்றித் திறலான் முன்றான் சொல்லு மருந்ததிலே" என்றார். இதில்

சொல்லியபடி முன் மருந்தைச் சிறியா நங்கையிலைச்சாறு விட்டு ஒரு நாளரைத்துக்கொண்டு அதன் மேல் இதில் சேர்ப்பதற்காக அந்தசெந்தூரத்தை யெடுக்கவேண்டும். அதன் நிறை, சேர்க்கவேண்டிய விபரம் முதலியவைகளைப் பற்றி அடுத்த பாட்டில் துலக்குவார். 40

வேறு திருப்புகழ்ச் சந்தம்

நிறைய தரிசி நீநா னேயெடு
நெறியுறு குருவிலைச் சாறத னாலெடு - வியனாக
குறையற வரையொரு தினமா மேய்து
குழைந்துமே வெண்ணெயைப் போலாகுமெடு - முறையாக
கறையற மணியென வமைத்தே நீயதைக்
கதிரினிற் கொழுக்கியே கல்வமீ திட்டிடு - கனமாக
விறைப்புட னிறுகியே வீறாகிவனம்
வெள்ளியின் றிறமெனப் போலா கும்பெல - நிவாயே.

இதில் இரசமணியின் முடிவு கூறுகின்றார்.

(இ-ள்.) முந்தின பாட்டிற் குறித்த அந்த செந்தூரத்தின் அளவாவது அரிசியெடையில் நீ நான் என்றதொகையாகும். இந்த அளவுப்படி அதனை யெடுத்துக்கொள்ளக் கடவாய். அப்படி யெடுத்தவுடன் அதனோடு ஆச்சரியமாக குருவிலையென்ற ஓர் பச்சிலையினது நேர்மை பொருந்திய சாற்றைவிட்டுக் குழப்பி அந்தக்குழம்பை முன் மருந்துடன் விட்டுக் குறைவு நீங்கும்படியாக ஒருநாள்வரை அரைப்பாய். அவ்வாறு அரைத்தால் அது இளகி வெண்ணெயைப் போலாகும். அந்தக் கிரமமாக எடுத்துக் கொள்வாய். எடுத்தவுடன் குற்றமானது நீங்கும்படி அம்மருந்தை ஓர் மணிபோல உருட்டி அதைக் கல்வத்தில் வைத்தபடியே சூரியனுக்கு முன்புகாட்ட அது மிகவுங்கனமாக விறைப் போடிறுக்கமுற்று மிக வெற்றியுடையதாகி அதன் நிறமானது வெள்ளியின் வர்ணத்தைப்போல தோற்றும். மாணாக்கனே! நீ இனி மேல் இதனுடைய பலத்தை யெடுத்துரைப்பேன் கேட்பாயாக. எ -று.

சூக்ஷும விளக்கம்: நீ நான் என்ற தொகையாவது நீ யென்பது ஒன்று நான் என்பது ஒன்று ஆக (இரண்டு) இவ்வாறு கணக்கெடுத்தலை முந்தின காண்டங்களில் பலவிடத்தும் வருதலாற் கண்டுணர்க. குருவிலையாவது (திருநூற்றுப்பச்சை.) இதுவும் முந்தின காண்டங் களின் பலவிடங்களில் வருதலால் விளங்கும். ஆகவே, அந்த செந்தூரத்தில் (இரண்டு அரிசியெடை) யெடுத்து (திருநூற்றுப்

பச்சையிலைச் சாற்றில்) குழப்பி முன் மருந்துடன் விட்டரைக்க வேண்டுமென்பது புலப்பட்டது. இவ்வாறே செய்துகொள்க. இந்த முறை இதில் ஒரு விதமாகச் சொல்லப்பட்டிருந்த போதிலும் புத்திமான்கள் தத்தம் அனுபவத்திற் கேற்றவாறு கொள்வார்களாக. 41

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மணியதனை வாயடக்கித் தண்ணிரி லாழ்ந்தால்
வயிறுமட்டுந் தண்ணீரு மேலிடாது
கணிவுடனே கனபூதப் பிசாச மெல்லாங்
கண்டவுடன் தெண்டனிட்டுக் கானி லோடும்
அணியமகா வசிகரமும் வெற்றி யுண்டா
மாண்மையொடு திண்மைமத மருளுண்டாகும்
பிணிவகைகள் சாவுமுத லுடலிற் றீண்டா
பேசரிதே யிதனுடைய பெருமை தன்னை.

இதில் மேற்படி மணியின் செய்கை கூறுகின்றார்.

(இ-ள்.) மேற்கண்ட இரசமணியை வாயிலடக்கிக் கொண்டு ஜலத்தில் மூழ்கினால் தண்ணீரானது வயிறு மட்டும் வருவதல்லாமல் அதற்குமேல் வரமாட்டாது. இதைத்தவிர தீர்மானத்துடனே பெரிய பூத பைசாசங்களெல்லாம் இந்தமணி கையிலிருப்பதைக் கண்ட மாத்திரத்தில் வணக்கஞ்செய்து காட்டினிடமாக ஓடி ஒளிப்பனவாம். மிகவும் அழகாகிய லோகவசியத்தோடு எவ்விடத்திலும் ஜெயமுண்டாகும். வீரத்தோடு பலமும், தேகபுஷ்டியும், இலட்சுமி கடாக்ஷமு முண்டாகும். நோய்கள் அதனால் வருந்துன்பங்கள் முதலியவை தேகத்திலணுகா. இன்னும் இந்தமணியின் பெருமையை அளவிட்டுச் சொல்லல் அருமையாகும்.

சூக்ஷ்ம விளக்கம்: இந்த மணியினால் ஜலஸ்தம்ப முதலியன செய்யலாம்: பேய்பிசாசணுகா; லோகவசீகரமும், வெற்றியும், தேக பலமுமுண்டாகும்; எவ்வியாதியுஞ் சேராது. 42

வேறு சந்தச் செய்யுள்.

மணியானதை நைத்தேநவ லோகந்தனில் வளமா
இனிதாகவே யீவாயிங் கிசைப்பேனுற் றொன்று
கனியாகிய வகையாமவை களிம்பற்றுடன் சுழன்று
வணிகர்கடை யுசையிலவை வயதானதும் பத்தே.

இதில் மேற்படி மணியினது வாதவித்தை கூறுகின்றார்.

(இ - ள்.) இன்னும் மேற்கண்ட மணியை நசுக்கி அதிற் சிறிது தூளெடுத்து நவலோகங்களிலும் வளப்பமாகவும், இனிமையாகவும் நூற்றிற்கொன்று கொடுக்கக் கடவாய். அப்படிச்செய்த மாத்திரத்தில் உண்டாகும் விசேஷத்தைச் சொல்வேன்கேள். மிகவும் அற்புத தன்மையிலிருந்த அந்த லோகங்களெல்லாம் தம்மிடத்துள்ள களிம்பு நீங்கப்பெற்று உருகிக்கொதித்துச் சுழ்ன்று வணிகர் கடைகளில் உரைத்துப்பார்க்க பத்தரைமாற்றுள்ளதென்று சொல்லும்படியான தங்கமாகும். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: மேற்கண்ட மணியை உடைத்துச் சிறிதெடுத்து நவலோகங்களிலும் நூற்றிற் கொன்று கொடுக்க அவை பத்துமாற்றுள்ள தங்கமாம்.

43

இதுவுமது.

வாதமது ரசமேயல்லால் மறைத்தாலது வருமோ
வேதையிதின் வனமானது விள்வேன்மஞ்ச ளணியாம்
பாதையிது தன்னைவிட்டுப் பார்த்தால்யுக மதிலும்
ஆதிதிரு வாணைநிச மாகாதீ துண்மை.

இதில் வாதத்தின் மர்மமும் பெருமையுங் கூறுகின்றார்.

(இ - ள்.) வாத வித்தை யெல்லாம் இரசத்தினது செய்கையாகும். அதை வாதத்திற்காகச் சேர்க்காமல் மறைத்து வைப்போமானால் அவ்வாத வித்தையானது கைகூடுமோ? இந்த இரசமணியின் வேதையினாலாகிய தங்கமெல்லாம் நல்லமஞ்சள் நிறத்தினது அழகைப் பெற்றதாயிருக்கும். மேலுஞ்சொல்வேன் கேட்பாயாக இந்த வழியைவிட்டு வேறு மார்க்கத்தைக்கொண்டு இரசவாதஞ் செய்ய நினைத்தால் ஒரு யுகமளவு முயன்றாலும் ஆதியாகிய கடவுள் சாக்ஷியாக அது உண்மையாக மாட்டாது. இது சத்தியம். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: இப்பாட்டினது கருத்தை ஆராயுமிடத்து இந்த இரசவாதத் தொழிலுக்கெல்லாம் இரசமே முக்கியமென்றும், அஃதில்லாவிடில் இத்தொழில் ஒரு சிறிதும் நிறைவேறா தென்றும் விளங்குகிறது. வாதத்திற்கெல்லாம் இரசம் பிரதானமாயிருப்பதை முன்னிட்டே அதற்கு (இரசவாத) மெனப்பெயர் அமைந்திருக்கின்றது. இப்பாட்டில் இரசம் பிரதானமென்று சொல்லியதற்கு இதுவும் ஓர்

பெருத்தசான்றாகும். இரசமே வாதமென்பதைச் காட்டுதற்கு இப்பாட்டின் முதலடியில் "வாதமது ரசமே," என்று கூறினார். முந்தினபாட்டில் இந்த இரசமணியால் எல்லாலோகங்களும் தங்கமாமெனக் கூறியிருப்பினும் அவற்றைச் சிறப்பித்தற் பொருட்டும், மாற்றுயர்ந்தவை யென்பதை குறிப்பிடும் பொருட்டும் "வனமானது மஞ்சளணியாம்," என்று இரண்டாமடியிற் கூறினார், முன்றாமடியில் "பாதை யிதுதன்னை விட்டுப்பார்த்தா லதுவருமோ," என்றதனால், வாதஞ்செய்வதற்கு இந்த இரசமணியே சிறந்ததென்பதும் புலப்படுகின்றது. 44

தமனிய நீர்.

திருப்புகழ்ச் சந்தச் செய்யுள்.

சிந்து வளந்துவு னிந்துட விட்டகல்
குந்தி யெழும்புவன் தந்திர மாகவே
விந்தை விதஞ்செய்யுஞ் சுந்தரவீரியன் - வனம்வெள்ளை
மந்தர மும்முயர் வுந்தியின் பேர்பிளை
சுந்தர னோடெடு கந்தரங் கால்கர
பந்தி யெடும்பரி சுந்தரவீரிய - னெனவிள்வர்
இந்தவன் சேனையிலைந்திரு ஒன்றினில்
முந்திய கல்தின விந்தையின் முன்னடு
கந்தெரி யின்பெயர் தந்திரமாமிது - அறிவாயே
அந்தர மும்புவி கண்டவ ரோடிடச்
சிந்திட வெண்டிசை யொன்றுறைந்தாலென
கொந்துடன் கூவிய வந்திய னோடெடு - அழகாக.

இதில் இம்முறைக்காம் ஓர் சரக்கைச் சொல்கின்றார்.

இந்தப்பாட்டின் பொருள் நமக்குப் பூரணமாக ஞாபகத்திலில்லை, அதனால்இதிற்சொல்லும் சரக்கும் இன்னதென விளங்கவில்லை, ஆதலின், இதற்கு விளக்கமெழுதாது விடுத்தனம். இப்பாடலுக்கும், இக்காண்டத்தில் சந்தேகத்தால் பொருளெழுதாமல் விடப்பட்டிருக்கும் மற்ற பாடல்களுக்கும் அருத்தங்காண விரும்புவோர் திருவாரூருக்கடுத்த கடுவங்குடியிலிருக்கும் ஸ்ரீலஸ்ரீ, தே. வே. வாலாம்பிகை தாச சுவாமிகளுக்குத் தெரியுமாதலின் அவர்களையடுத்துக் கேட்டுணர்ந்து கொள்க. 45

இதுவுமது

விராகனெடை தேகநிறை விள்வே னதன்பெருமை
வினாவுமுன மேநவிலு வீறான கெந்திதனில்
வெந்தே யுழன்றுருகிச் சிந்தாகிய தயிலந் - தனிற்றானே
அராவுநிறை யானதறி யரியான தின்மூன்று
அடைவானதிலேயம்மி மிசையாட்டரைக்கடிகை
அணுவன்றி வழித்ததைநீ யரம்பாண்ட மினிலூட்டி -
பனிமீதில்
தராவுகம தாகவேவை சார்பாக வோர்தினமே
தங்கிய செய நீரெனவே பொங்கியெழி லாகுமது
சங்கையுறு வேதையினி யிங்குநவில் வேனறிவாய் - தயவாக
தராவலது தாம்பூரந் தாக்குமரத் தூளதனைத்
தன்னிலது பணமடங்கத் தாக்குமகா யோக்யமு
தத்தியுற வேபணிமுன் வைத்திடத் தமனியத்தின் நீராமே.

இதில் தமனிய நீரின் செய்முறை சொல்லுகின்றார்.

(இ - ள்.) சிஷ்யனே! முற்பாட்டிற்கூறிய சரக்கில் ஒருவிராகனெடை எடுத்துக்கொள்வாய். அதன் பெருமையைப் பின்னே கூறுவேன். இதை எடுத்துக்கொண்டவுடனே முன் இரண்டாங்காண்டத்திற் சொல்லப் பட்டிருக்கிற கெந்தகத் தைலத்தில் மூன்று அரிசியெடை யெடுத்து முன் மருந்தோடு சேர்த்துக் குழியம்மியிற் போட்டு அரை நாழிகை யரைத்து அதில் அணுவளவாயினும்கல்வத்திலில்லாமல் வழித்து ஓர் அருமையான பாண்டத்திற் சேர்த்துப் பனியில் ஒரு நாள்வரை வைக்க அது அழகு பொருந்திய ஜெயநீராகும். இனி இதன் வேதையைச் சொல்லுவேன் அறிந்து கொள்வாயாக. தராவையாவது தாம்பிரத்தை யாவது அராவின தூளில் இந்த ஜெயநீரைச் சேர்த்துப் பனியில் வைக்கத் தமனிய நீராகும். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: முன் பாட்டிற்கூறிய சரக்கிற்கு விராகனெடை ஏகம் என்றமையால் ஒரு விராகனிடையெனக் கொள்ளப்பட்டது கெந்தகத்தைலத்தின் நிறை "அரியானதின் மூன்று" என்றதற்கு அரி, அரிசியாதலால் மூன்றரிசி யெடை யெனத்தீர்மானித்தலாயிற்று. மேற்கண்ட அரபொடிகளில் ஜெயநீர் இவ்வளவு சேர்க்கிறதென்னும் விபரம் தெரியவில்லை. "பணமடங்கத்தாக்கு," என்றதனால் பண வெடையாயிருக்கு மோவென யூகிக்க இடமிருக்கிறது என்றாலும், அனுபவசாலிகளிடம் கேட்டுணர்வது நலம்.

எண்சீர்க் கழிநெடிலடி யாசிய விருத்தம்.

கேளப்பா தமனியநீர்ப் பெருமை தன்னைக்
கிளத்திடவே நாவரிது கிருபை யாக
நீளப்பா நீரதனைப் பதனம் பண்ணு
நிகழ்த்துகிறேன் வேதையினி நினைவாய்க்கேண்மோ
தாளப்பா தாம்பூர மிரும்பு வெள்ளி
தாரமொடு பித்தளையிற் றடவித் தானே
காளப்பா கனல்காட்ட விறுகிப் போகும்
கனகம்போல் வனமாகுங் கண்டு கொள்ளே.

இதில் மேற்படி தமனிய நீரின் வேதை சொல்கின்றார்.

(இ - ள்.) அப்பனே! இந்தத்தமனியநீரின் பெருமை நாவினா லெடுத்துரைப்பதற் கருமையாகும். புகழ் நீண்டதாகிய இந்தத் தமனியநீரைக் கிருபையோடு எடுத்துப் பத்திரப்படுத்தக் கடவாய். இனி இதன் வேதைகளைச் சொல்வேன் நினைவோடு கேட்பாயாக. இதைத் தாம்பூரம், இரும்பு, வெள்ளி, தாரம், பித்தளை முதலிய லோகங்களில் தடவி நெருப்பிற் காட்ட அவையாவும் இறுகிப்போகும். அவ்வாறு இறுகுவதோடு பொன்னைப் போன்ற நிறத்தினை யுடையதாயும் ஆகும். இதனுடைய சூக்ஷுமத்தைக் கண்டுணர்ந்து கொள்வாய். எ - று.

சூக்ஷும விளக்கம்: இந்தத்தமனிய நீரை மேற்கண்டலோகங்களில் தடவி நெருப்பிற்காட்ட அவை பழுத்து மஞ்சணிறமாம். (அதாவதுதங்கமாம்.) 47

இதுவுமது

கண்டுகொள்ளு வணிகர்தங்கள் கடையிற் காட்டிற்
கதிக்கவுரை யுரைக்கிலுமோ காண மாட்டார்
விண்டிடுவே னீக்கியதைத் தகட தாக்கி
வியனுருக்க வயதநுவு மஞ்ச தாகும்
மண்டலத்தில் மதியிலித் தகையே யாக்கில்
மஞ்சள்வனம் வயதநுவு மாறு மாகும்
பண்டுபரன் சவுமியத்தின் சூட்சி தன்னைப்
பகரரிது பகரரிது பாருள் ளோரே.

இதிலும் மேற்படிவேதை சொல்லுகின்றார்.

(இ - ள்.) மாணாக்கனே! மேற்கண்ட தமனிய நீரின் பெருமையைப் பார்த்தறிந்து கொள்வாய். முன் சொன்னபடி இந்த நீரால் தங்க நிறமான லோகங்களைப் பொன்வியாபாரிகளிடம்கொடுக்க அவர்கள் உரையாணியில் உரைத்துப் பார்க்கினும் இந்த லோகங்களினுடைய பேதத்தைக்காணாது பொன்னென்றே சொல்வார்கள். மேலுஞ் சொல்வேன்கேள். அதன்மேல் முன் செய்த முறையை நீக்கிவிட்டு இந்த லோகங்களைத் தகடாக அடித்து உருக்கினால் அவைஐந்து மாற்றுள்ள பொன்னாம். மறுபடியும் இப்பூமியில் அவற்றை முன் போல் தகடு தட்டி ஒரு முறை உருக்க நல்லமஞ்சள் நிறமாம். ஆறு மாற்றுமாகும். ஆதியிலே கடவுளால் சொல்லப்பட்ட இந்த இலக்கசௌமியம் என்னும் நூலினது சூக்ஷமானது பூலோகத்தில் மானிடராய்ப்பிறந்தோர் அறிந்து சொல்லுதற்கரிதாகும். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: முந்தின பாட்டிற் சொல்லிய முறைப்படி செய்ய லோகங்கள் மஞ்சள் நிறத்தையடையுமேதவிர பொன்னாக மாட்டாது. ஆனால், வணிகர்கடைகளில் அரைத்துப் பார்த்தால் பொன்னாகவே தெரியும். அவற்றை ஒருமுறை தகடுதட்டி உருக்க ஐந்து மாற்றும், மறு முறை உருக்க ஆறு மாற்றுமாம். 48

இதுவுமது

உருக்கிடவே யுரைக்கலுற்ற தகடு தன்னை
யுட்புறமும் பிற்புறமு முறவே தோய்த்துப்
பெருக்கிடவே யுருக்கிடுவாய் முன்ன மியானே
பேசியவா றதுபோல பீடதாக
தருக்கிடவே புடமொன்றில் தடவிச் செய்யில்
தங்கமது புடந்தனிலே தணியா தன்றே
இருத்திபெற வின்னமொரு வேதை சொல்வே
னினமுடனே கண்டறிவா யிடமுள்ளோனே.

இதிலும் மேற்படி வேதை சொல்லுகின்றார்.

(இ - ள்.) முந்தினபாட்டிற் கூறிய ஆறுமாற்றான தங்கத்தை மீண்டும் உருக்கித் தகடாக்கிக் கொள்ளவேண்டும். இங்குச்சொன்ன தாகிய அந்தத்தகட்டை உள்ளும் புறமும் படியுமாறு முன் 46 ஆம் பாட்டிற்கூறிய தமனிய நீரில் தோய்த்து செல்வத்தை மிகுதிப்

படுத்திக்கொள்ளும் படியாக முந்தி நான் சொன்ன கிரமப்படி பெருமையோடு உருக்குவாய், செருக்காக இவ்விதமாய்த் தடவிச் செய்துகொண்டால் இவ்வாறான தங்கமானது புடம் போட்டாலும் தன்மாற்றுக்குறையாது. இது நிற்க மகாசித்தி வேலைகளை அடைதற் கேதுவாகிய இன்னுமொரு மார்க்கத்தைச் சொல்வேன். எனது பக்தியில் வசப்பட்ட சிஷ்யனே! பொருத்தத்தோடு அதைக் கண்டுணரக்கடவாய்.

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை. 49

வெள்ளைப் பாஷாண சுண்ணம்.

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

பாரி லுறையு மாணாக்கா பகர்வேன் மருந்து பரிவாக
மூரியுடனே முதற்றளையு முயல்வேன் சகரின்றம்பியுடன்
நாரிதலையி னண்ணனொடு நவில்வேன் மகரின் கடைமருந்து
தாரியுடனே வனந்தவளந் தனிலே பலமொன் றெடுகொளாய்.

இதில் ஓர் சரக்கும் நிறையுங் கூறுகின்றார்.

(இ - ள்.) பூலோகத்தில் தங்கி யிருக்கப்பட்ட எனது மாணாக்கனே! இம்முறைக்கான ஓர் மருந்தைப்பரிவாகச் சொல்லுவேன் கேட்பாயாக. அம்மருந்தானது உயர்ச்சியுடனே இப்பாட்டின் முதலடியின் முதற்சீரின் முதலெழுத்தும், சகரத்துக்குத் தம்பியாகிய வோரெழுத்தும், நாரி, என்ற பதத்தின் முதலிலிருக்கு மெழுத்திற்குத் தமையானாகிய வெழுத்தும், மகரவரிசையின் கடையெழுத்தும் சேர்ந்தால் எப்பெயராகுமோ அப்பெயருள்ள மருந்தாகும்: அது வெள்ளை நிறத்தையுடையதுமாகும். இத்தகைய சரக்கில் ஒரு பலமெடுத்துக் கொள்ளுவாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இப்பாட்டின் முதலடியின் முதற்சீரின் முதலெழுத்தாவது (பா.) சகரத்துக்குத்தம்பியாகிய வெழுத்தாவது (சா.) நாரி, யென்ற பதத்திற்கு முதலிலிருக்கு மெழுத்து நா, இதற்குத் தமையனாகிய வெழுத்தாவது (ந.) மகரவரிசையின் கடையெழுத்தாவது (ம்) ஆக இந்த நான்கெழுத்துக்களையுஞ் சேர்க்க (பாசாநம்) என்றானது. இதில் தந்நகர மிருப்பது தவறாயினும் பரிபாஷைக் கிரமத்தால் வந்ததாதலின் அதைக் கருதாதுதள்ளி

(பாஷாணம்) என்று முச்சுழி ணகரம் போட்டு வாசித்துக்கொள்க. வெள்ளை நிறத்தை யுடையது மாகுமென்று ஈற்றில் கூறியபடியால் இங்குக்காட்டியது (வெள்ளைப்பாஷாணம்) என்றறிக. இவ்விளக்கத்தால் வெள்ளைப் பாஷாணத்தில் ஒருபலமெடுத்துக் கொள்ளவேண்டு மென்பது துலங்குகின்றது. ஆதலின், அதன்படி 50
செய்க.

விபரம்

வெள்ளைப்பாஷாணம் பலம் 1

வேறு செய்யுள்

குலிகமி னிறையது கூறு வேன்றிரி
தலிகமிற் சமனது தன்னை நீக்கிமுன்
வலியுறு தானையில் வதைசெ யொன்றதை
நலியுட னெடுத்திடு நளன் நடுவதை.

இதில் மற்றுமிரண்டு சரக்குகளைக் கூறுகின்றார்.

(இ - ள்.) மேலுங்கூறுவேன் கேட்பாயாக. இதற்கு சாதிலிங்கத்தில் மூன்று என்ற அளவு எடுத்துக்கொள்வாய். மேலும், தலிகம் என்ற பதத்தை இரண்டுபாகமாக்கி அவற்றுள் முற்பாகத்தை நீக்கிவிட்டுப் பிற்பாகத்தையும், இதற்கு முன்னே பலம் பொருந்திய தானையென்ற பதத்தில் பின்னிருக்கும் எழுத்தை யடித்து விட்டு நின்றதையும், நளன் என்ற பதத்தின் நடுவெழுத்தையும் எடுத்துச்சேர்க்கக் கடவாய். (இவ்வாறுசேர்த்தால் ஓர் சரக்கினது பெயரமையும்). எ - று.

சூக்ஷுமை விளக்கம்; குலிகம் என்பது சாதிலிங்கம், இதற்கு நிறை திரி யென்றுமட்டும் சொல்லியிருப்பினும் 53 - வது பாட்டில் எல்லாம் வராகனெடைக் கணக்கென்று சொல்வதால் அக்கிரமம் பற்றி இதற்கும் வராகனெடையெனக் கொள்ளவேண்டியது ஆகவே, (ஜாதிலிங்கம் விராகனெடை மூன்று) என்று ஏற்பட்டது. அனுபவத்துக் கொத்தவாறு எடுத்துக்கொள்க. இனி, தலிகம் என்றபதத்தை இரண்டு பாகமாக்க தலி கம் என்றானது. இவற்றுள் முற்பாகத்தை நீக்கிவிட நின்ற பிற்பாகமாவது (கம்.) தானை, என்றபதத்தில் பின்னின்றவெழுத்தை யடித்துவிடநின்ற வெழுத்தானது (தா.) நளன் என்ற பதத்தின் நடுவெழுத்தாவது (ள.) இவ்விரண்டெழுத்துக்களையும் பாட்டிற் சொன்ன கிரமப்படி கம் என்பதற்கு முன்னே அமைக்க (தாளகம்)

என்றானது. இதுவே பிற்கூறிய சரக்காம். இதன் நிறை முதலியவிபரத்தை அடுத்தபாட்டிற் கூறுவார். 51

விபரம்

சாதிலிங்கம் விராகனெடை - 3

வேறு செய்யுள்

இவன் செப்பு மருந்ததிலிணை யெடுநீ
நவமாக் கெந்தியு நாட்டிடு வாயேகஞ்
தவமாகவே சூடனுஞ் சாற்றியல் போல்
எவமேக வெடுத்திடு வாய் காளாய்.

இதில் சில சரக்குகளும் நிறையுங் கூறுகின்றார்.

(இ ள்.) மாணாக்கனே! மேற்பாட்டிற் கூறிய தாளகத்தில் இரண்டு என்ற அளவு நீ எடுத்துக்கொள்வாய். அழகாக கெந்தியில் ஒன்று என்ற அளவு எடுப்பாய். தவம் பொருந்தும்படியாக சூடனில் கெந்திக்குச் சொல்லிய ஒன்று என்ற அளவே துன்ப நீங்குமாறு எடுத்துக் கொள்ளக் கடவாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இச்சரக்குகளுக்கு நிறை இன்ன தென்பதைத் துலக்காதிருப்பினும் அடுத்தபாட்டிற் சொல்வதை நோக்கி தாளகம் இரண்டு விராகனெடையும், கெந்தகம் ஒரு விராகனெடையும், சூடன் ஒரு விராகனெடையும் எடுத்துக் கொள்ள வேண்டும். சூடனுஞ் சாற்றியல் போல் என்றதற்கு, அதற்குமேற் சரக்கின் நிறை ஒன்றானதால் அதை யனுசரித்து அச்சூடனுக்கும் நிறை ஒரு விராகனெடை யென்று யூகித்தெழுதப்பட்டது. 52

விபரம்

தாளகம் விராகனெடை - 2
கெந்தகம் விராகனெடை - 1
சூடன் விராகனெடை - 1

வேறு செய்யுள்

வேந்தனின் னுதலிடு வெள்ளை தன்னிலே
மாந்தரே யெடுத்திடு மவுலு வேன்றிரி

ஈந்தமா விவையெலாம் விராக னின்னிடை
காந்தமா யெடுத்துநீ கல்வ மிட்டிடு.

இதில் ஓர் சரக்கும் நிறை விபரமுங் கூறுகின்றனர்.

(இ-ள்.) மாந்தர்களே! அரசர்களுடைய நெற்றியில் திலதமிடும்படியாகிய வெள்ளையென்ற சரக்கில் மூன்று என்ற நிறை எடுத்துக் கொள்வீராக. இங்குரைத்த சரக்குகளெல்லாம் விராக னெடைக் கணக்காகும். இவற்றைப் பிரகாசத்தோடு எடுத்துக் கல்வத்திற்போட்டு விடக்கடவீர்கள். எ - று.

சூக்ஷூம விளக்கம்: அரசர்களுடைய நெற்றியில் திலத மிடும்படியாகிய வெள்ளையென்ற சரக்காவது (வெள்ளைப் புனுகு.) இது இந்நூலிற் பலவிடங்களிலும் வந்தமையானுங் காண்க. இப்பாட்டின் மூன்றாமடியில் "இவையெல்லாம் விராகனெடை" யென்றதனால் இதிலுரைத்த சரக்கும், மற்ற சரக்குகளும் விராகனெடைக் கணக்கென ஏற்பட்டன. ஆகவே, வெள்ளைப் புனுகிலும் மூன்று விராகனெடை யெடுத்துக்கொள்ள வேண்டும். 53

எல்லாச் சரக்குகளின் விபரம்.

வெள்ளைப் பாஷாணம் பலம்	- 1
சாதிலிங்கம் விராகனெடை	- 3
தாளகம் விராகனெடை	- 2
கெந்தகம் விராகனெடை	- 1
சூடன் விராகனெடை	- 1
வெள்ளைப்புனுகு விராகனெடை	- 3

அறுசீர் விருத்தம்.

கையும் பைபின் நான் கோடு
கவல் வேன் மலரின் பேர் முன்னோன்
ரையின் முறையாம் வேமுனொடு
றன்னா கடையு மதன் றிரியே
ஐய விலையீ றாமிலைச் சாற்
றரைப்பாய் சாம மொன்றாக
மையை நிகர்த்த மருந்துதனை
வழித்தே யோட்டி னுட்பொதிவாய்.

இதில் மேற்படி மருந்திற்குச் சாறும் அரைப்புங் கூறுகின்றார்.

(இ - ள்.) முற்பாட்டிற் குறித்தபடி மருந்துக்களைக் கல்வத்தி லிட்டபின் செய்யவேண்டிய மார்க்கத்தைச் சொல்வேன் கேட்பாயாக. கையென்ற எழுத்தையும் அதனோடு பை என்ற எழுத்திற்குப் பின்னேயுள்ள நான்கா மெழுத்தாகிய வோரெழுத்தையும், மலருக்குப் பிரதிபதமாயுள்ள ஓர் பெயரையும் ரை யென்ற எழுத்தின் வர்க்கத்துக்கு முதலெழுத்தையும், பொருத்தமான வே யென்ற எழுத்துக்கு முதலெழுத்தையும், நகரவர்க்கத்திற்குக் கடை யெழுத்தையும், அவ்வர்க்கத்தின் மூன்றாமெழுத்தையும், அழகு பொருந்திய இலை யென்ற பதத்தில் ஈற்றெழுத்தையும் எடுத்துச் சேர்க்கவுண்டாகும் பெயருள்ள ஓர் பச்சிலையின் சாற்றினால் மேற்கண்ட மருந்துகளை ஒரு சாமநேரம் அரைக்கக்கடவாய். அவ்வாறு அரைத்தவுடன் மையைப்போன் றிருப்பதாகிய அந்த மருந்தை வழித்தெடுத்து ஓட்டில் வைத்துப் பொதியக்கடவாய். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: கை யென்ற எழுத்தாவது (கை) பை என்ற எழுத்துக்குப் பின்னேயுள்ள நான்காமெழுத்தாகிய வோரெழுத் தாவது (ப்) மலருக்குப் பிரதி பதமாயுள்ள ஓர் பெயராவது (பூ) ரை என்ற எழுத்தின் வர்க்கத்துக்கு முதலெழுத்தாவது (ர) வே என்றஎழுத்துக்கு முதலெழுத்தாவது (வெ) நகரவர்க்கத்திற்குக் கடையெழுத்தாவது (ற்) அந்தவர்க்கத்தின் மூன்றா மெழுத்தாவது (றி) இலை என்றபதத்தில் ஈற்றெழுத்தாவது (லை.) ஆக இந்த எட்டெழுத்துக்களையும் ஒன்றாகச் சேர்க்க (கைப்பூர வெற்றிலை) என்றானது. இதைக் கற்பூர வெற்றிலை யென்றுஞ் சொல்லுவர். இந்தஇலைச்சாற்றை விட்டே முன் கல்வத்திற் போட்டமருந்துகளை யரைக்கவேண்டும். இம்மருந்து அரைக்கும் போது கறுப்பு நிறமுள்ளதாகும் என்பதைக்காட்டற் பொருட்டு இப்பாட்டின் ஈற்றடியில் "மையை நிகர்த்த மருந்து தன்னை வழித்தே" எனக்கூறினார். ஈற்றில் "மருந்தை வழித்தே யோட்டினுட் பொதிவாய் என்று மட்டு மிருந்தாலும் மருந்தெல்லாவற்றையும் பக்குவமாக வழித்து ஓர் ஓட்டில் வைத்துமேலோடு சரியானபடி மூடவேண்டும். ஓட்டை நன்றாகத் தேய்த்துச் சிறிதேனும் இடை வெளியில்லாமற் செய்யவேண்டும் இதற்குச் சீலை செய்யவேண்டிய விபரத்தையும், புடம் போடும் விபரத்தையும் அடுத்தபாட்டிற் கூறுவாரெனவறிக. 54

இதுவுமது

வளையற் கருவா லரைத்ததுவை
வழித்துச் சீலை யேழிடு வாய்
முழமொன் றெனவே புடமியற்றி
மூட்டித் தீயால் நீற்றதற்பின்
வழமை யுடனே மருந்தை யெடு
கவச நீக்கில் வனந்தவளம்
பழமை யுருகு மிகுமேன்மை
பகர்வேன் வேதை படிமாக்காள்.

இதில் புட விபரஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) முன் பாட்டிற் கூறியபடி மருந்தை ஓட்டிற் சேர்த்தபின் வளையல் நஞ்சையரைத்து வழித்து அதனால் அவ்வோட்டுக்கு ஏழு சீலை செய்யக்கடவாய். அவ்வாறு செய்தபின் அதை ஒருமுழப்புடத்தி லமர்த்தித் தீமூட்டி நீற்றுப்போன பின்பு பழக்கப்படியே உடனே அந்த மருந்தை யெடுக்கக்கடவாய். அப்படியெடுத்தவுடன் கவசத்தைப் பிரித்துப்பார்த்தால் அம்மருந்தினிறம் வெண்மையா யிருக்கும். பூலோகத்திற்றங்கிய மனிதர்களே! மேலும் இதன் பழமையான மேன்மைகளையும் சொல்வேன் கேட்பீர்களாக. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: முன் சொன்ன கவசத்திற்கு வளையல் நஞ்சை யரைத்துச் சீலைசெய்து புடம்போட்டுக் கொள்ளவேண்டும். 55

திருப்புகழ்ச் சந்த விருத்தம்

படியி னுடங்கிச்சீ தளவன்னி தாரிலை
படிய பிறங்கிக்கூ ரயில்முள்ளின் மேனுனி
படர வரும்பிப்பார் மலர் மேனறை - மிகுவாசம்
தொடவே சிணுங்கிநீ ரதிற்றுள்ளிப் பார்விழுஞ்
சொலுமிலைச் சாற்றைக்கூட் டியேயாட்டிப் போட்டிடு
சூட்சிமுன் சீலைமாட் டிடுபுடமுன் போலவே - யறிவாயே
துடியிடை தங்கிப்பூ மலர் பொங்கிச் சீரரி
சுரிகுழல் முங்கியே நரைதங்கித் தேன்மழை
சொரியப் பிறங்கித்தூய் நறைமுங்கிய பார்வதி- மணவாளன்
அடவு தயங்கிப்பேர் பினகற்றிக் கரமுடனே
யெடுபங்கி லாந்தைமுன் னொன்றையீந் திடவான
விலையிற் புடமுமுன் வாறுபோற் போட்டெடு- மருந்தாமே

இதில் இரண்டு பச்சிலைகளும் புடங்களுஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) மேற்சொல்லிய மருந்தை மீண்டும் பூமியில் முடங்கிக் குளிர்ச்சியும், சூடுமுள்ள இலைகள் கீழேபடிய விளங்கி, கூர்மையான வேலைப்போன்ற இலையினது நுனியானதுபடர அரும்புகளை யுடைத்தாய் மலர்ந்து மேலே தேனும், வாசனையுமிகுந்து ஜனங்கள் தொட்ட மாத்திரத்தில் சிணுங்குந் தன்மையதாகித் துள்ளிச்சுருங்கிக் கொள்வதாகிய ஓர் பச்சிலையின் சாற்றிலரைத்து முன்போல் ஓட்டிலிட்டுச் சீலைசெய்து தந்திரமாகப் புடம்போட்டெடுக்கக் கடவாய். பின்பு அதை உடுக்கை போன்ற இடையினை யுடையவளாகி, அழகிய புஷ்பங்களைச் சூடுதலால் சுருண்டகூந்தலில் சிறப்புப்பொருந்தியவண்டுக் கூட்டங்கள் மொய்த்து அதனால் தேனொழுக இடபத்தி லெழுந்தருளி விளங்குகின்ற பார்வதியின் நாயகனாகிய பரமசிவக் கடவுளினது பொருத்தம் விளங்கிய ஓர் பெயரில் பின்னெழுத்தை நீக்கி நின்ற வெழுத்துக்களையும், அவற்றோடு கரம் என்றபதத்தையும் ஆந்தை யென்னும் பதத்தில் முன்னின்ற எழுத்தைநீக்கி நின்ற மற்ற எழுத்துக்களையும் ஒன்றாகச் சேர்த்தால் என்ன பெயரமையுமோ அப்பெயருள்ள பச்சிலையின் சாற்றாலரைத்து முன்போல் சீலை செய்து ஒருபுடம் போட்டெடுக்கக் கடவாய். இவ்வாறு இரண்டுபுடமும் போட்டுத்தீர்ந்தால் மேற்படி சுண்ணமானது நல்ல பக்குவத்தை யுடைய மருந்தாகும். எ - று.

சூக்ஷுமவிளக்கம்: இப்பாட்டின் முதலிற்கூறிய இலட்சணங்களை யுடைய சிணுங்குந் தன்மையதாகிய இலையாவது (தொட்டாற் சுருங்கியிலை.) இந்த இலைச்சாற்றினாற்றான் முதலிற் கூறியபடி ஒரு புடம் போட்டெடுத்துக் கொள்ளவேண்டும்.

இரண்டாவது: பார்வதியின் நாயகனாகிய பரமசிவக் கடவுளினது பொருத்தம் விளங்கிய நாமமாவது சிவன். இதில் பின்னெழுத்தை நீக்க நின்றது (சிவ.) கரம் என்ற பதமாவது (கரம்.) ஆந்தைஎன்னும் பதத்தில் முன்னின்ற எழுத்தை நீக்க நின்ற மற்றை யெழுத்துக்களாவன (ந்தை) ஆக எல்லாவற்றையும் கிரமப்படி ஒன்றாகச் சேர்க்க (சிவகரந்தை) என்றானது. இதில் மகரவொற்று "மவ்வீறொற்றழிந்து" என்ற சூத்திர விதிப்படிகெட்டு(சிவகரந்தை) என்றானது. இந்தச்சிவகரந்தைச் சாற்றிலேயே இரண்டாவது ஒரு புடம் போட்டெடுத்துக் கொள்ளவேண்டும். ஆகவே, இங்குக்கூறியபடி தொட்டாற் சுருங்கிச்சாற்றில் ஒரு புடமும், சிவகரத்தைச் சாற்றில் ஒரு புடமும் ஆக

இரண்டுபுடமும், போட்டெடுத்தால் இந்த வெள்ளைப் பாஷாண சுண்ணமானது நல்ல பக்குவத்தோடு முடியும். 56.

வேறு சந்த விருத்தம்.

வனமது தவளக் கழிபோல் வலுவுறு மருந்தைச் சிறந்தே
வைவெகு பதனத் துடனே - யினிவேதை
கனமுறு குகையி லிரதங்காட்டிபிற் குருவிற்சிறந்தே
கணக்கொரு நூற்றொன் றெனவே - யிடுவா
அனலதிற் குகையை முக்கா லடைவினி லடைவா யறிவா
யனல்புட மமர்ந்தே குகையை - யெடுகாளாய்
இனமது வெளுமை கனமா யிரசித மிதுவென்றறிவாய்
யிசைப்பார் வணிகர் பதினொன் - றெனவாயுள்.

இதில் மேற்படி மருந்தின் வேதைசொல்கின்றார்.

(இ - ள்.) முன் பாட்டிற் கூறியபடி புடம் போட்டெடுக்க அம் மருந்தானது வெள்ளை நிறத்தையுடைய களிபோல் சுண்ணமாகி யிருக்கும். அதைச் சிறப்புடனே யெடுத்து வெகு பத்திரமாக வைக்கக்கடவாய். இனி அதனுடைய வேதையையுஞ் சொல்வேன் கேட்பாய். ஓர் கனத்த குகையில் இரசத்தை விட்டு இந்த வெள்ளைப் பாஷாணச் சுண்ணத்தில் இரசத்துக்கு நூற்றிற்கொரு பங்கெடுத்துப் போட்டு அக்குகையை அனலில் முக்கால் பங்கு நெருப்பி லிருக்கும் படியாகப் பதித்து எரித்துப் புடம் அமர்ந்தபின் குகையை யெடுத்துப் பார்க்க கடவாய். வாலிபனே! அப்போது அதில்விட்ட இரசமானது இறுகிக்கட்டி வெளுத்துக் கனத்த வெள்ளியாகும். இம்முறையை நீ அவசியம் தெரிந்துகொள்ளக்கடவாய். இதற்கு லோகபரிக்ஷையிற் றேர்ந்த வியாபாரிகள் பதினொரு மாற்றென்று சொல்வார்கள். எ - று.

சூக்ஷும விளக்கம்: இந்தப் பாஷாண சுண்ணத்தை இரசத்தில் நூற்றிற்கொன்று சேர்த்துக் குகையில் வைத்தூதினால் பதினொரு மாற்றுள்ள வெள்ளியாகும். இதில் இரசம் இவ்வளவு சேர்க்கவேண்டு மென்ற விபரத்தைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. புடம் அமர்ந்து குகையையெடு என்று சொன்னதனால் புடம் போடுகின்றதா? வைத்தூதுகிறதா? என்னும் விபரங்கள் துலங்கவில்லை : என்றாலும் இவற்றை யெல்லாம் அனுபவ சாலிகளிடம், கேட்டுத் தெரிந்து

கொள்வது நலம், இது வெள்ளை நிறமாயிருக்கு மென்பதை யுணர்த்தற் பொருட்டு இப்பாட்டின் முதலடியில் "வனமது தவளக்கழிபோல் வலுவுறு மருந்தை" என்றார் அவ்வடியில் "வைவெகு பதனத்துடன்" என்றதனால் இம்மருந்தின் அருமை தோன்றுகின்றது. இது தனி முறையாதலால் எல்லோரும் சுலபமாகச் செய்துகொள்ளலாம். 57

தனிமுறைச் செந்தூரம்

வண்ணச்சந்த விருத்தம்

மண்டெங்குந் தங்குமாந்தரே மருந்தொன்றிங் கியல்புற
விண்டங்கண் டறிமிகு மென்மையி - னியல்பாமே
கண்டமுன் னோன்முறை தம்பியு நந்திநடு மந்தம் பின்கடை
கதித்ததுட னெடுநீ நிறை - கிளியாதி
விண்டெங்குஞ் சண்டங் குளறியே விண்டொன்றுங்
குங்குன்றிடியுட
னெண்டிண்டிக ளொண்டியுடன் விழும் - படிமீதே
பண்டுண்டும் பவளத் திறவனம் பானென்றே வலியிரத்தவனமது
பகர்கின்றே னிறைமனுவிழி - தனிற்பாதி.

இதில் இரண்டு சரக்குகளும் நிறையுஞ் சொல்லுகின்றார்.

(இ - ள்.) பூலோக மெங்குஞ் சஞ்சரிக்கும்படியாகிய மனிதர்களே! இங்கு வேறொரு மருந்தைப் பொருத்தமாகச் சொல்லுவோங் கேட்பீர்களாக. இதனால் மிக்க மேன்மையுண்டாகும். கண்ட என்ற பதத்தின் முதலெழுத்துக்குத் தம்பிமுறையாகிய வோரெழுத்தையும், நந்தி, என்ற பதத்தின் நடுவெழுத்தையும், மந்தம் என்ற பதத்தின் பின்னிரண் டெழுத்தையும் எடுத்துச் சேர்த்து அதனால் எப்பெயரமையுமோ அப்பெயருள்ள சரக்கில் கிளியின் வர்ணத்தில் பாதியளவெடுத்துக் கொள்க. மேலும் எவ்விடத்தும் மேகமானது கட்டு விட்டு வேகமாயிடித்து மின்னி மழையைப்பொழிகிற காலத்தில் அம்மழையோடு பூமியிலே விழப்பட்டதும், பவளத்தைப் போன்ற நிறமுடையதாகி இரத்தத்தை நிகர்த்துப் பிரகாசிப்பதாகிய ஓர் சரக்கிலும் மனிதரது விழியிற் பாதியென்ற அளவு எடுத்துச் சேர்க்க.

சூக்ஷ்ம விளக்கம்; முதல் சரக்கு கண்ட என்ற பதத்தின் முதலெழுத்துக்குத் தம்பி முறையாகிய வோரெழுத்தாவது (கா.) நந்தி

என்ற பதத்தின் நடுவெழுத்தாவது (ந்) மந்தம் என்றபதத்தின் பின்னிரண்டெழுத்துக் களாவன (தம்) இவற்றை ஒன்றாகச்சேர்க்க (காந்தம்) என்றானது. கிளியின் வர்ணமாவது பஞ்சவர்ணம், இந்த ஐந்திற்பாதி (இரண்டரை.) ஆகவே (காந்தம் நிறை இரண்டரை) என ஏற்பட்டது. இரண்டாவது சரக்கு: மழைகாலத்தில் மழையுடன் கூட விழுந்து பூமியில் பவளம்போல் பிரகாசிப்பதான ஓர் சரக்கானது (இந்திர கோபம்.) மனிதரது விழியிற் பாதியாவது விழி இரண்டு ஆதலால் அதிற்பாதி (ஒன்று.) ஆகவே (இந்திரகோபம் நிறை ஒன்று) என்று ஏற்பட்டது. இக்கிரமத்தின்படி காந்தத்தில் நிறை இரண்டரையும், இந்திர கோபத்தில் நிறை ஒன்றும் எடுத்துக்கொள்ள வேண்டும். இங்கு நிறைவிபரம் இன்னதெனக் கூறாவிடினும் பின்னோரிடத்திற் கூறுவாறெனவறிக. 58

விபரம்

காந்தம்	-	2 1/2
இந்திரகோபம்	-	1

வேறு செய்யுள்

முருந்தோவன முத்தி விளைந்தவன்
பொருந்த மாகிய பாலடு வாயர்ந்த
மேண்மையன் முறைவழி கோன்மன்னர் - நுதல் மீதில்
இருந்த வாடைய னேகிடு மஞ்சளி
னிரத்தம் போல்வன மருத்த மாகுவ
னியற்றுவ னதிலே யெடுநீ நிறை - பரன்போலே
மருந்து வேறினி யான்மவுல் வேனது
வடிந்தி லங்கிய சிவந்த மேனியன்
மடிந்தி டாமடை யன்மடி யாமலே - யுறைதானம்
பருந்து பந்திடல் முன்பே ரின்முதற்
பளங்க முன்னறு பகர்வோ ரினம்
பதுங்கும் போதினி லேயெடு நீநிறை - யிணையாமே.

இதில் இரண்டு சரக்குகளும் நிறையுங் கூறுகின்றார்.

(இ - ள்.) வெள்ளை நிறத்தோடு வனப்பக்கங்களிலே உண்டானதும், பொருத்தமாகிய வெண்ணெயைப் போன்றிருப்பதும், மிக்க மேன்மை

தங்கியதும், மனு நீதி வழியே நடக்கின்ற சிரேஷ்டம் பொருந்திய அரசர்களினது நெற்றியில் திலதமாக வாசனையோடு பிரகாசிப்பதும், மஞ்சளிற் சேர்த்தால் அதை இரத்தம்போற் சிவக்கச்செய்வதுமாகிய ஓர் சரக்கில் பரன்போன்ற நிறை எடுத்துக்கொள்வாய். மாணாக்கனே! இன்னுமொரு மருந்துசொல்வேன் கேள். வடிவோடு பிரகாசிப்பதாகிய சிவந்த தேகத்தை யுடையதும், அழியாதபலத்தை யுடையதும், மடையன் என்ற சரக்கை மடியாமற் கட்டக்கூடியதும், பொருத்த மாகிய பந்திடல் என்ற பழத்தின் மற்றொரு பெயரின் முதலெழுத்தையும், பளங்கம் என்றபதத்தில் முன்னிரண்டு எழுத்துக் களையும் அடித்துவிட நின்றவெழுத்துக்களையும் எடுத்துச் சேர்த்தால் எப்பெயரமையுமோ அப்பெயருள்ளதுமான ஓர் சரக்கில் இணையானநிறை எடுத்துக் கொள்ளக்கடவாய். எ - று.

சூக்ஷுூம விளக்கம்: முதலிற் சொன்ன சரக்கு முதற்குறித்த இலட்சணங்களை யுடையதும், அரசர்களுடைய நெற்றியில் திலதமாகப் பிரகாசிப்பதும், மஞ்சளிற் சேர்த்தால் அதைச் சிவக்கச் செய்வதுமாகிய சரக்காவது (வெள்ளைப் புனுகு) இதில் பரன்போன்ற நிறையாவது (ஒன்று) ஆகவே. வெள்ளைப் புனுகில் நிறை ஒன்று எடுக்க வேண்டுமென ஏற்பட்டது.

இரண்டாவது சொன்ன சரக்கு: பந்திடல் என்ற பழமாவது எலுமிச்சம் பழம் இதற்குப் பரிபாஷைநாமம் லிம்பழம். இதிலிருக்கும் முதலெழுத்தாவது (லி) பளங்கம் என்றபதத்தில் முன்னிரண்டு எழுத்துக்களையும் நீக்கப் பின்னின்ற எழுத்துக்களாவன (ங்கம்) ஆக இரண்டையும் சேர்க்க (லிங்கம்) என்றானது. இதுவே இரண்டாவது சொன்ன சரக்காம். இதற்கு இணையான நிறை என்றதை இரண்டு எனக்கொள்ள. ஆகவே (லிங்கம் நிறை இரண்டு) என ஏற்பட்டது. ஆதலின், இங்குக்காட்டியபடி வெள்ளைப்புனுகில் நிறை ஒன்றும், லிங்கத்தில் நிறை இரண்டும் எடுத்துக்கொள்ள வேண்டும். இச்சரக்குகளை இப்பாட்டில் குறிப்பிட்டிருக்கும் பரீக்ஷைகளின்படி பரீக்ஷித்துக் கொள்வது நலம். 59

விபரம்

வெள்ளைப் புனுகு	-	1
லிங்கம்	-	2

வேறுசந்த விருத்தம்

அத்தியி லுற்றிடும் நற்றவ னைத்தெரி
யற்புட னேசுவைகற்புறு பத்திரன்
அண்டெழி யுமலை யெண்டிசை மீதினில் - விகடானோன்
தத்தியே கால்விசை யுற்று விரைவுடன்
வெற்றியுடன் செலுஞ் சித்திர மானது
தத்தியுடன்சிவன் பற்றுதல் போலெடு - நிறைதானே
மற்றொரு வேதை மருந்தினிச் சொல்வேன்
கைத்திடு மாவி னமுதென வேவன
முற்றிடும் நாவினிற் கைப்புட னேகரங் - கனகாரம்
சித்திரமுன் றம்பியுஞ் சேனமி னாப்பணு
மற்ற மகர்கடை யுற்ற மருந்தது
முத்தி யுடனெடு பத்திர மாநிறை - படியொன்றே.

இதில் இரண்டு சரக்குகளும் நிறையுங் கூறுகின்றார்.

(இ - ள்.) சமுத்திரத்திற் பொருந்தும் படியாகிய நல்ல தவத்தினையுடையதும், அழகிய வெள்ளை நிறமானது விளங்கா நின்றதும், அன்புடனே சுவையானது கைக்கும்படி யானதும் அலையின் வழியாக எட்டுத்திக்குகளிலும் போய்ப்பரவும்படி யானதும், கால்கர முதலிய எதுவுமின்றி அவ்வலையின் வேகத்தால் விரைவு கொண்டு வெற்றியோடு சொல்லும்படியான சிறப்பு வாய்ந்ததுமான ஓர் சரக்கில் சிவன் கையில் பற்றிருக்கும் முக்கிய சின்னங்களைப் போன்ற அளவு எடுத்துக் கொள்வாய். மேலுமோர் மருந்தைக் கூறுவேன் கண்டறி, நாவிற்போட்டால் மிகவுங்கைப்பதும், பசுவின் பாலைப் போன்ற வெண்மை நிறமுடையதும், சித்திரம் என்ற பதத்தில் முதலி லிருக்கப்பட்ட எழுத்திற்குத்தம்பியாகிய வெழுத்தும், சேனம், ன்ற பதத்தில் நடுவே யிருக்கப்பட்ட எழுத்தும், மகரத்தின் கடையெழுத்தும் சேர்ந்தால் எப்பெயரமையுமோ அப்பெயருள்ளதும், காரமுள்ளதுமான ஓர் சரக்கிலும் ஒன்று என்ற நிறை விருப்பத்தோடு எடுத்துக்கொள்ளக்கடவாய். எ - று.

சூக்ஷுமவிளக்கம்: முதலிற் சொன்ன இலட்சணங்களை யுடைய சரக்கு (கடல் நுரை) சிவன் கையிற் பற்றியிருக்கும் முக்கிய சின்னங் களாவன: மான், மழு. இவை இரண்டாதலால் கடல் நுரையின் நிறை (இரண்டு) எனக்கொள்க. இனி, சித்திரம், என்ற பதத்தில் முதலி லிருக்கப்பட்ட எழுத்திற்குத் தம்பியாகிய வெழுத்தாவது (சீ) சேனம் என்ற பதத்தில் நடுவேயிருக்கப்பட்ட எழுத்தாவது (ன) மகரத்தின்

கடை யெழுத்தாவது (ம்) ஆக மூன்றையும் சேர்க்க (சீனம்) என்றானது. கனகாரம் என்று குறிப்பு காட்டினமையால் அந்தக்காரம் என்ற பதத்தையும் இதனோடு சேர்த்தால் வேண்டும். அவ்வாறு சேர்த்தால் (சீனக்காரம்,) என்றாகும். இதுவே பிற்குறித்த சரக்காம். இதில் ஒன்று என்றஅளவு எடுத்துக்கொள்ளவேண்டியது. ஆகவே, கடல் நுரைஅளவு இரண்டும், சீனக்காரம் அளவு ஒன்றும் எடுத்துச் சேர்க்கவேண்டும் மென்பது ஏற்பட்டது. கடல் நுரைக்கு இவ்விதமான வர்ணிப்பை இந்த நூலிற் பலவிடங்களிலும் சொல்லி யிருப்பதைக் கொண்டே இவ்விடத்தும் அது கடல் நுரையெனத் தீர்மானிக்கப் பட்டது. சிவன் கரத்திற்பற்றுதல் பலவிருப்பினும் அவற்றுள் முதன்மை பெற்றனவும், எப்பொழுதும் கரத்தைவிட்டு நீங்காததனவும் மான், மழு இரண்டுமே யாதலால் இவ்விடத்தில் அவ்விரண்டையும் எடுத்துக் கொண்டு அக்கிரமத்தின்படி நிறை இரண்டெனக் கொள்ளப்பட்டது. 60

விபரம்.

கடல் நுரை - 2
சீகக்காரம் - 1

திருப்புகழ்ச்சந்த விருத்தம்

புவியு முழன்றது நீராலே யரை
போந்தென வுற்றுழை மேலாலேயெழு
புகலுவ னெல்கையு முவரா னதேயிட - மறிவாயே
கவினுற வேயொளிர் கதிர்போ லேயெழுங்
கண்டுளிர்பனியினிற் கருவாகி யேயது
கருவுட னெழுமதில் நிறைதா னீயெடு - திரிபாதி
சவுமியமுறுகட லிடைமீ தேநிதஞ்
சார்புற வேயிழை நூலா னோன்நரர்
சடலமிற் சாரவே மிகுவே தனைசெயுஞ் - சண்டாளன்
மவுலுவ னவனது முனமே யுலர்த்திய
வகையுட வதில்நிறை யியல்பா யெடுத்துநீ
வலுவுறு குடவியி லிணைபோ லவுமென - வறிவாயே.

இதில் இரண்டு சரக்குகளும் நிறையுஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) பூமியானது குழைந்து நீரினது தன்மையினாலே ஓர்வித ரூபத்தோடு தோன்றி மேலே யெழுந்திருக்கும். இத்தகைய சரக்கானது உண்டாகு மிடத்தைச் சொல்வேன் கேள். இதன் ஸ்தானம் உவர்

நிலமாகும். இது அங்கே உண்டாகி சூரியன்போல பிரகாசித்துக் கொண்டிருக்கும். மேலும் இது பனிகாலத்தில் உவர் நிலமெங்கும் எழும்பிவிளங்கும். இதில் திரியில் பாதியென்ற நிறை எடுத்துக் கொள்ளக்கடவாய். இன்னும் அழகு பொருந்திய கடலினிடத்தெழுந்து தினமும் நூலைப்போற் பொருந்திப் பிரகாசிப்பதும். மானிடர்களுடைய தேகத்திற் பட்டால் மிகுந்த வேதனை செய்யத் தக்கதும் ஆன ஓர் கொடிச்சரக்கில் உலர்த்தினது இணை யென்ற அளவு எடுத்துக்கொள்ளக்கடவாய். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்; முதலிற் சொல்லிய இலக்ஷணங்களை யுடைய சரக்கு (பூநீறு) திரியில் பாதிநிறையாவது ஒன்றரை. ஆகவே, (பூநீறு நிறை ஒன்றரை.) எனவறிக. இரண்டாவது சொன்ன இலட்சணங்களையுடைய சரக்கு (பவளச்சொறி) இணையென்ற அளவாவது (இரண்டு) இதன்படி (பவளச்சொறி அளவு இரண்டு) என விளங்கிற்று. ஆதலால், பூநீற்றில் நிறை ஒன்றரையும், பவளச்சொறியில் நிறைஇரண்டும் எடுத்துக் கொள்ள வேண்டியது. இவ்விரண்டு சரக்கிற்கும் இவ்வித வர்ணனை இந்நூலிற் பலவிடங் களிலும் வந்திருத்தலானும் ஆராய்ந்துணர்ந்து கொள்க.. 61

விபரம்

பூநீறு	-	1 1/2
பவளச்சொறி	-	2

வேறுசந்த விருத்தம்.

தூனாவொடு ரகரைந்துடன் சூனாவெனு மருந்து
தானாகவே வனமானது சத்தாகிய பசுமை
மானாநிறை யுதிலேயெடு வலுவுற்றிடு காளை
வேனாகவே வேதையினி விள்வேனிதைக் கேண்மோ.

இதில்ஓர் மருந்தும் நிறையுங் கூறுகின்றார்.

(இ - ள்.) தூனாவென்ற எழுத்தோடு ரகரத்தின் ஐந்தாமெழுத்தையும், சூனா என்ற எழுத்தையும் சேர்த்தால் அமைகின்ற பெயருள்ள ஓர் மருந்தும் இம்முறைக்காகும். அதன் நிறம் பசுமையாகும். இதில்மானா என்றநிறை எடுத்துக்கொள்வாய். பலம் பொருந்திய வாலிபனே! இனிமேல் நடக்கவேண்டிய வேதைகளையும் அதிகமாக எடுத்துச் சொல்லுவேன் கேட்பாயாக. எ - று.

சூக்ஷும விளக்கம்: தூனா என்ற எழுத்தாவது (து) ரகரத்தின் ஐந்தாமெழுத்தாவது (ரு) சூனா என்ற எழுத்தாவது (சு) ஆக மூன் றெழுத்துக்களையுஞ் சேர்க்கத் துருசு என்றானது. மானா நிறை என்றது மகரம் ஒன்றாதாலால் ஒன்றாம். ஆகவே, (துருசில் நிறை ஒன்று) எடுக்கவேண்டுமென்று ஏற்பட்டது. அவ்வாறே செய்க. 62

விபரம்.

துருசு - 1

திருப்புகழ்ச் சந்த விருத்தம்.

படியெங்கு மேநடுங்கப் பகுவாய்ப் பயோ தரங்கள்
பவ்வமி னீரருந்திப் பருமித்து மாக்கிரமித்துக் - ககமீதில்
இடியன்றி மின்னல்வீச்சு மெதிராக் குழன்ற பேச்சு
மிகல்சண்ட மாருதவீச்சு மினிதாய்த்தண் ணீர்கள் வீச்சு
- மழையாக
கெடியன்றி யேகமாகக் கிளர்தரையின் மீதில்வீழ
கிளர்ந்துகிளப் புடனுணின்று தழைந்து மிதுமினுத்தங்கு
- வெளியானோன்
அடிநின் றெழும்புமந்த மணில்வால் நிகர்த்தம் மாக
வதன்மேற் கடைந்ததென்ன வரவிந்த மெல்லரும்பு -
மடையாளம்.

இதில் ஓர் சரக்கை வருணிக்கின்றார்.

(இ - ள்.) பூலோகமெங்கும் நடுங்கும்படியாக கூட்டமான மேகங்கள் சமுத்திரத்தில் நீரையருந்திச் செழிப்புற்று ஆக்கிரமித்து ஆகாயத்தில் இடிக்கும் இடியே யல்லாமல் மின்னல் வீசுதலையுங் கொண்டு சண்ட மாருதக் காற்றுடனே எதிராகிய மிகுந்த இரைச்சலும், தண்ணீர் வீசுதலும் பொருந்தி மழையானது அளவின்றி எங்கும் பரவி விளங்காநின்ற தரையில் வீழ அக்காலத்தில் பிரகாசத்தோடு முளைத்துத் தரையினின் றெழுந்தோங்கித் தழைத்து வெளியாகப்பட்டது. பூமியிலிருந்து மரத்திலேறி ஓடும்படியாகிய அணிலினது வாலை நிகர்த்த அடியழகு விளங்கமேலே கடைந்தெடுத்த செப்பென்று சொல்லும்படியான தாமரையரும்பு போன்றிருக்கும். இதுதான் இனி நாம் சொல்லப்புகும் வஸ்துவினது அடையாளம் எ - று.

சூக்ஷும விளக்கம்: இனிச் சொல்லப்போகும் சரக்கானது மிகுந்த மழைக்காலத்தில் உண்டாகத்தக்கதும், அடிப்பாகம் அணில்

போன்றிருப்பதும், மேற்பாகம் கடைந்தெடுத்த செப்பைப்போலும், தாமரையரும்பைப் போன்றுமிருப்பதாம். இதன்பெயர் முதலிய விபரங்களை அடுத்த பாடல்களில் துலக்குவார். 63

வேறுசந்தச் செய்யுள்.

வனமே கனமே வண்பறங்கி மலரென
வடிவாய் மெதுவாய்ப் பச்சைமஞ்சள் வாடையாய்
வரையாய் நுரையாய் மாசையெழி லாமொளி - யதினூடே
தினமே யறைவன் சித்திரையி ராகல
சிலையைந் தெனவே திங்களினிற் றோன்றிடுஞ்
செறிவா சனையுஞ் சுற்றிவெகு தூரமிற் - செலுந்தானே
மனமே புரட்டும் வாடையுறும் வாசனை
வளர்வாய் மேலிற் றுள்ளிகரி மையுறும்
வலுவாகி யவவன் வண்டன்மகா சண்டனாம் -
லயமானோன்
இனமா கியவத னெல்கையுமே யுவர்சில
மிடைமீ தினிலுறுஞ் சீரிடத்தில் முளைக்குமே
வியல்ப்பாய்மிகு வேதைகள் செய்யும் பெயரினி -
நவில்வேனே.

இதில் மேற்படி சரக்கின் இலட்சணமே சொல்கின்றார்.

(இ - ள்.) இன்னும் மேற்சொல்லிய சரக்கின் உயர்ந்த நிறமானது பறங்கிப்பூவைப் போன்றிருக்கும். நல்ல அழகும் மெதுவும் பச்சைமஞ்சள் வாடையும் உள்ளதாயும் இதழ்கள் உள்ளே கத்திபோல் வரைவரையாய் விளங்குவதாயும், அதனூடே பொன்னினது பிரகாசமானது உண்டாகிக் கொண்டிருக்கும். இது உண்டாகும் காலத்தைச் சொல்வேன் கேட்பீர்களாக. இது சித்திரைமுதல் ஐந்து மாதங்கள் வரை உண்டாகமாட்டாது. அதன்மேல் ஆவணியிலிருந்து மார்கழிமாசம் வரை உண்டாகும். இதனுடைய நெருங்கிய வாசனையானது சுற்றிச் சுற்றி வெகுதூரம் வரையில் சென்று கொண்டிருக்கும். இதில் மனதைக் குழம்பும்படியான வாடையுண்டாகும். இதன் மேற்பாகத்தில் கறுப்பு நிறமாயிருக்கும். இது மிக்க வன்மையும் , வேடிக்கைச் செயல்களும், எமனைப்போன்ற தன்மையு முடையதாம். இது கூட்டமாக உண்டாகும் இடமாவது உவர்நிலச்சார்பான சிறப்புப்பொருந்திய இடங்களாம். இது பெரிய ஆச்சரியமான வேலைகளைச் செய்யும். இனி இதன் பெயரைச் சொல்வேன் கேட்பீர்களாக. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை "பெயரினி நவில்வேன்" என்றதனால் அடுத்தபாட்டில் இதன் பெயர் முதலியவற்றை விளக்குவா ரெனவறிக. 64

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

கேளப்பா விவண்செப்பு மருந்து தன்னைக்
கெடியாகக் கார்த்திகைமுன் வாளான் முன்னேத்
தாளப்பா தாக்கிடுவாய் மருந்து மாச்சு
தமனியங்க ளுன்கையிற் சார்பு மாச்சு
ஏளப்பா விவண்விண்ட மருந்து தன்னை
யுலர்த்தியெடிங் கினிநிறைவு மியம்பு வேனே
தாளப்பா தாத்திரியின் மூன்றுமாமே
சாற்றுகிறேன் வேதையினித் தயவாய்க் கேண்மே.

இதில் முன்மருந்தின் பெயரும் நிறையுஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) அப்பனே! இங்குச் சொல்லிவந்த மருந்தினது பெயரைச் சொல்வேன் கேட்பாயாக. கீர்த்தியோடு கார்த்திகை யென்னும் பதத்தின் முதலெழுத்தையும், வாளான் என்னும் பதத்தில் முதலெழுத்தை நீக்கி, மற்ற எழுத்துக்களையும் ஒன்றாகச் சேர்த்துப்பார்ப்பாய். அப்படிப்பார்த்தால் இம்மருந்தினது பெயர் விளங்கும். இதை நீ கண்டெடுத்துக் கொள்வாயானால் பொன்னெல்லாம் உன்கையில் வந்து சேரும். இங்குச் சொல்லிய இந்த மருந்தை உலர்த்தி எடுத்துக்கொள்வாய். இதன் நிறை விபரத்தையும் சொல்வேன்கேள். இதன் நிறையானது பூமி வகையில் மூன்று கொண்டதாகும். இனி இதன் வேதைகளைச் சொல்வேன் தயவோடு கேட்பாயாக. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: கார்த்திகை யென்னும் பதத்தின் முதலெழுத்தாவது (கா.) வாளான் என்னும் பதத்தில் முதலெழுத்தை நீக்க நின்ற எழுத்துக்களாவன (ளான்) இவ்விரண்டையுஞ் சேர்க்க (காளான்) என்றானது. இதுவே மேற்கண்ட மருந்தின் பெயராம். இதை எமதாசிரியர் (கருங்கொடைக் காளான்.) என்று சொல்லியிருப்பதால் அவ்வாறே கருங்கொடைக்காளான் எனக்கொள்ள வேண்டும். இனி, பூமியின் வகையாவது; மருதம், குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை என ஐந்து, இவ்வைந்தும் மூன்றுகொண்டது (பதினைந்து) ஆதலால்

நிறை பதினைந்தெனக் கொள்க. ஆகவே, (கருங்கொடைக்காளான் நிறை பதினைந்து) என ஏற்பட்டது. இதை முன் கூறிவந்த இலக்ஷணங்களைக் கொண்டு பரீக்ஷித்தும், அனுபவசாலிகளைக் கேட்டும் எடுத்துக் கொள்ளவேண்டியது. 65

விபரம்

கருங்கொடைக் காளான் - 15

இதுவுமது

சாற்றுகிறேன் மாசைவித்தை முறைகடம்மிற்
றமணியத்தின் முளையன்றித் தங்க மாகா
ஏற்றமுட னிம்முறையில் முளையு மில்லை
யியற்றுகிறேன் வேதையினி யிங்கு விண்ட
மாற்றரிய மருந்ததுவு முளைவு மாச்சு
மவுலாதே யிக்கருவை மாணி டார்க்குப்
போற்றியேமுன் முயலுகின்ற முறை கடம்மிற்
புரியாதே யிக்கருவைப் பிழையு மாமே.

இதில் முன்னுரைத்த மருந்தின் விசேஷத்தைச் சொல்கின்றார்.

(இ - ள்.) மாணாக்கனே! ஒரு காரியத்தைச் சொல்வேன் கேட்பாயாக. இரசவாத வித்தைகளிலெல்லாம் தங்கமாகிய கரு (தாய்) சேராமல் தங்கம் உண்டாகமாட்டாது. மிகவும் உயர்ந்ததாகிய இந்த முறையிலோ அவ்விதமான தாய் சேர்க்கவேண்டியதே யில்லை. மேற்கூறிய கருங்கொடைக் காளானே இதற்குத் தங்கம்போன்ற தாய்ச் சரக்காகும், இந்தக்கருவை எவர்க்குஞ்சொல்லாதே. இந்தக்கருவை இம்முறைக்கு மட்டும் சேர்ப்பதன்றி மற்ற முறைகளுக்குச் சேர்க்காதே. அப்படிச் சேர்ப்பாயானால் எல்லாம் பிசகாய் முடியும். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: இரசவாத முறைகளுக்குத் தங்கம் சேர்க்கவேண்டியது அவசியமாயினும் இம்முறைக்குச் சேர்க்கவேண்டிய அவசியமில்லை. இந்தக் கருங்கொடைக் காளான் ஒன்றைச் சேர்ப்பதனாலேயே தாய் சேர்ப்பதனால் எவ்வளவு நன்மையுண்டாகுமோ அதற்கு மேலான நன்மையுண்டாகும். மற்ற முறைகளுக்குத் தங்கம் தாயாயிருப்பதுபோல், இம்முறைக்கு இந்தக் கருங்கொடைக்காளான் தாயாம். இங்கு வாதவித்தையை முக்கியமாகக்

கருதிச் சொல்லியிருப்பதால் இம்முறையும் வாத வித்தைக்காம் என்பது புலப்படுகின்றது. இதை மற்ற முறைகளுக்குச் சேர்த்தல் கூடாதென்புதை விளக்கற்பொருட்டே "புரியாதே யிக்கருவைப் பிழையுமாமே" என்றார். 66

இதுவுமது

பிழையேது வேதையினிச் செப்பக் கேளு
பிதற்றாதே வீணருக்குப் பீடதாக
அழையாக வயத்தொட்டி தனிலே நீயு
மடைவுடனே நிறையெடுப்பா யளக்கரொன்று
கழையாக மலையிலுற்ற கல்நார் தன்னின்
கணக்குடனே நிறையெடுப்பாய் கதிரோனாமே
அழையாக வேதையினி யறைவேன் கேண்மோ
வாதியுரை சவுமியத்தி னருமை தன்னை.

இதில் இரண்டு சரக்குகளும் நிறையுங் கூறுகின்றார்.

(இ - ள்.) இந்த முறையினால் யாதொரு பிழையுமில்லை. இனிமேல் நடக்க வேண்டிய வேதைகளைச் செல்வேன் கேட்பாயாக. இதை அறிவில்லாதாராகிய வீணர்களுக்குச் சொல்லாதே. பெருமையுடனே அயத்தொட்டியில் அளக்கர் வகையில் ஒன்றென்ற நிறைசேரும்படி எடுத்துக்கொள்வாய்; மேலும் மூங்கில்கள் வளரும்படியான அழகையுடைய மலையிற்பொருந்தி யிருக்கின்ற கல்நாரில் கணக்காக கதிரோன் என்று சொல்லப்பட்ட நிறை எடுத்துக்கொள்வாய். ஆதிகடவுளால் சொல்லப்பட்ட இலக்கசௌமிய சாகரத்திற் பொருந்திய பொன்னாக்கு மார்க்கங்களை யெல்லாம் இனிப் புகல்வேன் கேட்கக்கடவாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: அளக்கர் - சமுத்திரம். இதன் வகை (ஏழு.) இதனால் அயத்தொட்டியின் நிறை ஏழெனக்கொள்க. கதிரோன் என்ற நிறை. கதிரவர்கள் (பன்னிருபேர்) ராதலால் பனிரெண்டெனக் கொள்க. இதனால் கல்நாரின் நிறை பனிரெண்டெனவானது. ஆகவே. அயத்தொட்டி நிறை ஏழு என்றும், கல்நாரின் நிறை பனிரண்டென்றும் ஏற்பட்டது. இந்தப்படியே எடுத்துக்கொள்க. 67

விபரம்

அயத்தொட்டி - 7
கல் நார் - 12

கொச்சகக் கலிப்பா

படையறுதா னைதனிலே பதுங்கியேநின் றநிமலர்
கடையுக முடிவுதனிற் கதரிடுங் கரியனையார்
நடையுறு கழலின்மிசை நன்குறவேதொங்குகின்றோன்
அடைவுடன் முதலசையி லடங்கிய பெயரதுவே. 68

கலி விருத்தம்.

பெய ராகிய பீடு மருந்தது
வய மாகிய வண்டன் மகாசண்டன்
நய மாகவே நாட்டிடு வாய் நிறை
பய மாகப் பகருவன் பாதியே.

இவ்விரண்டு பாடல்களாலும் ஓர் சரக்கும் நிறையுங் கூறுகின்றார். இவ்விபரம் நாம் கேட்டிருப்பினும் நெடு நாளாகி விட்டபடியால் சிறிது மறதியாயிருக்கிறது. ஆதலால் இப்பாடல்களுக்கு விளக்கம் இங்கெழுதக் கூடவில்லை. அவசியமுள்ள கனவான்கள் நாம் முன்னொரு இடத்திற் குறிப்பிட்டிருக்கும் சுவாமிகளிடம் கேட்டுத் தெரிந்து கொள்க. 69

வேறு சந்த விருத்தம்.

தலமாந்தரே நலமாகவே தங்குமொரு மருந்து
பிலமாகவே தகர்தம்பியும் பிளமின்னடு ககரும்
மலமென்றவன் முன்னோனுரை வயமானதிற் கடையே
நலமாகிய மருந்தானதில் நவில்வேனிறை யேகம்.

இதில் ஓர் சரக்கு நிறையுங் கூறுகின்றார்.

(இ - ள்.) பூலோகத்திலுள்ள மனிதர்களே! நன்மையாகப் பொருந்துகின்ற ஓர் மருந்தைச் சொல்வேன் கேட்பீர்களாக. பலத்தோடு தகரத்துக்குத் தம்பியாகிய வெழுத்தையும் பிளம் என்ற பதத்தின் நடுவெழுத்தையும், ககரமென்ற எழுத்தையும், மலம் என்ற பதத்தின் முதலிலிருக்கப்பட்ட எழுத்தானது தங்கும் படியான வர்க்கத்திற்குக்

கடையெழுத்தையும் எடுத்துச் சேர்த்தால் அம்மருந்தின் பெயராகும். இதில் எடுக்கவேண்டியது ஏகமென்ற நிறையாகும். எ - று.

சூக்ஷூம விளக்கம்: தகரத்துக்குத்தம்பியாகிய எழுத்தாவது (தா.) பிளம் என்ற பதத்தின் நடுவெழுத்தாவது (ள.) ககரமென்ற எழுத்தாவது (க.) மலம், என்ற பதத்தின் முதலிலிருக்கப்பட்ட எழுத்து, ம. இதன் வர்க்கத்தின் கடையெழுத்தாவது (ம்) ஆக நான்கெழுத்துக்களையும் ஒன்றாகச்சேர்க்க (தாளகம்) என்றானது. ஏகம், என்ற நிறையாவது (ஒன்று) ஆகவே, (தாளகம் நிறை ஒன்று) என ஏற்பட்டது. இந்தப்படி ஆராய்ந்தெடுத்துக் கொள்க. இந்தத்தாளகத்தை இந்தத் தனிமுறைச் செந்தூரத்தில் சேர்ப்பதினால் மிகுந்த நலமுண்டாகு மென்பதை யுணர்த்துதற் பொருட்டே இப்பாட்டின் முதலடியில் "நலமாகவே தங்குமொரு மருந்து" என்றார். 70

விபரம்

தாளகம் - 1

கொச்சகக் கலிப்பா

மனுவுயிர் ககனேக வதைத்திட வலுவுடையோன்
முனமேலும் பேரதுவாமுயலுநகர் வகரிலென்று
இனமொரு சகர்கடையு மியற்றுவேன் சகர்தம்பி
கனமுடன் ரகரிலொன்று மகர்கடை மருந்தாமே.

இதில் ஓர் சரக்குரைக்கின்றார்

(இ - ள்.) நான்கீழே சொல்லப்போகும் சரக்கானது பூமியிலுள்ள உயிர்கள் ஆகாயத்திற் செல்லும்படி செய்யும்படியான திறத்தை யுடையது. இதன் பெயரைச் சொல்வேன் கேட்பீர்களாக. நகர் என்ற எழுத்தும், வகரமென்ற எழுத்தும், சகரத்தின் கடையெழுத்தும், அந்தச் சகரத்துக்குத் தம்பியாகிய வெழுத்தும், ரகரமென்ற எழுத்தும், மகரத்தின் கடையெழுத்தும் ஒன்றாகச் சேர்ந்தால் அம்மருந்தின் பெயர் விளங்கும். எ - று.

சூக்ஷூம விளக்கம்: நகர் என்ற எழுத்தாவது (ந.) வகரமென்ற எழுத்தாவது (வ.) சகரத்தின் கடையெழுத்தாவது (ச்.) அந்தச்சகரத்துக்குத் தம்பியாகிய வெழுத்தாவது (சா.) ரகரமென்ற எழுத்தாவது (ர) மகரத்தின்கடையெழுத்தாவது (ம்.) ஆக இந்த ஆறெழுத்துக்களும் ஒன்றாகச் சேர (நவச்சாரம்.) என்றானது. இதுவே

இங்குக் குறித்தமருந்தாம். இதற்குப் பாட்டில் நிறை விபரம் ஒன்றுஞ் சொல்லப்படவில்லையாயினும் அனுபவசாலிகள் சொற்படி பலம் ஒன்றாம். 71

விபரம்.

நவச்சாரம் - 1

திருப்புகழ்ச்சந்த விருத்தம்

வைக்கவும் பாகவன் கடகட தொடுதொடு
வைத்தெரி திமிதிமி படபட திடுதிடு
வட்டிடி யெனதொனி சடசட மடமட
மத்திகை யுடனொளி பளபள தளதள - வெனசோதி
மைக்கரு மானையும் வடிநடை துரகத
மற்று மனுத்திரள் வயமுறு கயமுனி
வற்புறு கந்தரமாகநீள் காகமும்
வட்டுறு மூர்த்தியுந் தொட்டிடு மேபுய - லெனநீளும்
சிக்கியமாந்தர்கள் தசைதெரி பொடிபட
வுக்கிர மாகவுயி ருடல்விட கடுவென
சித்திரையின்றலை கொட்டிட மூளையுந்
திமிதிமி திமிதிமி சொறுசொறு சோவென விறல்செய்வேன்
பைக்கடும் பாந்தளின் முடிபடபடவென
மிக்கவும் நெறுநெறு பொடுபொடு வெனுமெர்ப்
பட்டிடில் வெடியதி னிறையது திரியரை
பக்குவமுடனெடு பாரியினாரியா - மறிவாயே

இதிலொரு சரக்கும் நிறையுங் கூறுகின்றார்.

(இ - ள்.) கீழே சொல்லப்படும் சரக்கின்சம்பந்த மாயுண்டாகும் மருந்தானது நெருப்பை வைத்தவுடனே அக்கினிபற்றி அந்த அக்கினியானது கடகட தொடு தொடு திமிதிமி படபட திடுதிடு வென்னுஞ் சப்தத்தோடும், கூறிய இடியைப்போல் சடசட மடமட வென்னுந் தொனியோடும், விளக்குத்தண்டிலிருந்து கிளம்பிப் பிரகாசிக்கப்பட்ட விளக்கைப்போன்ற பளபளதளதள வென்னுஞ் சோதியோடும் எழுந்து மையைப்போல் கறுத்திருப்பனவாகிய காட்டுப் பசுக்களையும், கதித்த நடையையுடைய குதிரைகளையும்,

மற்றுமுண்டான மனுக் கூட்டங்களையும், வெற்றிபெற்ற யானைக்கன்றுகளையும், வலிமைபொருந்தியமலைக் குகைகளையும், நீண்டதேகத்தையுடைய காகக்கூட்டங்களையும், வட்டாகாரமாகத் தேகத்தைத் துளைத்து கொன்று மேகத்தைப்போல் ஆகாயத்திற் கிளம்பிச் சஞ்சரித்துக் கொண்டிருக்கும், தன்வேகத்திற் சிக்கியமனிதர்களது மாமிசமானது தெரிப்புற்றுப் பொடிபடவும், உக்கிரமுள்ள மிகவும் பெரிய உயிர்கள்யாவும் விடமுண்டனபோல், உடல்களை விட்டு நீங்கவும், சித்திரம்போன்ற அழகிய தலைகள் அறுபட்டு மூளைகள் சிதறிடவும் திமிதிமி திமிதிமியென்றும், சொறுசொறு சோவென்றும் எழும்பிச்சாடி மன்னர்களுக்கு வெற்றியைத்தரத்தக்கது. இன்னும் இதற்கு முன் பையையுடைய வேகமான பாம்பென்னும் ஆதிசேடன் எதிர்ப்பட்டாலும் அதன்முடி படபடவென்றும், நெறுநெறுவென்றும் பொடுபொடு வென்றும், நொறுங்குண்டுபோகும். இன்னும் இது பாரியென்னும் வள்ளலைப்போன்ற அரசர்களுக்குப் படைத்துணையாயிருக்கத் தக்கதாம். தான் சம்பந்தித்த மருந்தால் இவ்விதச்செய்கைகளை நடத்துவிக்கும் சரக்கினது பெயரானது வெடியாகும். இதில் எடுக்கவேண்டியநிறை திரியிற் பாதியாம். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இங்குச் சொல்லிவந்த குறிப்புக்களாலும், ஈற்றில் வெடியென்று சொன்னதனாலும் இச்சரக்கு (வெடியுப்பு) என ஏற்படுகிறது. வெடிமருந்து முதலியன இந்த வெடியுப்பு சம்பந்தமாக உண்டாகி மேற்கண்ட பெருஞ்செயல்களைச் செய்வதை உத்தேசித்தே இவ்வாறு வருணித்தார். இது முதற்காண்டத்தில் கள்ளிக்கட்டையை வருணித்ததனாலும் விளங்கும். இதில் எடுக்கவேண்டிய நிறை திரியிற் பாதியெனவே (ஒன்றரை) யென ஏற்பட்டது. ஆகவே (வெடியுப்பில் நிறை ஒன்றரை) யெடுத்துக் கொள்ளவேண்டும். இங்குச்சொல்லியது வெடியுப்பெனத் தெள்ளிதில் விளங்கினும் அனுபவசாலிகளிடம் கேட்டுக்கொள்வது நலம். 72

விபரம்

வெடியுப்பு - 1 1/2

இதன் நிறை மூன்றரை யெனவும் தீர்மானிக்க பாட்டில் இடமிருக்கிறது. ஆனதால் அனுபவத்துக் கொத்தவாறு கூட்டிக்கொள்க.

வேறு சந்தவிருத்தம்.

புவியினி லெங்குந் தங்குந் துங்கம்
புட்டெரி யென்னும் புரட்டும் வாடையன்
புணரியி லுங்கும் மங்குந் துங்கும்
பொற்றயி லென்றும் புரிந்த பூரண - வனல்தோயும்
ரவிமதி யுந்தும் பந்துஞ் சிந்தும்
நக்ஷத்திரமுஞ் சிறந் தெரிந்தென
நனிகலை சிந்தும் பந்துங் கெந்தும்
நாறிய வாடையு மூரிய மெய்யொளி - வருமான
கவினிருள் பொங்குங் கங்குஞ் சங்குங்
கட்கடையன்றித் தெரிந்திடாதென
ககமுக டெங்கு மங்குந் துங்குங்
காலை யெனத்தெரி மாலையினேரமே - யெனவாவன்
திவளொளி பொங்குஞ் செங்கும் பங்கும்
தித்திரி யென்னுஞ் சிவந்த மேனியன்
செகமதிற் றங்கு மொங்கு முங்குஞ்
சீரிட மெங்குஞ் செழித்தி யாகவே - விளைவானோன்

இதில் ஒருசரக்கை வருணிக்கின்றார்.

(இ - ள்.) கீழ்ச் சொல்லப்போகும் சரக்கானது பூலோகத்தினிடமாக எவ்விடத்தும் தங்கியிருக்கும். உயர்ச்சியாக எண்ணி இதைக்கையில் வைத்தால் அப்படி வைத்தவர்கள் அருவருப்புக்கொண்டு இதைப்பிட்டு எறிந்துவிடுங்கள் என்று சொல்லும்படி மனத்தைக் குழப்பும் கெட்டவாடையையுடையது; சமுத்திரத்தினடு விடங்களாகிய தீவாந்தரங்களிலும் மேன்மையோடு தங்கத்தக்கது, மனிதர்களுக்கு வாழிடமாகிய தேகத்தைப் பொன்மயமாக எப்பொழுதும் செய்யத்தக்க நிறைந்த தன்மையும், உஷ்ண குணமுடையது; உயர்ச்சியைச்செய்கின்ற சூரியனும், சந்திரனும், கிரணத்தை வீசுகின்ற அக்கினியும், நக்ஷத்திர கூட்டங்களும் ஒன்று சேர்ந்து சிறப்புற்றெரிந்தாற்போல ஒப்பற்ற கிரணங்களை வீசுந்தன்மையுடையது. திரட்சியும், தெளிவும் நாறியவாசனையும், பெரியதேகவொளியும் விளங்கத்தக்கது வீரர்களுடைய படைக்கலங்கள் நெருங்கி கண்தெரியாமல் ஆகாயமெங்கும் கழுகு பருந்துகள் மொய்க்கும்படியாக நிகழும் போர்க்களத்தையும், அந்திக்காலத்தையும் போன்ற நிறத்தினை யுடையது; பூவுலகில் எங்கும் செழிப்புடன் விளையத்தக்கது. எ - று.

சூக்ஷும விளக்கம்: இங்குவருணித்ததனால் இச்சரக்கு சிவந்த நிறமுடையதும், பொன்போன்றதுமாயிருக்குமென்பதேற்பட்டது. இதன்பெயர் நிறைமுதலியன அடுத்தபாட்டில் துலக்குவாம். 73

எண்சீர்விருத்தம்.

கேளப்பா விவண் விண்ட மருந்து தன்னைக்
கெடியாக முன்றளையின் மோனை யோடு
நாளப்பா ந்தவொடு ககரோ டங்கு
நாட்டிடுவாய் மகர்கடையு நாம மாமே
தாளப்பா சாதிவனஞ் சுடுவன் போலே
தடியாமற் கெந்தியுட வாசந் தானே
வாளப்பா நிறையெடுப்பாய் மங்கை கொங்கை
வாதியென்ற மாந்தர்கட்கு வரிசை யாக.

இதில் முன்சரக்கின் பெயரும் நிறையுங் கூறுகின்றார்.

(இ - ள்.) அப்பனே! இவ்விடத்திற்சொன்ன மருந்தின் பெயர் முதலிய விபரத்தைச் சொல்வேன் கேட்பாயாக. கீர்த்தியோடு இப்பாட்டின் முதலடியின் மோனை எழுத்தோடு ந்த என்னும் பதத்தையும், ககரமென்ற எழுத்தையும், மகரத்தின் கடையெழுத்தையும் எடுத்துச் சேர்ப்பாய். அவ்வாறு சேர்ப்பாயானால் மேற்கூறிய மருந்தின் பெயராகும். இந்தச் சாதிமருந்தின் நிறமானது சூரியன்போலே யிருக்கும். இதனுடையவாசனையோ சாதாரண கெந்தகத்தைப் போன்றிருக்கும். வாதிகளுக்கு ஒழுங்குண்டாகும்படியாக இதில் ஸ்திரீகளினது கொங்கையென்ற நிறை எடுத்துக்கொள்ளக் கடவாய்

சூக்ஷும விளக்கம்: இப்பாட்டின் முதலடியின் மோனையெழுத்தாவது (கெ.) ந்த என்னும்பதமாவது (ந்த) ககரமென்ற எழுத்தாவது (க) மகரத்தின் கடையெழுத்தாவது (ம்) ஆக எல்லாவற்றையும் ஒன்றாகச்சேர்க்க (கெந்தகம்) என்றானது. சாதிவனஞ் சுடுவன் போலே என்றதனாலும் முந்தினபாட்டிற் சொன்ன இலட்சணங்களாலும் இதனைச் (சிவப்புக் கெந்தகம்.) எனக் கொள்ளவேண்டியது. ஸ்திரீகளின் கொங்கை இரண்டாதலால் நிறை இரண்டெனக் கொள்க. ஆகவே (சிவப்புக் கெந்தகம் நிறை இரண்டு.) எடுக்க வேண்டுமென ஏற்பட்டது. இது இரசவாத வித்தைக்குப் பெரிதும் உபயோகப்படுமென்பதை விளக்கற் பொருட்டே

இப்பாட்டின் ஈற்றில் "வாதியென்ற மாந்தர்கட்கு வரிசையாக" என்றுரைத்தார். இது சிவப்பு நிறத்தால் பேதமாயினும் குணத்திலும், வாசனையிலும் சாதாரண கெந்தகத்தைப் போலவே யிருக்கும். இன்னும் இது முந்தின பாட்டிலுரைத்த இலட்சணங்களால் பொன் போலும் பளபளப்புள்ளதா யிருக்குமென்பதும் புலப்படுகிறது. 74

விபரம்

சிவப்புக் கெந்தகம் - 2

திருப்புகழ்ச் சந்த விருத்தம்

மோரிட சத்தித் திடங்க மாகவே
மோதை புரண்டங் கருந்தி யேவிழு
மூருட னேமனம் புரண்ட வாடையன் - கனவேகந்
தாரிடல் பச்சை தரித்ததின் மீதினிற்
சார்புற முத்தங் கரிந்த தீவினி
சாரிகை யுற்றங் கிருந்தி டும்படி - யறிவாயே
பாரினி லுற்றவ ரருந்த மாகவே
பருகிட வேவலஞ் சுரந்த சுத்தியாம்
பான்மை யுடன்மிகு கோன்மை யேசெயும் - பாஷாணம்
வீரிய மாமெய்யில் வியாதி தன்னையே
வீறுடனேயற நேர்த்தி யானவன்
விள்ளுவன் பேரினி மாணவனேயறிந் - திடுவாயே.

இதில் ஓர் சரக்கை வருணிக்கின்றார்.

(இ - ள்.) கீழ்ச் சொல்லப்போகும் சரக்கானது தன்னை முகர்ந்த மாத்திரத்தில் வாந்தியையுண்டாக்கி வயிற்றில் உளியால் துளைப்பதுபோல் துளைத்துப்புரட்டி ஊருதலுடனே அவ்வயிற்றி லுள்ள அசுத்த சத்துக்களை நாசப்படுத்தி வெளியாக்கும். மனத்தைக் குழப்பும் கெட்ட நாற்றத்தையுடையது. மிகவும் வேகமானது, நீண்டதரையில் குளிர்ச்சி பொருந்திய தழைகளை ஒடித்துப் பரப்பி அதன்மேற் படுத்தாலும் படுப்பவர்கள் அணிந்திருக்கும் முத்தா பரணங்கள் கரிந்துபோகும்படியான மகா உஷ்ணம் பொருந்திய தீவிடங்களில் பொருந்தி வளர்ந்திருக்கும்படியான தன்மையை யுடையது. மேலுந் தெரிந்துகொள்வாய், இப்பூமியிலுதித்தவர்கள்

விருப்பத்தோடு இதனை உட்கொள்ள, மலமானது அதிகரித்து வெளியாகி வயிறு சுத்தமாகும், இவ்வித தன்மையோடு மேலும் சிறந்த குணங்களைச்செய்யும், இது பாஷாணத்தின் தன்மையை உடையது. வீரம் பொருந்திய மானுடரது தேகத்தில் உள்ள வியாதிகளெல்லாம் வேரற்றுப்போகத் தகுதியான ஹேதுவுடையது; மாணாக்கனே! இனி இதன் பெயரை விரித்துரைப்பேன் கேட்பாயாக. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை. 75

வேறு செய்யுள்

வகர் தம்பியும் ளாவண்ணனும் வடிவாமகர் கடையே
விகவாகிய வித்தானதில் விள்வேனிறை கேண்மோ
தொகைசேர்த்திடு தொகையொன்றரை சொல்கின்ற மருந்தின்
செகமாந்தரே யினிவேதைகள் தெளிவாகவே மொழிவேன்.

இதில் மேற்சொல்லிய சரக்கின் பெயரும் நிறையுங் கூறுகின்றார்.

(இ - ள்.) மேற்சொல்லிய சரக்கானது வகரத்துக்குத் தம்பியாகிய வோரெழுத்தையும், ளா, என்ற எழுத்துக்குத் தமையனாகிய வோரெழுத்தையும், அழகு பொருந்திய மகரத்தின் கடையெழுத்தையும் எடுத்துச் சேர்க்க விளங்கும். அத்தகைய சரக்கின் விதையில் எடுக்கவேண்டிய நிறையைச் சொல்வேன் கேட்பீர்களாக. இதன் நிறை கணக்கிடும்படியாகிய ஒன்றரையென்ற அளவாகும். பூலோகத்திலுள்ள மனிதர்களே! இன்னும் அதனாலுண்டாகப்பட்ட வேதைகளையும் விபரமாகச சொல்வேன் கேட்பீர்களாக. எ - று.

சூக்ஷுமம விளக்கம்; வகரத்துக்குத் தம்பியாகிய வோரெழுத்தாவது (வா.) ளா, என்ற எழுத்துக்குத்த தமையனாகிய எழுத்தாவது (ள.) மகரத்தின் கடையெழுத்தாவது (ம்.) ஆக மூன்றெழுத்தையும் சேர்க்க (வாளம்.) என்றானது. "வித்தானதில்" என்று சொல்லியிருப்பதினால் இந்த நேர்வாளத்தின் விதையை யெடுத்துக்கொள்ளவேண்டியது. ஆகவே, நேர்வாளவித்தில் ஒன்றரை நிறை எடுத்துக்கொள்ள வேண்டுமென ஏற்பட்டது. 76

விபரம்

நேர்வாளவித்து - 1 1/2

அறுசீர் விருத்தம்.

இரவை யகற்றப் பதங்கனதை
யேகு வெளியென் றியம்புவனாங்
குரவை யிடுவன் மலமதிலே
கோதி யெடுநீ நிறையொன்று
இரையு மிவணி லுறைமருந்தை
யெடுக்கும் வகைகண் டறிகாளை
கரைவை யுடனே விராகனெனக்
கணித முடனே கருதியெடு.

இதில் ஓர் சரக்கும் நிறையும் எல்லாச் சரக்குகளின் நிறை விபரமுங் கூறுகின்றார்.

(இ - ள்.) இராத்திரியை நீக்கும் பொருட்டாகச் சூரியனைப்பார்த்து வெளியேறிவரக் கடவாய் என்று கூவிச் சொல்வதாகிய சத்தத்தை யிடும்படியாகிய ஓர் ஜெந்துவின் மலத்தில் ஒன்று என்ற நிறை கையினால் கோதி யெடுத்துக்கொள்ளக் கடவாய். இளம் பருவத்தையுடைய மாணாக்கனே! இம்முறைக்காக இதுவரை சொல்லிவந்த மருந்துகளை நிறைகண்டெடுக்கும் வகையைச் சொல்லுவேன் கண்டுணர்வாய். இங்கு சொல்லிவந்ததெல்லாம் மனக்கசிவுடனே விராகனெடைக் கணக்கென்று கிரமத்தோடு எண்ணியெடுப்பாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்; இரவை நீக்கும்பொருட்டாகச் சூரியனைக் கூவியழைப்பது (கோழி.) இவ்வாறு செய்வது சேவலேயாயினும் கோழிகூவப் பொழுது விடிந்தது என்று சொல்லுதல் உலகவழக்காதலின் இங்குக் கோழியென்றே கொள்ளப்பட்டது. இந்தக் (கோழிமலத்தில் நிறை ஒன்று.) எடுத்துக் கொள்ள வேண்டும். விராகனெடைக் கணிதமுடனே கருதியெடு என்று இப்பாட்டிற் கூறினமையால் இம்முறைக்காகச் சொன்ன சரக்கெல்லாம் விராகனெடைக் கணக்கென ஏற்பட்டது. ஆதலின் அக்கணக்கின் படியே எடுத்துக்கொள்ள வேண்டும். 77

நொண்டிச்சிந்து.

நவில் கின்ற மருந்தனைத்துங் கல்வமதில்
நாட்டிடுவாய் நன்குறவே நனிதிகழ

சவுரிய முறுவண்ட ருந்துகின்ற
தருவினி லுற்றிருந்த வமுததிலே
கவினுற விடுத்தரைப்பாய் சாமமைந்து
கணக்குட னருந்திட மனுக்குழலே
நவமுட னினிவேதை இங்கு
நவலுவேன் கண்டறிவாய் நன்குறவே.

இதில் அரைப்பு விபரங் கூறுகின்றார்.

(இ - ள்.) மாணாக்கனே! இங்குச்சொல்லுகின்ற எல்லா மருந்தையும் நலமானது மிகவும் விளங்கும்படியாகக் கல்வத்திற் போடக்கடவாய். அவ்வாறு போட்டபின் அழகு பொருந்திய வண்டானது நெருங்கித் தேனைக்குடிக்கும்படி காட்டிடத்தி லமைந்த ஓர் தருவிற் பொருந்திய பாலில் வேண்டிய அளவு அம்மருந்துகளோடு விட்டு ஐந்து சாமநேரம் அரைக்கக்கடவாய். இனி, மானிடவர்க்கத்தார் கிரமப்படி கண்டுணருமாறு இதன் வேதையை இங்குச் சொல்வேன் நன்மையாகப் பார்த்தறியக்கடவாய். எ - று.

சூக்ஷம விளக்கம்; வண்டருந்துகின்ற தருவிலுற்றிருந்த அமுதமாவது: குருவண்டு தங்கியிருந்து தேன் குடிக்கும்படியாகிய மடற்கள்ளி மரப்பாலாம். இதை முதற்காண்டத்தில் அந்த செந்தூர முறையிற் சொல்லியிருப்பதனா லுணர்க. இந்த மடற்கள்ளி மரப்பாலையே இங்குச் சொல்லிய மருந்துகளுடன் விட்டு ஐந்து சாமமரைத்தெடுக்க வேண்டும். குரு வண்டானது பொன்னிறமோடு கூடியதாகவும், மிக்க அழகுபொருந்தியதாகவும், அந்த செந்தூர முறையிற் சேர்ந்து பெருங்காரியங்களைச் சாதித்தற் கமைந்ததாகவும் இருப்பதை விளக்குதற் பொருட்டே இப்பாட்டின் இரண்டாமடியில் "சவுரிய முறுவண்டு" என்றார். 78

திருப்புகழ்ச்சந்த விருத்தம்.

வாய்ந்த வாச மிகப்பெரி தாமதில்
தோய்ந்து நின்று தொடுத்தரு வாமிலை
பாய்ந்த பச்சை பதுங்கிய தாமெழில் - கொடியாக
பூந்து ளிர்வன மூர்ந்தவ னமது
சேர்ந்து வாடையு மீய்ந்து வீசுவன்
பூந்த மாமலர் மேன்மை பெற்றவன் - மிலர்தானும்

கூந்தல் வண்டினங் கோதைய ரச்சிர
மீந்தமாக விரிந்திடு மேன்மையா
மாந்தர் மல்லிகை யென்று மவுண்டிடு - மன்னாமன்
ஈந்த மாவிலை யின்வருஞ் சாற்றினி
லாய்ந்த மாக வரைத்திடு சாமமு
மூய்ந்த மாக முயன்றிடு வேன்றிரி - யறிவாயே.

இதில் மற்றொரு அரைப்புச் சொல்லுகின்றார்.

(இ - ள்.) மாணாக்கனே! கீழே அரைப்புக்காகச் சொல்லப்படும் பச்சிலையானது பொருத்தமான மிகுந்த வாசனையுடையதாம். அதிற்சேர்ந்து நின்று பின்னிய அருமையுடைய இலையானது பச்சை நிறமாயிருக்கும். அச்செடியானது தரையிற்படிந்து கிடக்கும். அது அழகுபொருந்திய கொடிரூபமாகவு மிருக்கும். அழகிய தளிரினுடைய நிறமானது அதனது இலைபெற்ற நிறத்தைப் போன்றிருக்கும். நல்ல மணத்தோடு பொருந்தித் தன்னையணிந்தவர்க்கு இனிமையைக் கொடுத்து பரிமளிக்கும்படியாக நெருங்கிய சிறந்த மலர்களினால் மிக்கமேன்மை பெற்றது. அதன் மலரானது பாவையரது வண்டினங்கள் பொருந்திய சிரத்தின் மீதுள்ள கூந்தலில் சேர்ந்து அமர்ந்திருக்கும் படியான மேன்மை பெற்றது. அதிக மிருதுத்தன்மையும் வாய்ந்தது. மானுடர்கள் மல்லிகை யென்றும் பெயரினையுடையது. இந்தச் சிறப்புப் பொருந்திய மல்லிகையில் வரப்பட்டசாற்றில் ஆராய்ந்து அழகு பொருந்தவும், மருந்தின் வலிமையானது நிலைபெறவும் மூன்று சாமநேரம் முன் மருந்தை அரைக்கக்கடவாய். மேல் நடக்கவேண்டிய வற்றையும் சொல்வேன் கண்டறிவாய். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: மேற் சொல்லி வந்த இலட்சணங்களை யுடையது மல்லிகைச்செடி. இது மல்லிகை யென்று வெளிப் படையாகப் பெயர் சொன்னதனாலும் விளங்கும். இந்த மல்லிகை யிலைச் சாற்றில் முன் அரைத்து வைத்திருக்கு மருந்தை மூன்று சாமம் அரைத்துக் கொள்ளவேண்டும். 79

வேறுசந்தச் செய்யுள்

கல்வமதின் மீதுரைந்த கனகுரு வாமருந்தைக்
கையதனால் வழிப்பாய் கடுவன்றி
மல்வளர வில்லைதட்டி வட்டமுட னோடுரைத்து
மத்திதனில் வைத்துமூடு வடிவாக

வெல்லணையைக் கல்வமிட்டு வெண்கருவி னாலரைத்து
வொன்றியுடன் றோய்த்துச் சீலையிடுவா யேழ்
பல்லரவின் பதிதன்னிற் பண்புபிரு திவினாலே
பத்தியுடன் பூசுவகை விரல் மூன்றே.

இதில் மேற்படி மருந்தைக் கவசஞ்செய்யும் விதங் கூறுகின்றார்.

(இ - ள்.) முன் சொன்னபடி மல்லிகையிலைச் சாற்றிலரைத்துக் கல்வத்தில் தங்கியிருந்த கனம்பொருந்திய குருவான மருந்தைக் கடுகளவும் கல்வத்தில் தங்காமல் வழித்தெடுத்துக் கொள்ளக்கடவாய். அப்படியெடுத்தவுடன் அதை வளப்பம் அதிகரிக்கும் படியாக வில்லை செய்து இரண்டு ஓட்டை வட்டமாக உடைத்துத் தேய்த்து ஒரு ஓட்டின் மத்தியில் வைத்து மற்றொரு ஓட்டால் அழகாக மூடுவாய். அதன்மேல் சுண்ணாம்பைக் கல்வத்திலிட்டு அண்ட வெண்கரு விட்டரைத்து அதில் வெற்றி பொருந்தும்படியாகச் சீலையைத் தோய்த்து ஏழு சீலையிடக்கடவாய். அவ்வாறிட்ட பின் அந்தக்கவசத்தின் மேலே நச்சுப்பற்களை யுடைய அரவமானது தங்குமிடத்திலேயுள்ள மண்ணைக்குழைத்து மிகுந்த பத்தியோடு மூன்று விரற்கனம் பூசக்கடவாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: வெல்லணை-சுண்ணாம்பு, அரவந்தங்குமிடம் புற்றாதலால் அந்தப்புற்றுமண்ணையே எடுத்துப் பூசவேண்டும். 80

வண்ணச்சந்த விருத்தம்

மூன்றென மாட்டிய மாமருந்தை
மொயம்புட னேபுடம் போடுவாய்குறி
முயலுகி றேன்முனம் மேக மாகவே - யறிகாளை
கீன்றியே மத்தியி லிட்டு நீயதைக்
கீன்றியே தீயெரி நீற்ற மர்ந்தபின்
கீர்த்தியுடனெடு நேர்த்தியாகவே - கையிற்றானே
காண்டிய மேற்கழி பூச லுற்றிடு
கவசமே பிரித்திடு கங்கை யாயது
கற்புட னேறிற முப்பு வின்மனம் - போறகாணு
வேண்டுவ வேதைகள் வேறு விள்ளுவன்
வில்லை தனைக்கல்வ மீதில் விட்டுநீ
வெற்றியு டன்குருச் சாற்றினாலரை - தினமொன்றே

இதில் புடம்போட்டெடுத்தரைக்கும் விதம் சொல்கின்றார்.

(இ - ள்.) முன்பாட்டிற் சொல்லியபடி மூன்று விரற்கனம் கவசம்செய்தமருந்தைப் பலத்தோடு புடம் போடக் கடவாய். அப்புடத்தின் குறிப்பை யெடுத்துரைப்பேன் காளைபோன்ற மாணவனே! கண்டறி. மேகம்போல் புடத்தைச் சித்தப்படுத்தி அதைச் சிறிதகற்றி நடுமத்தியில் முன் கவசத்தைவைத்து மூடி நெருப்பையிட்டு அதை யெரிக்கக்கடவாய். அந்தப் புடமானது தீப்பற்றி யெறிந்து நீற்றுப்போன பிற்பாடு கீர்த்தியோடும் அழகோடும் அதைப்பிரித்து உள்ளே யிருக்கப்பட்ட கவசத்தைக் கையிலெடுத்துக் கொள்வாய். அதன்பின் அக்கவசத்தின் மேலே யிருக்கப்பட்ட களியினாற் பூசிய கவசத்தைப் பிரிப்பாய். அவ்வாறு செய்தால் உள்ளேயிருந்த மருந்தானது கங்கையைப்போலவும் முப்பூவைப்போலவும் வெள்ளைநிறம் பெற்றதாய் விளங்கும். இனிமேல் இதற்குச் செய்யவேண்டிய வேறொருவேதையுஞ் சொல்வேன் கேள். முன்சொன்னபடி வெள்ளை நிறமாயிருந்த வில்லையாகிய மருந்தைக் கல்வத்திற்போட்டு குருவின் சாற்றினால் ஒருதினம்வரை அரைக்கக்கடவாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இதில் புடத்தின் விபரம் இன்னதெனத் துலக்கப்படவில்லை யெனினும் "மேகமாக" என்றதனால் மேகம் ஏழாயிருத்தல்பற்றி ஏழெருவிற் புடம் தயாரிக்கவேண்டுமென்பது புலப்படுகின்றது. எனினும், தெரிந்தோரிடம் கேட்டுக்கொள்வது நலம் குருவின் சாறாவது (திருநீற்றுப் பச்சிலைச்சாறு) இதற்குக் குரு மூலியென்னும் பெயர். இந்நூலிற் பலவிடங்களினும் வந்திருத்தலால் இங்கு இப்பொருள் கொள்ளப்பட்டது. 81

எண்சீர் விருத்தம்

ஒன்றாக வரைக்கலுற்ற மருந்து தன்னி
லுத்தமனே வேதைவே றுரைக்கக் கேண்மோ
கொண்டிடச் சித்தர்குடி யிலையாயின் சாற்றாற்
குமுறவே யரைத்திடுவாய் தினமே யொன்று
நன்றாக வழித்தெடுத்து வில்லை தட்டி
நன்குறவே யோட்டில்வைத் துட்பொதிந்து
கன்றாக முன்போலே சீலை செய்து
களிபூசி முன்புடத்திற் காட்டு வாயே.

இதில் வேறு அரைப்பும் புடமும் கூறுகின்றார்.

(இ - ள்.) முன் பாட்டிற் கூறியபடி ஒரு சாமமரைத்த மருந்தில் இன்னுமொரு வேதையைச் சொல்வேன். உத்தமம் பொருந்தியவனே கேட்பாயாக. அதை மீண்டும் சந்தோஷத்தோடு சித்தர் குடியிலைச் (கஞ்சாவிலை) சாற்றால் ஒருநாளளவு ஒலியெழும்படியாக அரைத்து நன்மையோடு வழித்தெடுத்து வில்லை செய்து சீர் பெறும்படியாக ஓட்டில் வைத்துப் பொதிந்து முன் கிரமப்படியே சீலைசெய்து களியைப் பூசி முன் போலவே புடம் போடக்கடவாய். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: சித்தர் குடியிலை யென்பது (கஞ்சாவிலை.) இந்தக்கஞ்சாவிலைச் சாற்றினாலேயே ஒரு நாளளவு அரைக்கவேண்டும்.

82

வண்ணச்சந்த விருத்தம்.

காட்டிய நாட்டிய மாம ருந்தைக்
கனலெரி நீற்றபின் னீட்டமாகவே
கவசமே பிரித்ததை நோக்க வெண்களி - வணமாமே
ஈட்ட முடன்வீக் குவாய் நிலத்தினி
லியன மொருவேதையுமி ய்புவேனிது
விடிமு னலத்தடு குண்டு முன்னவ - னிலையாமே
சாட்டியின் சாத்தியின் முள்ளென் றோதுவர்
தனிவருஞ் சாற்றினி லாட்டு வாய்தினஞ்
சாற்றுவ னரையென நேர்த்தியாகவே - செகமீதில்
காட்டுறு வேங்கையின் சாற்றினாலரை
கதியுடன் றினமரை காட்சியாகவுங்
கல்வ மீதுறு மருந்தைக் கையினால்வழி - கடுவன்றி.

இதில் சில அரைப்புகள் கூறுகின்றார்.

(இ - ள்.) மேலே சொல்லியபடி புடத்திற் காட்டிநாட்டிய சிறப்புற்ற மருந்தை மிக்க அக்கினியானது எரிந்து நீற்றுப்போன பிறகு நெருக்கத்தோடு அதன் கவசத்தைப் பிரித்து அம்மருந்தைப்பார்க்க, அது வெள்ளைக் களிபோன்ற நிறத்தினை யுடையதா யிருக்கும். மாணாக்கனே! அதைப் பாதுகாப்புடன் வைத்தடக்கஞ்செய்து கொள்ளக்கடவாய். பூமியில் இதைப்பற்றிய இன்னமொரு வேதையுஞ் சொல்வேன்கேள். இது என்னும் பதத்தின் சேர்ந்த முன்னெழுத்தையும்,

குண்டு என்னும் பதத்தில் முதலெழுத்தை நீக்கிவிட்டு, நின்றதையும் எடுத்துச் சேர்க்க, ஓர் இலையின் பெயராகும். அதை முள்ளுள்ள ஜாதி யென்று உலகத்தவர் சொல்லுவார்கள். இப்பேர்ப்பட்ட செடியின் இலையில் ஒப்பற்று வரும் சாற்றினால் முன்புடம் போட்டெடுத்த மருந்தை அரை நாளளவு அரைப்பாய். இன்னும் அழகாகச் சொல்வேன் கேள். இப்பூமண்டலத்தில் காட்டிடங்களில் தங்கி யிருக்கப்பட்ட வேங்கைமரத்தின் சாற்றினால் மேலும் வேகமாக அரைநாளரைப்பாய். பின்பு காட்சியோடு கல்வத்திற் பொருந்திய மருந்தைக் கடுகளவும் கல்வத்திலில்லாமல் வழித்தெடுத்துக் கொள்ளக்கடவாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: இது என்னும் பதத்திற் சேர்ந்த முன்னெழுத் தாவது (இ.) குண்டு என்னும் பதத்தில் முதலெழுத்தை நீக்கிவிட நின்றவை (ண்டு.) இவற்றை ஒன்றாகச்சேர்க்க (இண்டு) என்றானது. இது காட்டுச் செடிகளில் ஒன்றாகும். இதன் சாற்றையே வேங்கையிலைச் சாற்றிற்கு முன் விட்டரைக்க வேண்டியது. 83

வேறு வண்ணச்சந்த விருத்தம்

வழியதை வடிவுட னறிந்து
வயங்கிய வோட்டினிற் பொதிந்து
மொழியுமுன் சீலைமேற் பொதிந்து - கனமாக
கழியதில் முனம்போற் செறித்துக்
கைம்முழ மெனும்புடம் புரிந்து
கன்லுறு நடுவினிற் பதிந்து - அமர்பின்னர்
நழியுறு கவசமே தடிந்து
நடுவுறு மருந்ததைத் தெளிந்து
தணிவுட னெடுவனஞ் சிவந்து - தெளிவாகும்
கருமலர் கரியெனக் கரிந்து
கலகல வெனத்தொனி புரிந்து
அணியுறு கழியினி லுறைந்த - மிகுவீரன்

இதில் ஒரு புடமும் மற்றொரு அரைப்புஞ் சொல்கின்றார்.

(இ-ள்.) முன்பாட்டிற் கூறியபடி அழகோடு அறிந்து வழித்தெடுத்த மருந்தை பிரகாசித்த ஓட்டிற்சேர்த்து முன் சொன்னபடி மேலே சீலைசெய்து கனம்பொருந்தும்படியாக முந்தின கிரமப்படியே களிமண்ணைச் சேர்த்துக் கவசித்து ஒரு முழம் என்று சொல்லப்பட்ட

புடம் சித்தப்படுத்திக் கவசத்தை நடுவே சேர்த்துத் தீமூட்டி யெரிந்தடங்கிய பின் குளிர்ச்சி பொருந்திய அக்கவசத்தைப் பிரித்து நடுவே யிருக்கப்பட்ட மருந்தை ஆராய்ந்தெடுக்கக் கடவாய். அப்போது அந்த மருந்தானது சிவந்த நிறமாய்ப் பிரகாசிக்கும். அதன்மேல் அதை மிகுந்த மலரானது கரியைப்போற் கறுத்து கலகலவெனத் தொனி புரிந்துகொண்டு அழகு பொருந்திய கானிலுரைந்த மிகுவீரன் என்னப்பட்ட ஓர் செடியானது, எ - று.

சூக்ஷுமம விளக்கம்: ஈற்றில் "கழிமலர் கரியெனக்கரிந்து கல கல வெனத்தொனி புரிந்து அணியுறு கழியினி லுறைந்த மிகுவீரன்" எனச்சொல்லியது ஓர் செடியாகும். இது (கறுப்புவட்டக் கிலுகிலுப்பை) இது இந்நூலிற் பலவிடங்களில் வந்திருப்பதனாலும் சந்தேகமற விளங்கும். இப்பாட்டின் ஈற்றில் "மிகு வீரன்," என நிறுத்தியிருப்பது அடுத்தபாட்டில் இலையென்று ஆரம்பித்திருப்பதைத் தொடர்ந்து முடிவுபெறும். அடுத்தபாட்டில் (கறுப்புவட்டக் கிலுகிலுப்பையின் இலைச்சாறு) எனச்சேர்ந்து விளக்கமாகும். இச்சாற்றினாலரைக்க வேண்டிய விபரம் அப்பாட்டிற் கூறுவார். 84

வேறு வண்ணச்சந்த விருத்தம்.

இலையி னுடங்கிச்சா றதின்முங்கித் தேயரை
யியலிரு சாமத்தே யறியூமத் தேயிலை
யினிலது முங்கிச்சாற் றினிற் றங்கித் தேயரை - யிருசாமம்
பிலனது தங்கித்தே வழிமுங்கிச் சீருடன்
பீடிய வோட்டினிநாட் டியேசீலை பூட்டிடு
பூசுமுன் வாறுபோற் சாற்றுகிறே னேசமமாய்ப்-புடந்தானே
அலமுட னங்குதே முழம்பங்கு போலவு
மணலது நீற்றபி னன்பிற் பிரித்துக்கை
யரதர வாக்கொடுநீ பார்த்துற் றேயெடு - அழகாக
நலமுடன் வெந்துதே கஞ்சிவந்துற் றானதை
நாட்டிய கல்மதிற் போட்டிடு வேதையு
நன்குற வேயினிச் சங்கையுடனறிவாய் - நினைவாக.

இதில் சில அரைப்புகளும் புடமும் கூறுகின்றார்.

(இ - ள்.) முன் பாட்டிற் குறித்த கறுப்பு வட்டக் கிலுகிலுப்பை யிலையிற்பிழிந்த சாற்றை முன் புடத்தில் செவந்திருக்கப்பட்ட மருந்தில்

விட்டு பொருந்திய இரண்டுசாமம் அரைக்கக்கடவாய். பின்பு அதை ஊமத்தை யிலைச்சாற்றிற் பொருந்தி இரண்டுசாமம் அரைப்பாய். அப்படி அரைத்தவுடன் மிகவும் பலத்தோடு அதனை வழித்துக்கொள்வாய். அதன்மேல் அதைப்பெருமைதங்கிய ஓட்டில் வைத்து முந்திய கிரமங்களின்படியே சீலைசெய்வாய். அதன்மேல்முன் சொன்னபடியே மண்கவசஞ்செய்யக் கடவாய். இனிச் சமநோக்குடன் புடம்போடும் விதத்தைச் சொல்வேன்கேள். பிரயாசத்துடனே இதற்குமுன் போட்ட ஒரு முழப்புடமாகும்.. இவ்வாறு புடம்போட்டுத் தீயெரிந்தமர்ந்தபின் அன்போடு புடத்தைப்பிரித்து ஆசையோடு பார்த்து அதைக்கையினாலே அழகோடு பொருந்தியெடுப்பாய். அவ்வாறெடுத்துப் பார்க்க அம்மருந்தானது நயத்தோடு சிவந்து சிவப்பு நிறத்தை மீண்டும் கல்வத்திற் போடக்கடவாய். இனிமேல் நடத்தவேண்டிய வேதைகளையும் நன்மையோடு சொல்வேன் கண்டறிந்து கொள்வாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை. 85

எண்சீர் விருத்தம்

கேளப்பா மருந்ததுவைக் கல்வத்திட்டுக்
கெடியாகக் கரந்தைச்சா றதுபிழிந்து
வாளப்பா வரைததிடுவாய் சாம மொன்று
வகையுடனே வேதைவே றியற்றக் கேண்மோ
காளப்பா கருந்துளசிச் சாற்றினாலே
கடுமையுட னரைத்திடுவாய் சாம முன்போல்
ஆளப்பா வம்மிவிட்டு மருந்து தன்னை
யடை வுடனே வில்லைதட்டி யுலர்த்து வாயே.

இதில் மற்றிரு அரைப்புச் சொல்கின்றார்.

(இ - ள்.) அப்பனே! கேட்கக்கடவாய். முன்சொன்னபடி மருந்தைக் கல்வத்திலிட்டு கீர்த்தியோடு சிவகரந்தையிலைச் சாறுபிழிந்து ஒளி பொருந்துமாறு ஒரு சாமமரைப்பாய். இனி விபரத்தோடு மற்றொரு வேதையைச் செய்யும்படியான மார்க்கத்தைச் சொல்வேன்கேள். முன் சொன்னவாறரைத்த மருந்தில் மீண்டும் ஒளி பொருந்திய கருந்துளசிச் சாற்றை விட்டு வேகத்தோடு முன்போல் ஒரு

சாமமரைத்திடுவாய். பின் மருந்தை அம்மியிலிருந்து வழித்து வில்லைதட்டி யுலர்த்துவாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை. 86

இதுவுமது

அலர்த்துகின்ற வில்லைதனை யோட்டில் வைத்திங்
கடைவாக வுட்பொதிந்து முன்போற்சீலை
நலத்தமுட னிட்டுநீ களியாற் பூசி
நன்குறவே யியற்றிடுவாய் புடமுன் போலே
வலத்த முடன் வில்லைதனை மத்தி வைத்து
வடிவாகத் தீயெரித்து நீற்ற பின்பு
கலக்க மின்றிக் கையெடுப்பாய் மருந்து தானுங்
கட்டியுடன் முருக்கம்பூப் போலே தோற்றும்.

இதில் வேறொருபுடம் கூறுகின்றார்.

(இ - ள்.) முன் பாட்டிற்கூறியபடி உலர்த்திய வில்லையை ஓட்டினுள்ளே வைத்துப்பொதிந்து முன்போல் சீலைசெய்து அதன்மேற் களிமண் கவசமிட்டு நலம் பொருந்த முந்தின கிரமங்களின் படியே புடத்தைச் சித்தப்படுத்தக்கடவாய். அதற்குமேல் அந்தப்புடத்தின் மத்தியில் வலிமைபொருந்திய கையினாலே கவசத்தை வைத்து அழகாக நெருப்பை மூட்டி யெரித்து ஆறியபின் கவசத்தைக் கையிலெடுத்துப் பிரித்துப்பார்ப்பாய். அப்போது அம்மருந்தானது கட்டியாகவே முருக்கம் பூப்போன்ற நிறத்தினை யுடையதாய் விளங்கும். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை. 87

இதுவுமது

தோற்றுகின்ற மருந்தினருஞ் சூட்சந்தன்னைச்
சொல்லரிது சொல்லரிது தேசத்தாரே
ஏற்றுகின்ற தாம்பூர மிருநூற்றி லொன்றை
யிட்டிடுவீ ரிக்குருவி லியல்பதாக
சாற்றுகிறேன் றழுக்கற்று மஞ்சளாகித்
தயங்கியே மேனி யெல்லா மியங்கி லங்க
மாற்றதுவும் பத்தெனவே மதிப்பார் கண்டீர்
மருந்துமந்தச் சாதிசம னேழ தாமே.

இதில் மேற்படி செந்தூரத்தின் வேதை சொல்லுகின்றார்.

(இ - ள்.) இத்தேசத்திற் பொருந்திய மானிடர்களே! முன் பாட்டிற்சொல்லியபடி சிவப்பு நிறமாகத் தோற்றிய செந்தூரமான மருந்தின் அரிதாகிய சூக்ஷுமத்தை சொல்வதற்கு எவர்க்கு மிக அரிதாகும். எல்லார்ராலும் உயர்த்திக் கூறப்படும் தாம்பூரத்தில் இந்தச் செந்தூரத்தை இருநூற்றுக் கொன்றைச் சேர்ப்பீர்களாக. அப்படிச் சேர்ப்பதனா லுண்டாகும் ஆச்சரியத்தைச் சொல்வேன் கேளுங்கள். அந்தத் தாம்பிரமானது களிம்பு நீங்கி மஞ்சணித்து நெளிந்து அதனுடல் முழுதும் தங்கத்தைப்போல விளங்க அதைப்பார்த்தோர் பத்துமாற்றுள்ள தங்கமென்று புகல்வார்கள். இன்னமுஞ் சொல்வேன் பார்த்துணர்வீர். இங்கு சொல்லிய பத்து மாற்றுத் தங்கத்தையும், இயற்கைத் தங்கத்தையும் சமனாகக் கூட்ட ஏழுமாற்றுள்ள தங்கமாகும்.

சூக்ஷும விளக்கம்: இந்தச் செந்தூரத்தைத் தாம்பிரத்தில் இருநூற்றுக் கொன்று சேர்த்தால் அந்தத்தாம்பிரம் பத்து மாற்றுள்ள தங்கமாகும். அந்தப்பத்து மாற்றுத்தங்கத்தையும் இயற்கைத் தங்கத்தையும சமனாகச் சேர்த்தால் ஏழு மாற்றுத்தங்கமாகும். இந்த முறை எல்லோர்க்கும் உபயோகப் படுவதாதலின் "தேசத்தோரே" என்று உலகத்தவரை முன்னிலைப் படுத்திக் கூறினார். 88

இதுவுமது

ஏழென்ற மருந்துதன்னை நவலோ கத்தி
லிங்குநவில் வாறதுபோ லீய்வாய் காளை
கோளென்ற கல்மிசங்க ளகன்று யோகிக்
கொள்கையுடன் மஞ்சணித்துக் குலப்பேரற்று
வாழவே யெழில்மாசை யாகுங் கண்டாய்
வயதுதுவு முன்னவின்ற வாறே யாகும்
தாழுடைய சாதிசம னாறே யாகுஞ்
சாற்றாதே யிக்கருவைத் தனுசர்க்கன்றே.

இதில் வேறொரு வேதை சொல்கின்றார்.

(இ - ள்.) முற்பாட்டிற் கூறியபடி ஏழுமாற்றான தங்கத்தை நவலோகங்களிலும் இங்குச்சொன்னபடி சமன் சேர்த்துருக்குவாய். காளைபோன்ற மாணவனே! அவ்வாறு செய்வாயானால் அந்த நவலோகங்களும் பொய்யாகிய அழுக்கு நீங்கப்பெற்று

நல்லகொள்கையோடு மஞ்சள் நிறத்தையடைந்து தத்தம் குலத்தினது தன்மை நீங்கி அழகு பொருந்திய பொன்னாகும் அறிவாய். இவ்வாறாகிய பொன்னிற்கு முந்தினபாட்டிற் கூறியபடி மாற்றுப் பத்தாகும். இந்தப்பத்து மாற்றுத் தங்கத்தோடு இயற்கைத் தங்கத்தைச் சமன் சேர்க்க முன் குறித்தபடி ஆறுமாற்றுள்ள பொன்னாகும் இந்தக் கருவைப்போன்ற மருந்தை உலகத்தவர்க்குச் சொல்லிவிடாதே. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை 89

வேறுசந்தச் செய்யுள்.

இந்தினில் தந்திரம் விந்தை மருந்ததை
நந்தனு வேநாலு நூற்றொன் றேயிடு
சுந்தர மாயது வந்த வயதுவும்
பந்திய..............................
மந்திர மாங்கெவு னத்தின்முன் வறுபோ
லெந்திர மாமிது கண்டறி காளைநீ
சுந்தர மாகவே வேறினிச் சொல்லுவேன்
அந்தர மாகவே புந்தியுட் கண்டுநீ யறிவாயே.

இதில் வேறு வேதையும் முடிவுஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) இன்னும் இந்த மருந்தில் இப்புத்தகத்தின் முதற்காண்டத்திற் சொன்ன தந்திரமும் ஆச்சரியமும் பொருந்திய மருந்தாகிய அந்த செந்தூரத்தை நானூற்றிற்கொன்று சேர்த்து நவலோகங்களிலுமிட அவை அழகு பொருந்திய தங்கமாகும். அந்தத் தங்கத்திற்குச் சேர்ந்தவயது பதினொன்றென்று சொல்வார்கள். இந்தப்படி செய்யும் முறையானது மந்திரம் பொருந்திய கெவுன மணியைப்போன்ற வுயர்வு பெற்றதாகும். இளம் பருவத்தை யுடைய மாணாக்கனே! இனி, வேறொரு முறையைச் சொல்லுவேன். அதை உன் புத்தியினாலே கண்டு தெளிவாய். எ - று.

சூக்ஷுமம விளக்கம்: அந்த செந்தூரத்தை நானூற்றிற்கொன்று சேர்ப்பதினால் இந்தச் செந்தூரத்துக்கு எந்த லோகங்களையும் பதினொருமாற்றுத் தங்கமாக்கும்படியான தத்துவமுண்டாகும். இவ்விதம் அந்த செந்தூரத்தைச் சேர்த்துச்செய்யும் வேதையானது சிறந்ததென்பதைக் குறிப்பிடற் பொருட்டே இது கெவுனமணியைப் போன்ற உயர்வு பெற்றதாகும் எனக் கூறினார். 90

வேறு தனிமுறைச் செந்தூரம்.

வண்ணச்சந்த விருத்தம்

நாலது முனமுன்னடு தொடர்ந்து
நன்னுபின்னு முதற்கடை நயந்து
வேல்விழிபோ னிறையெனத் தெரிந்து - அறிவாயே
பாலடுவா யெனமுன்னம் பகர்ந்த
பண்புதனிற் கிளிநிறை பகர்ந்த
சூன்மழை சோனையி லுதிர்ந்தோ - னினையாமே
தாலமுஞ் சவுமிய விந்திற்
றாக்கிடுவா யிருசமன் கெந்தி
வேலையுறு முன்சொரியி லொன்று - வியனாக
கூலமுறு குலிகமில் ரண்டு
கூறுமெவட் சாரமது வொன்று
ஆலமய மிழுப்பவன் மூன்றிங் - கெடுகாளை.

இதில் சில சரக்குகள் கூறுகின்றார்.

இதில் முதலிற் சொல்லியிருக்கிற சரக்கு துருசு. இதன் நிறை "வேல்விழிபோல்" என்றதனால் இரண்டென விளங்குகின்றது இரண்டாவது சொல்லியிருக்கிற சரக்கு பாஷாணம். அதனிறை கிளிநிறை என்றதனால் ஐந்தெனப் புலப்படுகின்றது. மூன்றாவது சொல்லியிருக்கும் சரக்கு இந்திரகோபம். இதன் நிறை இரண்டு, நாலாவது சவுமிய விந்தென்று சொன்னது இரசம், இதன் நிறை இரண்டெனத் தெரிகிறது. ஐந்தாவது சொன்னது இதற்குச் சமனிறையாகிய கெந்தி, ஆறாவது சொன்னது பவளச்சொறி, இதனிறை ஒன்று, ஏழாவது சொன்னது ஜாதிலிங்கம், இதனிறை இரண்டு, எட்டாவது சொன்னது எவட்சாரம் இதனிறை ஒன்று, ஒன்பதாவது சொன்னது காந்தம். இதனிறை மூன்று.

இப்பாடலில் மேற்சொல்லியவாறு மேற்படி சரக்குகளுக்கு நாமங்கள் எவ்வாறு ஏற்பட்டதென விளங்கவில்லையாதலின் இதற்கு விபரமெழுதாமல் இவ்வாறெழுதப்பட்டது. இதன் விபரத்தை, அவசியம் தெரிந்துகொள்ள விரும்பினோர் நாம் இக்காண்டத்தில் சந்தேகந்தெளிந்து கொள்வதற்காக இக்காண்டத்தில் இரண்டொரு இடத்திற் காட்டப்பட்டிருக்கும் சாமியாரவர்களிடத்தில் நேரில்போய்த் தெளிந்து கொள்ளலாம்.

வேறு சந்த விருத்தம்

எடுவிதை யேகம தாய்வி ராகனா
மியலுறு குருவிலை யாய்த்தினரை
யியற்றுமுன் வேங்கையின் சாற்றினாலுமித் - தகைபோலாம்
கடிமலர் கரிநிறம் போற்செயு நாமனாங்
கதியிலைச் சாற்றினா லாட்டு வாய்தினங்
கல்வமி லுறைமருந் தானதைவழி - கடுவன்றிக்
கெடியுடன் வில்லையா யோட்டி னுட்பொதி
கீர்த்தியு டன்கறை யான்மண் ணாலையே
யீண்டியே யெடுத்திடு சீலைதானது - முழமொன்றில்
புடமது புரியெரு வால துள்ளவே
புரியனல் போட்டு நீற்றுங் தார்த்தபின்
பொற்புறு கவசமே நீக்க வணங்கதிர் - போலாகும்.

இதில் அரைப்பும் புடமுங் கூறுகின்றார்.

(இ - ள்.) மாணாக்கனே! முற்பாட்டிற் கூறப்பட்டுள்ள சரக்குகளை யெல்லாம் விராகனெடைக் கணக்காக எடுத்துக்கொள்ளக் கடவாய். அவ்வாறெடுத்துக் கொண்டபின் அதைத் திருநீற்றுப் பச்சையிலைச் சாற்றை விட்டு ஒருநாளரைக்கக் கடவாய். அதன்மேல் முன்முறையிற் சொல்லிய வேங்கையிலைச்சாற்றிலும் அவ்வாறே அரைப்பாய். அதன்மேல் வாசனை தங்கிய மலர் கரியைப்போன்ற நிறத்தினை யுடையதா யிருக்கும் விசேஷ நாமங்கொண்ட பச்சிலையாகிய கறுப்பு வட்டக் கிலுகிலுப்பை யிலைச்சாற்றில் ஒருநாள் அரைக்கக் கடவாய். அப்படி யரைத்தபின் கல்வத்தில் தங்கியிருக்கும் அந்த மருந்தைக் கடுகளவும் விட்டு விடாமல் வழித்தெடுக்கக் கடவாய். அதன்மேல் அதை வில்லைதட்டியுலர்த்தி ஓட்டினுட்பொதியக் கடவாய். அவ்வாறு செய்து முடித்தபின் கீர்த்தியோடு கறையான் மண்ணைக் கொண்டே நெருங்கிச் சீலைசெய்வாய். அவ்வாறு செய்தவுடன் ஒரு முழத்தில் புடம் எருவால் சித்தப்படுத்தி அதனுள் கவசத்தைவைத்து நெருப்பிட்டு நீற்றாறிய பின் கவசத்தைப் பிரித்துப்பார்க்க உள்ளேயிருந்த மருந்து சூரியனைப்போன்ற நிறமுடையதா யிருக்கும்.

அறுசீர் விருத்தம்

மருந்ததைக் கல்வ மிட்டு
வயங்குபொற் றலையின் சாற்றால்
திருந்தவே யரைத்து வில்லை
செய்ததை யோட்டில் வைத்துக்
கருந்தமாய்ச் சீலை யேழு
காட்டிமுன் புடத்திற் போடு
பொருந்தெரி யமர்ந்த பின்னர்
பொற்புறு கவச நீக்கே.

இதில் மற்றொரு அரைப்பும் புடமும் கூறுகின்றார்.

(இ-ள்.) முந்தினபாட்டிற் குறித்தபடி சூரியனைப் போல் பிரகாசமுற்றிருந்த மருந்தை மீண்டும் கல்வத்திலிட்டுப் பொற்றலைக் கையாந்தகரைச் சாற்றினால் திருத்தமுற அரைத்து வில்லைசெய்து அதை ஓட்டில்வைத்து மேலோடுமூடிக் கருத்தாகச் சீலை ஏழுசெய்து முன்போற் புடம்போடக் கடவாய். பொருந்துகின்ற அக்கினியானது பிடித்தெரிந்து நீற்றுப்போன பின்பு அழகுபொருந்திய அக்கவசத்தை யெடுத்துப் பிரிக்கக் கடவாய். எ - று.

93

சூக்ஷுமம விளக்கம்: வெளிப்படை.

வேறு செய்யுள்.

வனமுஞ்செந் தளிர்போலவே வடிவாகி யிலங்கும்
கனமாகிய கல்வமதிற் கதியாகவே போட்டு
நனைதேனெழு நாவற்சுணங் கதனாலேநன் குறவே
தினமேயரை வழித்தேவில்லை திறனாகச்செய் திடுவாய்.

இதில் வேறொரு அரைப்புச் சொல்கின்றார்.

(இ - ள்.) மேற்கூறியபடி கவசத்தைப் பிரித்துப் பார்க்க அதனுள் ளிருக்கும் மருந்தானது செவந்த தளிரைப்போன்ற நிறத்தினையடைய தாகிப் பிரகாசிக்கும். அதைப் பழையபடியும் கனத்த கல்வத்திற் போட்டுத் தரையை நனைக்கும்படியான தேனொழுகப்பெற்ற நாவற்பட்டைச் சாற்றினாலே வேகங்கொண்டுஒருநாள் அரைக்கக்

கடவாய். பின்பு நன்மையானது பொருந்த அதனை வழித்தெடுத்துப் பலமாக வில்லை செய்துலர்த்தக் கடவாய். எ - று.

சூக்ஷூம விளக்கம்: வெளிப்படை. 94

வேறு செய்யுள்

வில்லையதை யோட்டினுள் விகுவுடன் பொதிந்து
நல்லியலிற் சீலையது நாட்டிடுவா யேழு
சொல்லிய புடமதிலே சூளையிட்டுப் பார்க்கில்
கல்லியல் முருக்கின்வன மாகவெழில் காணும்.

இதில் புடமொன்று கூறுகின்றார்.

(இ - ள்.) மேலே சொல்லியபடி செய்தவில்லையை ஓட்டிலே பலமாகப் பொதிந்து நல்ல பொருத்தத்தில் ஏழு சீலை செய்வாய். அதன்மேல் முன்சொல்லியவாறே புடமிட்டு அதில் நெருப்பிட் டெரிந்தடங்கினபின் எடுத்துப்பார்க்க அந்த மருந்தானது நல்ல முருக்கம் பூப்போன்ற நிறத்தோடு அழகு பெற்று விளங்கும். எ - று.

சூக்ஷூம விளக்கம்: இந்தப்புடத்தில் மேற்கண்ட மருந்தானது முருக்கம்பூப் போன்ற செந்தூரமாகும். 95

கலி விருத்தம்.

தாம்பு ரத்திற் றயங்கு மருந்ததை
யீம்பு ரத்தி லிருநூற்றி லொன்றெனக்
கோம்பு ரத்திற் கொடுக்க வுழன்றது
மாம்பு குத்த வயது பணிரண்டே.

இதில் மேற்படி செந்தூரத்தின் வேதை சொல்கின்றார்.

(இ - ள்.) மேற்குறித்தபடி பிரகாசிப்பதாகிய மருந்தை தாம்பிரத் திலே இருநூற்றிற்கொன்று கொடுக்க அது உருகிச் சிறப்புப்பொருந்திய பணிரண்டு மாற்றுள்ள தங்கமாகும். எ - று.

சூக்ஷூம விளக்கம்; வெளிப்படை. 96

வேறு செய்யுள்.

நவலோ கமிநாட் டிடுவாய் மருந்தை
அவமா கவேமுன் னியல்வா றதுபோல்

கவமா கவேசொன் னமினன் னயமாய்
பவமாய் வயதும் பதினொன் றென்பார்.

இதில் மற்றொரு வேதை கூறுகின்றார்.

(இ - ள்.) இன்னும் இந்த மருந்தை முன்பாட்டிற்.................. ஒவ்வொரு வகையாலும் இரு நூற்றிற்கொன்று கொடுத்தூதக் கடவாய். அவ்வாறு செய்தால் சுயமாகவே அவை சுவர்ணம் போலாகும். இதற்கு மாற்று பதினொன்றென்று சொல்வார்கள். எ - று.

சூக்ஷூம விளக்கம்: வெளிப்படை. 97

இதுமுதல் இந்நூலில் வரப்பட்ட முறைகட்கு இன்றியமையாத தாகிய சொர்ண வயிரவதியானத்தைச் சொல்லி இந்நூலை முடிக்கின்றார்.

சுவர்ண வயிரவ தியானம்

கொச்சகக் கலிப்பா.

சீதநல மாசைவிளை வுறுதானஞ் செறிகின்ற
பூததிர ளொடும்பொன்னின் வயிரவா பிழைசெய்யா
ஆதியரு ளியசவுமி யமுறையீ தாமென்ன
ஓதிய திரிசங்கங் ஙங்கெனவே யுரைப்பாயே.

இந்தப்பாட்டு இப்படியே எடுத்துச்சரிக்கவேண்டிய தாதலின் இதற்கு உரையெழுதப் படவில்லை. 98

அறுசீர் விருத்தம்

இங்க நவிலுஞ் செயுடனையே
யிஙைல்பாய் மனத்தில் வரப்படுத்திச்
சங்கையுடனே தைப்பூசந்
தன்னி லிரவிற் கடிகை யைந்தில்
பொங்குங் கதலிப் பழம் பத்து
புகழுந் தேங்காய் மூன்றுடனே
தங்குங் கமுகு தாம்பூலஞ்
சாம்பி ராணி லிம்பழமாம்.

இதில் வயிரவ தியானத்திற்கு வேண்டிய நிவேதனப்பொருள்கள் கூறுகின்றார்.

(இ - ள்) இதற்கு முன்சொல்லிய "சீத நலமாசைவிளை" என்ற செய்யுளைப் பொருத்தத்தோடு மனத்தில் பாடமாக்கிக் கொண்டு மேன்மையோடு தைப்பூசத்தன்று இராத்திரி ஐந்து நாழிகைக்கு திரண்ட வாழைப்பழம் பத்து, புகழ்ச்சி பொருந்திய தேங்காய் மூன்றுடனே தங்குகின்ற பாக்கு, வெற்றிலை, சாம்பிராணி எலுமிச்சம்பழம் ஆகிய, எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: ஆகிய என்று நிறுத்தியிருப்பது அடுத்த பாட்டோடு சேர்ந்து முடியுமெனறிக. 99

வேறு அறுசீர் விருத்தம்

இவ்வகைப் பதார்த்த மெல்லாம்
வகைதனி லிருபத் தொன்று
கவ்வியே முன்பு வைத்துக்
கவலுரு விருநூற் றொன்று
செவ்வையாய்ச் செய்யு டன்னைச்
செப்பியே யுருப்போ டன்பாய்
நவ்விய வகைவே றிங்கு
நவிலுவேன் மாணாக் காகேள்.

இதில் உருப்போடும் விதஞ் சொல்கின்றார்.

(இ - ள்.) இந்தவகைப் பதார்த்தங்களை யெல்லாம்வகையில் இருபத்தொன்று வைத்து உச்சரிப்பதாகிய உரு மேற்குறிப்பிட்ட செய்யுளைச் சொல்லி இருநூற்றொன்று அன்போடு செபிக்கக் கடவாய். (இவ்வாறு செய்யின் சுவர்ண வயிரவானுக்கிரக முண்டாகும்) மாணாக் கனே! இனிவேறொரு வகையுஞ் சொல்வேன் கேட்பாய். எ - று.

சூக்ஷ்ம விளக்கம்: இப்பாட்டிற் குறிப்பிட்ட நிவேதனப்பொருள் முதலியவைகளுள் இருபத்தொரு வகைப் பொருள்கள் சேர்த்துச் சொர்ண வயிரவனுக்குச் சமர்ப்பித்து "சீதநலமாசை விளை," என்றபாடலை இருநூற்றொருமுறை உச்சரித்து உருப்போடவேண்டும். இவ்வாறுசெய்து முடித்தால் அந்த வயிரவனது அனுக்கிரகமுண்டாகும். இந்தத் தியானம் இந்நூலில் சொல்லப்படும் ஒவ்வொரு முறையையும் செய்யத் தொடங்குங் காலத்திலெல்லாம் நிறைவேற்றத் தகுந்ததாகும். இது அடுத்த பாட்டால் விளங்கும். 100

இதுவுமது

மதாமத சவுமி யத்தின் மவுல்கின்ற முறைக டோறும்
புதாமுடன் புடமுருக்கும் புரியுமப் போதையெல்லாந்
திதாமுறுஞ் செய்யு டன்னைச் செப்பிடு தடவை யொன்று
சதாசிவ னருளிச் சொன்ன சவுமிய முற்றும் வாழி.

இதில் மேற்கண்ட தியானத்தின் மற்றொரு விசேஷமும் நூல் முடிவுங் கூறுகின்றார்.

(இ-ள்.) எல்லா மதமும் ஒப்புக்கொள்ளத்தக்க வொரு முறைகளிலும் புதுமையாகப் புடம்போடும் போதும், லோகம் முதலியவைகளை உருக்கும்போதும் மேற்கூறிய தியானச் செய்யுளை ஒவ்வொறுமுறை உச்சரிக்கக் கடவாய். சதாசிவ மூர்த்தி திருவாய்மலர்ந்தருளிய இலக்கசௌமிய சாகரமென்னும் நூலானது இதனோடு முடிவுபெற்றது. இது நீடுழிகாலம் வாழக்கடவது. எ - று.

சூக்ஷுமம விளக்கம்: மேலே சொல்லியபடி வயிரவதியானத்தை முடித்துக்கொண்டு பின் இந்த நூலிற் சொல்லிய முறைகளைச் செய்யத் தொடங்கிப் புடம் போடுதல் உருக்குதல் முதலியவற்றைச் செய்யும்போது மேற்கண்ட செய்யுளை ஒவ்வொருமுறை பக்தியோடு உச்சரித்துக்கொண்டு செய்யவேண்டும். இவ்வாறில்லையானால் ஒன்றும் பலிக்காது. ஆதலால் ஒவ்வொருவரும் இவ்வாறே செய்க.

தெய்வானுக் கிரகத்தைக்கொண்டு இந்நூலின் தெளிவுரையை எமக்குக் தெரிந்தவரையில் இடைவிடா முயற்சியுடன் எழுதி வெளியிட்டனம். இது இந்த மட்டிலாவது வெளிவருமாறு பேரருள்செய்த முழுமுதற்கடவுளை எல்லோரும் எப்பொழுதும் சித்தித்துத் தொழுவாராக. சுபம்.

இலக்க சௌமியசாக்ரம் தேர்ந்தெடுத்த செய்யுட்களும், தெளிபொருள் விளக்கவுரையும் முற்றுப் பெற்றன.

கடவுள் துணை

இலக்க சௌமிய சாகரம் ஒன்பதாவது பத்தாவது காண்டங்களின்

புற நடை

கனவான்களே! இப்புத்தகத்தின் மற்றகாண்டங்கள் வெளிப்பட்டு நெடுநாளாகியும் சில சந்தேகங்களையும், பல அசந்தர்ப்பங்களையும் முன்னிட்டு இந்த இரண்டு காண்டங்களும் இதுவரை வெளிப்படுத்தப்படாதிருந்து இப்போது தெய்வானுக்கிரகத்தால் கூடியவரை சந்தேக நிவிர்த்தியோடு பூர்த்திபெற்று வெளிவந்துள்ளன. அவற்றுள் சில அருமையான முறைகளும் மாந்திரீக விஷயங்களும் அடங்கியிருக்கின்றனவை

9 ஆவது காண்டம்

1. *கெவுன குளிகை.*
2. *இந்திர ஜால மை.*
3. *ஜாலவித்தை*
4. *பாதாள அஞ்சனத்திற்கும் மற்றவைகளுக்கும் உப யோகமாம் ஏகாக்ஷரமும் சத்திபீஜமும்.*

10. ஆவது காண்டம்

5. *இரசமணி*
6. *தமனியநீர்*
7. *வெள்ளைப்பாஷாணச் சுண்ணம்.*

ஆகியவைகளே. இவற்றிற்கு முறைவிபரம் முந்தின காண்டங்களில் எழுதியிருக்கும் முறைப்படி எழுதவேண்டியது அவசியமாயினும். இதிற்சொல்லப்படும் ஒவ்வொரு முறைகளும் அதிக விரிவாயிருப்பதாலும் சுருக்கியெழுத சாத்தியப்படா தாதலினாலும் இங்குச் சுருக்கி யெழுதக்கூடவில்லை. புத்தகத்தில் ஒவ்வொன்றும் மிகவிரிவாக எழுதியிருப்பதால் சந்தேகமற முறைகளைப் பார்த்துத் தெளிந்து கொள்க.

முற்றுப்பெற்றது.

அட்டவணை

தாமரை

நூலகம்